
# முரசொலி

அண்ணா மலர்

1973 ரூ 1



# காலக் கண்ணாடி

காலத்தைக் கடந்து கம்பீரமாக நிற்கின்றன, தாஜ் மஹால் போன்ற கவின்மிகு கட்டடங்கள். காலம் பதித்துச் சென்ற சுவடுகளை நாம் அவற்றைக் கண்டதும் எளிதாக அறியமுடிவதில்லை. வனப்பு மிகுந் திருப்பினும் வாய் திறவாதவை, அந்தச் சின்னங்கள். அவற்றைவிட சாஸனங்களும் சரித்திரமுமே கால ஓட்டத்தைக் கண்ணாடிபோலத் தெளிவாகக் காட்டுகின்றன. நூல்கள் அனைவருடனும் அளவளாவுகின்றன. கடந்த காலத்தை மெய்யாகப் பேணிப் பாதுகாப்பவை, புத்தகங்களும், பிற தஸ்தாவேஜுகளுமே; சரித்திரம் எங்கு, எப்படிச் சாகாவரம் பெறுகிறது என்பதை வருங்காலத்துக்கு விளக்கிக் கூறி வழி காட்டுகின்றன, அவை.

மகத்தான நிகழ்ச்சிகள் பற்றியும், வரலாற்றை வகுக்கும் வல்லவர் குறித்தும் எழுதுவதையும் படிப்பதையும் முன்னிலும் எளிதாக்கியுள்ளது நவீனமுறைக் காகிதத் தயாரிப்பு. சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் நிறுவனம் தற்போது தயாரித்துவரும் தரமான காகிதம் அமரநிலைக்குரிய 'அந்த நாளை' ஆராய்ந்தறியப் பேருதவி புரிகிறது என்பதைக் கூறவும் வேண்டுமோ?

**சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்,**

**பள்ளிப்பாளயம், சேலம் ஜில்லா, தென்னிந்தியா**

SPB

உயர் ரகத்தைக் குறிக்கும்
வாட்டர் மார்க்



Telegrams: COTTON

Phone { Off : 216 & 321
Resi : 310 & 311
BHAVANI

# SUNDRAM SPINNING MILLS

**Post Box No. 25**

**KOMARAPALAYAM POST**

**(Via) ERODE – S. India.**

## LEADING EXPORTING MILL IN THE SOUTH

Proudly announce that their Export performance of Cotton Yarn for 1972 — 73 is Rs. 1,55,50,500/-

Country-wise Export details:

| | | | |
|---|---|---|---|
| Czechoslovakia | — | Rs. | 1,31,39,780/- |
| Poland | — | Rs. | 9,03,000/- |
| United Kingdom | — | Rs. | 7,77,520/- |
| Bangla Desh | — | Rs. | 7,30,200/- |
| | Total | Rs. | 1,55,50,500/- |

Managing Partners: J. K. K. ANGAPPAN
J. K. K. SUNDRAM
J. K. K. NATARAJAH
J. K. K. MUNIRAJAH

With The Best Compliments
from

# SATHYANARAYANA BROS
## PRIVATE LIMITED

### Engineers & Contractors

"Mandara"

25, Edward Elliots Road, Mylapore

MADRAS-4.

Phone: 812296 (5 lines)
Telex: MS. 7111.
Grams: SATHBROS.

# Trichy Distilleries & Chemicals Limited

17/4, Nungambakkam High Road, 2nd Floor
Post Box No. 3327 MADRAS-34.

Manufacturers of:

INDUSTRIAL ALCOHOL
AND
$CO^2$ GAS.

Factory at:

SENTHANNIPURAM, TIRUCHIRAPALLI-4.

Telephone: 86001/3 Lines } MADRAS.
Telex: SPIRIT MS 7180 } MADRAS.


மனதிற்கு மகிழ்ச்சி
சுவைப்பதற்கு சுகம்
ஏ.ஆர்.ஆர். சீவல்
& வாசனை சுண்ணாம்பு
விசேஷ வைபவங்கள்
விருந்துகள், திருமணங்கள்,
ஆக எல்லா நிகழ்ச்சிகளுக்கும்
சிறப்பூட்டுவது.
விபரங்களுக்கு:
ஏ.ஆர்.ஆர். சீவல் பாக்டரி
கும்பகோணம்
A.R.R. SEEVAL FACTORY,
KUMBAKONAM

பணத்தைப் போட்டு வைக்கும் மக்கள்...

# ஐஓபியிடம் முதலில் வைப்பது நம்பிக்கை.

எனவேதான் தேசியமயமாக்கப்பட்ட எல்லா பாங்குகளின் சராசரி டெபாசிட் வளர்ச்சி விகிதத்தைவிட ஐஓபியின் டெபாசிட் வளர்ச்சி விகிதம் மிக அதிகமாகவே உள்ளது.



முக்கியத்துவத் துறைகளுக்கு வழங்கும் கடன்களும் அதிகரித்துள்ளன. காரணம் அனைவர் நலனிலும் அக்கறை செலுத்துகிறது ஐஓபி. எப்போதும். மக்கள் இதை அறிவர்.

விவசாயிகள், சிறு தொழிலதிபர்கள், ஏற்றுமதியாளர்கள், கைவினைஞர்கள், தொழில் நடத்தும் தொழில் நுணுக்க நிபுணர்கள், சிறு வியாபாரிகள், டாக்டர், வக்கீல் போன்றவர்கள் பலனளிக்கத்தக்க திட்டங்களுடன் சுயமாக சம்பாதிப்போர் ஆகியோருக்கு சுலபமான வட்டி விகிதங்களில் நிதி உதவி அளிக்கிறது ஐஓபி.





சேமிக்கக் கூடியவர்கள் அல்லது சேமிக்க வேண்டியவர்களுக்கு — குழந்தைகளைப் படிக்க வைக்க வேண்டியவர்கள், பெண்களுக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டியவர்கள், விவசாயிகள், குடும்பத் தலைவிகள், தொழிலாளர்கள், வேலையிலிருந்து ஓய்வு பெற இருப்பவர்கள் ஆகியோருக்கு — பல்வேறு கவர்ச்சியான திட்டங்கள் மூலம் சேமிக்க ஐஓபி ஊக்கம் அளிக்கிறது.

இவ்வாறு முன்யோசனையுடன் செயல்படுவதுதான் ஐஓபிக்கு மக்கள் மத்தியிலே செல்வாக்கு தேடித் தந்துள்ளது.



**இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க்**

மத்திய அலுவலகம்: 151, மவுண்ட் ரோட், சென்னை 600 002

**ஐஓபி — மக்களின் அருகினில் நிற்கிறது: நாட்டின் நலனில் நிற்கிறது.**

FDS/IOB/1869 TM




அணையா விளக்கே!
அன்பின் ஒளியே!

அலை மேவும் கடலோரம் துயில்கின்ற
எம் அண்ணனே!

அணையா விளக்கே! அறிவின் ஒளியே!
நீ தந்த


அணையா விளக்காம் தி.மு.கழகமென்னும்
தீபச் சுடர் ஏந்தி,

இருட்டு மனிதர்களின் புரட்டுச் செயல்
அனைத்தும்

விரட்டி அடித்திடுவோம் —
வெற்றிக்கொடி பிடித்திடுவோம்

எம்.ஜி.ஆர்
15/9/73







# இதயத்தில் இடம் பெற்ற அண்ணா

அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன்

**"வாழ்வுக்கு ஆண்டுகளைக் கூட்டுபவர்கள் பலர். ஆனால் ஆண்டுகளுக்கு வாழ்வைக் கூட்டுபவர்கள் மிகச் சிலர்"** என்றொரு பொன்மொழி உண்டு. அந்தப் பொன்மொழிக்கிணங்கத் தமிழகத்தில் தாம் வாழ்ந்த காலத்தில் தமது அறிவுத் திறனால், ஆற்றல்திறனால், பண்பாட்டுத் திறனால் ஆண்டுகளுக்கு வாழ்வைத் தந்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆவார்கள்.

உலகில் உள்ள கோடானுகோடி மக்கள் அனைவர்க்கும் பிறந்த நாள் ஆண்டு தோறும் வந்து வந்து போகின்றன; ஆனால் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரின் பிறந்த நாள்தான் விழாவாகக் கொண்டாடப்படுகிறது. ஒருவர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், வெறுத்தாலும் வெறுக்காவிட்டாலும் வேண்டினாலும் வேண்டாவிட்டாலும், தடுத்தாலும் தடுக்காவிட்டாலும் ஒவ்வொருவருக்கும் பிறந்த நாள் வரத்தான் செய்கிறது. அது காலத்தின் கணக்கீடாகும். புத்தர் பெருமான், ஏசு பெருமான், திருவள்ளுவப் பெருந்தகையார், நபிகள் நாயகம், அண்ணல் காந்தியடிகள், தந்தை பெரியார் இராமசாமி, அறிஞர் அண்ணா போன்ற ஒரு சிலரது பிறந்தநாட்களைத்தான் சமூகத்தினர் கொண்டாடுகின்றனர். இது சமூகத்தின் மதிப்பீடாகும். காலத்தின் கணக்கீடு எல்லோருக்கும் உண்டு; ஆனால் சமூகத்தின் மதிப்பீடு ஒரு சிலருக்குத்தான் உண்டு. அந்த ஒரு சிலரில் தமிழகத்தில் தலைசிறந்து விளங்கிய ஏந்தல்தான் அறிஞர் அண்ணா அவர்கள்.

தமிழகத்தில் நல்ல தூய உள்ளம் படைத்த எல்லோருடைய இதயத்திலும் இடம் பெற்றவர் அறிஞர் அண்ணா. ஒருவன் எதையும் பெற்றுவிடலாம்; ஆனால் பிறருடைய இதயங்களில் இடம் பெறுவது என்பது அவ்வளவு எளிதான ஒன்றல்ல. தந்தையின் இதயத்தில் இடம் பெற முடியாத தனயன், தனயன் இதயத்தில் இடம் பெறமுடியாத தந்தை, அண்ணன் இதயத்தில் இடம்பெற முடியாத தம்பி, தம்பி இதயத்தில் இடம் பெற முடியாத அண்ணன், தாய் இதயத்தில் இடம் பெற முடியாத மகள், மகள் இதயத்தில் இடம் பெற முடியாத தாய் ஏன், கணவன் இதயத்தில் இடம்பெற முடியாத மனைவி, மனைவி இதயத்தில் இடம் பெற முடியாத கணவன் என்று பல பேர்களைப் பார்க்கிறோம். பொன்னையோ, பொருளையோ, பட்டத்தையோ, பதவியையோ, அதிகாரத்தையோ, ஆதிக்கத்தையோ, அச்சத்தையோ ஆத்திரத்தையோ, உருட்டலையோ, மிரட்டலையோ காட்டி ஒருவர் பிறருடைய இதயத்தில் இடம்பெற்றுவிட முடியாது.

யார்தான் பிறர் இதயத்தில் இடம் பெறுகிறார்கள் என்றால், அன்பு—அருள்—அறன் போன்ற பண்புநலன்களை உறுதுணையாகக் கொண்டு மனிதத் தன்மைக்கு யார் யார் மதிப்பளித்துத் தம் உடைமை—உடல்—உயிர் போன்றவற்றை ஈய ஆயத்தமாக இருந்து அருந் தொண்டாற்றி வருகிறார்களோ, அவர்கள்தாம் பிறர் இதயங்களில் நிறைவான இடத்தை நீக்கமறப் பெற்றிருக்கிறார்கள்.

நெப்போலியனின் வீரத்தை உலகம் பாராட்டும்; அலெக்சாண்டரின் தீரத்தைப் போற்றும்; ஐன்ஸ்டைனின் அறிவை வியக்கும்; இராசராசனின் கொற்றத்தைப் போற்றும்; சர் சி. வி. இராமனின் அறிவியலறிவை வியக்கும். ஆனால் இப்படிப்பட்டோர்களையெல்லாம் உலகம் இதயத்தில் வைத்துக் கொண்டாடுவதில்லை. புத்தர்—ஏசு—வள்ளுவர்—நபிகள் நாயகம்—காந்தியார்—அறிஞர் அண்ணா போன்ற ஒருசிலரைத்தான் உலகத்தாரும், நாட்டினரும் இதயத்தில் இடம் தந்து போற்றிப் புகழ்ந்து மகிழ்கின்றனர். காரணம் இவர்கள் எல்லோரும் மனிதத் தன்மைக்கு மதிப்பளித்து, மனிதப் பண்புகள்

வளர, மனித வாழ்வு சிறக்க அரும்பாடு பட்டவர்களாவார்கள். அறிஞர் அண்ணு அவர்களின் ஒவ்வொரு சிந்தனையிலும், ஒவ்வொரு சொல்லிலும், ஒவ்வொரு செயலிலும் மனித மாண்புக்குப் பாடுபடும் உயர்வு ஒளி விட்டுத் திகழ்வதைக் காணலாம்.

அறிஞர் அண்ணுவின் மனிதத் தன்மை மணங்கமழும் உள்ளத்திலிருந்து முகிழ்த்தெழுந்த சொற்கள்தாம் கடமை—கண்ணியம்—கட்டுப்பாடு என்பனவாகும். இவற்றின் மீது அறிஞர் அண்ணு அவர்களால் கட்டப்பட்டதுதான் திராவிட முன்னேற்றக் கழகம். தி. மு. கழகத்தின் கொள்கைகளாக அறிஞர் அண்ணு வகுத்துத் தந்தவை. சமுதாயத் துறையிலே சமத்துவ நெறியைக் காண்பதும், பொருளாதாரத் துறையிலே சமதர்ம நெறியைக் காண்பதும், அரசியலிலே சனநாயக நெறியைக் காண்பதும் ஆகும்.

- அறிவுக்கும், ஆற்றலுக்கும், உண்மைக்கும், உழைப்புக்கும் மதிப்பளிக்கும் பகுத்தறிவு நெறி பரப்பப்பட வேண்டும்.
- தமிழகத்தில் எதிலும் தமிழ் வேண்டும்; எங்கும் தமிழ் வேண்டும்.
- உலகியல் தொடர்புக்கு ஆங்கிலம் துணை மொழியாக வேண்டும்; இந்தி மொழி என்றும் வேண்டாம், எதற்கும் வேண்டாம்.
- ஏற்றத்தாழ்வற்ற முறையில் மனிதனை மனிதன் சமத்துவமாக மதிக்க வேண்டும்.
- வறியவர்களைத் தூக்கி அவர்களுக்குச் சமநிலை தந்திட வளம் மிகுந்தவர் கீழே இறங்க வேண்டும்.
- சனநாயக முறைகளோடு சனநாயகப் பண்புகளும் வளர்க்கப்பட வேண்டும்.
- மாநிலத்திலே சுயாட்சியும், மத்தியிலே கூட்டாட்சியும் மலர வேண்டும்.
- வன்முறை தவிர்க்கப்பட வேண்டும் மென்முறை வளர்க்கப்படவேண்டும்.
- போராட்டத்தைத் தேடி அலையக் கூடாது; தேடிவரும் உரிமைப் போராட்டத்திலிருந்து ஓடி ஒளியக் கூடாது.
- வெற்றிக்காக வெறிபிடித்து அலையக் கூடாது; தோல்விக்காகத் துவண்டு விழக்கூடாது.

—என்பன போன்றவைகளைக் குறிக்கோள்களாகக் கொண்டு நம்மையெல்லாம் நடைபோடச் சொன்னவர் அறிஞர் அண்ணு ஆவார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கட்டிக் காத்து வளர்க்க அறிஞர் அண்ணு நம்மையெல்லாம் கூவி அழைத்தார்; நாமெல்லோரும் கூடி நின்றேம்; கழக வளர்ச்சிக்காகக் கண்ணீரும் செந்நீரும் சிந்துவதைக் கற்கண்டாக மதித்தோம். இன்னல்களும் இழப்புக்களும் ஏற்பதை இன்னமுதாகக் கொண்டோம்; தொல்லைகள் துயரங்களைத் தாங்குவதைத் தேன் எனக் கொண்டோம். கல்லடி சொல்லடி ஏற்பதைக் கட்டிக் கரும்பெனக் கருதினேம். இவற்றின் விளைவாக நாட்டில் நல்லாட்சியை அமைத்தவர் அறிஞர் அண்ணு. இப்பொழுது அறிஞர் அண்ணு மறைந்துவிட்டாலும், அவருடைய பெயரையும், புகழையும் அவர் கூறிய அறிவுரைகளையும், அவர் காட்டிய நெறிமுறைகளையும் நாம் மறக்கவில்லை.

அறிஞர் அண்ணு கண்ட கழகத்தைக்
காப்பாற்றுவதில்—

அவர் அமைத்த அரசை நடத்திச்
செல்லுவதில்—

அவர் தந்த இருவண்ணக் கொடியை
ஏற்றுவதில்—

அவர் காட்டிய உதயசூரியன் சின்னத்தைப்
போற்றுவதில்

கண்ணுங் கருத்துமாக இருந்துவருகிறேம். இனியும் தொடர்ந்து இருந்து வருவோம் என்பதுதான் நாம் ஒவ்வொருவரும் அவரது பிறந்த நாளில் எடுத்துக் கொள்ள வேண்டிய சூளுரையாகும்.

அறிஞர் அண்ணு அவர்கள் கழகத்தின் கருத்தை வளர்க்கக் கலையின் கவர்ச்சியைத் துணைக்கு அழைத்தார். கருத்தைக் கருப்பொருளாகவும், கவர்ச்சியைக் கருவியாகவும் பயன்படுத்தினர். கழகத்தை வளர்க்கக் கலையைக் கருவியாகக் கொண்டார். ஆனல் கழகத்தில் நம்மையறியாமல் புகுந்துவிட்ட புல்லுருவி ஒன்று, தன் கலையை வளர்க்கக் கழகத்தைப் பயன்படுத்திக் கொண்டு வந்தது. இப்பொழுது அந்தப் புல்லுருவி கழகத்தை அழிக்க தன் கவர்ச்சியைப் பயன்படுத்தப் பார்க்கிறது.

இப்பொழுது கருத்து அரசியலுக்கும், கவர்ச்சி அரசியலுக்கும் போட்டி ஏற்பட்டிருக்கிறது. அறிஞர் அண்ணுவின் வழிநடக்கும் கருத்து அரசியலுக்கும், நடிகரைத் தலைவராகக் கொண்ட கவர்ச்சி அரசியலுக்கும் ஏற்பட்டிருக்கும் மோதுதலில் இறுதியில் கருத்து அரசியல் வெற்றிபெறும் என்பது உறுதி. காரணம் அண்ணுவின் கழகத்திற்கு

அடிப்படை வலிவு கருத்து;நடிகரின் கட்சிக்கு அடிப்படை வலிவு கவர்ச்சி. கருத்து, தி.மு. கழகத்தினர் அனைவரிடமும் காணப்படுகின்ற ஒன்று; ஆனால் 'கவர்ச்சி' தனி நடிகர் ஒருவரிடம் மட்டுமே காணப்படுவதாகும். கருத்து கொடுத்து வளருகின்ற ஒன்று; ஆனால் கவர்ச்சி கொடுக்க முடியாத ஒன்று. கருத்து தலைமுறை தலைமுறையாகக் கைமாறும்; ஆனால் கவர்ச்சி நடிகரோடு சேர்ந்து மறைந்து விடும். இறுதியில் கவர்ச்சியைக் கருத்து வென்றிடும் என்பது உறுதி.

அறிஞர் அண்ணா கண்ட கழகத்தை அழிக்க முயலுபவனும், அண்ணா அமைத்த அரசைக் காட்டிக் கொடுக்க இசைபவனும், அண்ணா தந்த கொடியை மாற்றுபவனும், அண்ணா காட்டிய உதயசூரியன் சின்னத்தை ஒழிப்பவனும் படு துரோகியாவான் என்பதை மறந்துவிடலாகாது.

நாம் எந்த வகையிலும், வழியிலும் மாறவில்லை; ஆனால் எல்லா வகையிலும், எல்லா வழியிலும் மாறியவர்கள் நம்மை எதிர்க்கிறார்கள். மாறாத நாம் அண்ணா பிறந்த நாளில் அவர் பெயர் நினைந்து, அவர் புகழ் நினைந்து, அவர் கொள்கை நினைந்து

''துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை''

என்ற முறையில் பணி ஆற்றிடுவோமாக!
வாழ்க அறிஞர் அண்ணாவின் புகழ்!

* * *


# சிமெண்ட் உபயோகிப்போர் கவனத்திற்கு

* தமிழ்நாட்டில் சமீபத்தில் அமுலில் இருந்த மின்வெட்டு, சிமெண்ட் உற்பத்தியையும், விநியோகத்தையும் பாதித்துள்ளது. இதனால் அங்கீகாரம் பெற்ற ஸ்டாக்கிஸ்டுகள் உங்கள் சிமெண்ட் தேவையை உடனடியாகவும் – முழுமையாகவும் நிறைவேற்ற இயலாத நிலையில் இருக்கிறார்கள். இதன் விளைவாக உங்கள் அவசரத் தேவையை முன்னிட்டு, அங்கீகாரம் பெறாத விற்பனையாளர்களிடமிருந்து நீங்கள் சிமெண்ட் வாங்க முற்படலாம். இதனால் நீங்கள் நிர்ணயித்த விலைக்குமேல் கொடுப்பதுடன், கலப்பட சிமெண்ட் வாங்கவும் நேரிடலாம்,
* உங்கள் நலனை முன்னிட்டு, எப்போதும் அங்கீகாரம் பெற்ற ஸ்டாக்கிஸ்டுகளிடமிருந்தே சிமெண்ட் வாங்கும்படி கேட்டுக் கொள்கிறோம். அங்கீகாரம் பெற்ற ஸ்டாக்கிஸ்டுகளிடம், தயாரிப்பாளர்களால் அளிக்கப்பட்டுள்ள ஸ்டாக்கிஸ்ட் சர்டிபிகேட்டும், விலைப்பட்டியலும் உள்ளன. அங்கீகாரம் பெற்ற ஸ்டாக்கிஸ்ட்டுகள் சிமெண்ட் வாங்குபவர் ஒவ்வொருவருக்கும் அவரவர் வாங்கிய சிமெண்ட் அளவு, விலை இவை குறித்துள்ள காஷ்மெமோ அல்லது பில் கொடுப்பார்கள்.
* உங்கள் தேவையை ஸ்டாக்கிஸ்டுகள் உடனுக்குடன் பூர்த்திசெய்ய முடியாவிட்டால் உங்கள் தேவைக்கு அவர்களிடம் முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள். அவர்களும் அதே வரிசைக்கிரமமாக உங்கள் தேவையைப் பூர்த்தி செய்வார்கள்.

அங்கீகாரம் பெற்ற ஸ்டாக்கிஸ்டுகளிடமிருந்து அசல் சிமெண்ட்டை நிர்ணயித்த விலைக்கே பெறுங்கள்:

**பொதுமக்களின் நலனை உத்தேசித்து வெளியிட்டோர்:**

இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்,
175–1 மவுண்ட்ரோடு,
சென்னை–2.

SANKAR I C CEMENT

சங்கர் சிமெண்ட்

# ‘சிறிய பெரிய கார்’

# ஸ்டாண்டர்ட்

# காஸல்




## அதிக இட வசதியும் அழகான அமைப்பும் கொண்டது




பெரிய கார்களைப் போலவே அதிக இட வசதியும், சௌகரியமும் அமைந்த சிறிய கார்களைத் தயாரிக்க வேண்டுமென்பதுதான் ஸ்டாண்டர்ட் மோட்டார் பிராடக்ட்ஸ் ஆப் இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் விருப்பம். இது நிறைவேற முடியாத விருப்பமா என்ன? இல்லை என்பதை இங்கே நிரூபித்துக் காட்டுகிறோம்:

ஸ்டாண்டர்ட் மோட்டார்ஸ் பெருமையுடன் அளிக்கும் **ஸ்டாண்டர்ட் காஸல்** ஒரு புதுமைப் படைப்பு. அது ஒரு சிறிய பெரிய கார். காஸல் காரின் சிறப்பு அம்சங்கள் இதோ!




**அதிக இட வசதி:** முன்புறத்திலும், பின்னாலும் முழு பெஞ்ச் ஸீட்; 5 அல்லது 6 பேர் தாராளமாக உட்காரலாம்.

**அதிக சௌகரியம்:** கால் வைத்துக் கொள்ள நிறைய இடம்; சுலபமாக ஏறவும் இறங்கவும் வசதி; திருத்தி யமைக்கப்பட்ட பின்புற சஸ்பென்ஷன்.

**அழகான அமைப்பு:** எழில் கொஞ்சும் தோற்றம்; பியானோ-கீ ஸ்விட்சுகள் அமைந்த டாஷ்-போர்ட்; புதிய, கவர்ச்சிகரமான கிரில்.

**எங்கள் விநியோகஸ்தர்களின் ஷோரூமில் காஸல் காரைப் பார்வையிடலாம்.**




**ஸ்டாண்டர்ட் மோட்டார் பிராடக்ட்ஸ் ஆப் இந்தியா லிமிடெட், சென்னை**

FDS/SM-1836 TM

விநியோகஸ்தர்கள் :

**தி யூனியன் கம்பெனி (மோட்டார்ஸ்) பிரைவேட் லிமிடெட்,**

**29, அண்ணாசாலை, சென்னை-600002.**

# அண்ணாவின் நினைவுகளிலே...



## அமைச்சர் என்.வி.நடராசன்

ஒரு வீட்டில் இருப்போர் இருவருக்குள் கருத்து வேறுபாடு ஏற்படுகிறது என்ருல்—அதைச் சாதகமாக்கிக் கொண்டு அடுத்த வீட்டுக்காரனே எதிர்வீட்டுக்காரனே ஜெயிக்கவிட்டுவிடக் கூடாது.

அதுதான் முறை. சாமர்த்தியம்.

இதைவிட்டு வெளியே போய் விடுவதும், அப்படியொரு தவறுக்கும் காரணமாக இருந்துவிட்டு "விட்டேனு பார்," என்று வீட்டுக்குள்ளிருப்பவரை வீதிக்கு இழுத்துவிட நினைப்பதும் வெற்றிக்கு அறிகுறியாகாது.

அப்படி வீரம் பேசுவோர் நாட்டினரின் நகைப்பிற்கே ஆளாவர் என்பதை நடப்பில் காண்கிருேம்.

1946'ல் நடந்த ஒரு சம்பவத்தை இங்கே குறிப்பிடுவது சுவையாக இருக்கும்.

அண்ணு அவர்கள் திராவிடர் கழகத்தின் பொதுச் செயலாளராகவும் நான்சென்னை மாவட்ட அமைப்பாளர்கள் நால்வரில் ஒருவனுகவும் இருந்த நேரம்.

"திராவிடர் கழகத் தொண்டர் ஒவ்வொருவரும் 24 மணி நேரமும் கறுப்புச் சட்டைதான் அணிய வேண்டும். வேறுசட்டை அணியக் கூடாது. நம்முடைய படை கருஞ்சட்டைப் படையாகத் திகழ வேண்டும்" என்று தந்தை பெரியார் அவர்கள் சொன்னுர்கள்.

நாங்களெல்லாம் அதற்குக் கட்டுப் பட்டோம். ஆனுல், அண்ணுவோ அதுபற்றிப்பேசித் தீர்மானிப்பது நல்லது என்ருர். "என்ன பேசணும்?" என்ருர் தந்தை பெரியார்.

"கறுப்புச் சட்டை அணிய வேண்டும் என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனுல் எல்லோரும், எல்லா நேரமும் கறுப்புச் சட்டையுடன் இருக்கவேண்டும் என்றில்லாமல்—கழகத்தின் முக்கிய நிகழ்ச்சிகளின் போது எல்லோரும் கறுப்புச் சட்டையோடு வர வேண்டும் — கழகப் பேச்சாளர்கள் கறுப்புச்சட்டை இல்லாமல் மேடை ஏறக் கூடாது என்பதுபோல் முறை வைத்துக் கொள்வது நல்லது என்று நினைக்கிறேன்" என்ருர் அண்ணு.

தந்தை பெரியார் அவர்கள் இதற்குச் சம்மதிக்கவில்லை.

இதனுல் அண்ணு அவர்கள் வருத்தமுற்று கழக நடவடிக்கைகளில் சரிவர ஈடுபடாமலிருந்தார். கிட்டத்தட்ட ஏழெட்டு மாதங்கள் கழகக் கூட்டங்களில் கலந்து கொள்ளாமலேயே இருந்தார். இலக்கியக் கூட்டங்களில் மட்டுமே பேசிக் கொண்டிருந்தார்.

இந்த நிலையை நீடிக்க விடக் கூடாது என்று நானும் மற்றவர்களும் தந்தை பெரியார் அவர்களிடம் போய்ச் சொல்லிப் பார்த்தோம். அவர் அதுபற்றிக் கேட்பதாக இல்லை.

அண்ணுவிடம் போய் நீங்களாவது விட்டுக் கொடுங்களேன் என்ருேம். கூடிப் பேசி முடிவு செய்வோம் என்று நான் சொன்னதில் தவறில்லை என்று கூறிவிட்டார்.

தந்தை பெரியார் அவர்களுக்கும் அண்ணு அவர்களுக்கும், இருந்த இந்த மனக் கசப்பை வைத்து திராவிடர் கழகமே பிளவுபடப் போகிறது என்றெல்லாம் வெளியே பேசப் பட்டது.

இந்த நிலையில்தான் கறுப்புச் சட்டைப் படைக்குத் தடை விதிக்க அன்றிருந்த அரசு முடிவு செய்திருப்பதாக ஒரு செய்தி வந்தது. அப்போது போலீஸ் அமைச்சராக இருந்த டாக்டர் சுப்பராயன் இதில் தீவிரமாக இருப்பதாகவும் தெரிந்தது.

உடனேயே தந்தை பெரியார் அவர்கள் சென்னையில் உள்ள "மெமோரியல் ஹாலில்" "கருஞ்சட்டைப் படை" மாநாடு கூட்டினுர்கள்.

''கறுப்புச் சட்டை போடுவதையே எதிர்த்த அண்ணு இந்த மாநாட்டுக்கு வரவே மாட்டார். அவர் ஒரு பயந்தாங்கொள்ளி'' என்று அண்ணுவைப்பற்றி தந்தை பெரியார் அவர்களிடம் போய் குறைவாகச் சொன்ஞர் அண்ணுவைப் பிடிக்காத ஒருவர்.

''வராவிட்டால் போகட்டும்'' என்ருர் அவர்.

அண்ணு வராவிட்டால் கட்சி பலவீன மாகி விடும்; மற்றவர்கள் குறைத்துப் பேச இடமாகிவிடும். என்று நாங்களெல்லாம் பயந்து கொண்டிருந்தோம்.

கறுப்புச் சட்டை மாநாடு துவங்குவதற்கு அரை மணி நேரத்திற்கு முன்னுல் அண்ணு வந்தார்.

அதுவும் எப்படி? அப்போது சிலபேர் எதிர் பார்த்ததுபோல் வேறு சட்டையோடு அல்ல. கறுப்புச் சட்டையோடுதான் வந்தார். அது எங்களுக்கெல்லாம் பெரு மகிழ்ச்சியாக இருந் தது.

அண்ணு போட்டிருந்த கறுப்புச் சட்டை, அவரைவிடப் பெரிதாக, 'தொளதொள'வென் றிருந்தது. என்ன விஷயம் என்று விசாரித் தால் பிறகுதான் தெரிந்தது, அந்தச் சட்டை நாவலருடையது என்பது.

கறுஞ்சட்டைப் படை மாநாட்டில் அன் றைய தினம் அண்ணு அவர்கள் பேசிய பேச்சு கூடியிருந்த எல்லோரையும் எழுச்சி கொள்ளச் செய்வதாக இருந்தது.

''எனக்கும் தந்தை பெரியார் அவர்களுக் கும் ஏதோ மனஸ்தாபம்; அதனுல் இந்தக் கட்சியே பிளவுபட்டுவிடும் என்று யாரேனும் நினைப்பார்களேயானுல் அது வெறும் கன வாகவே முடியும். இதைவைத்து இந்தக் கட் சியை அழித்துவிடலாம் என்று யார் நினைத் தாலும், அவர்கள் படு தோல்வியே காண் பார்கள்'' என்று அன்று அண்ணு முழங்கிய அந்த முழக்கத்தை இன்று நினைத்தாலும் என் மேனி சிலிர்க்கும்.

அந்த எழுச்சி முழக்கத்திற்கு மறு நாளே — கறுஞ் சட்டைப் படைக்குத் தடை விதிப்பதாக இருந்த போலீஸ் அமைச்சர் சுப்ப ராயன் திட்டமும் அடியோடு கைவிடப்பட்டு விட்டதாக எங்களுக்குத் தகவல் கிடைத்தது.

அமைதிப் போக்கிற்குத்தான் வெற்றி கிடைக்கும்; வீணுன ஆர்ப்பாட்டங்கள் படு தோல்வியையே தேடித் தரும் எபதற்கு, இந்தச் சிறந்த உதாரணச் சம்பவத்தைப் புதுக் கட்சிக்காரர்களுக்குக் காணிக்கையாக்குகிறேன்.

பகட்டு, பதவி, படாடோபம் எதை யும் மனதில் கொள்ளாமல் பொதுத் தொண் டில் ஈடுபடுகிற அரசியல்வாதிதான் சமுதாயத் தில் பெரிதும் மதிக்கப்படுவான் என்பது அண்ணு அவர்களின் உயரிய கொள்கையாகும்.

பேரறிஞர் அண்ணு அவர்களின் இந்த உயர்ந்த தத்துவத்தை மதிக்காமல், கழக அரசைக் கவிழ்ப்போம், அரசுக் கட்டிலில் நாங் கள் ஏறுவோம் என்று வாய்கிழியப் பேசு வோரெல்லாம் அண்ணுபெயரில் கட்சிஅமைத்து அதன் அங்கத்தினர்களாகப் பவனி வருகிற வேடிக்கையையும் பார்க்கிருேம்.

அண்ணு அவர்கள், பட்டம், பதவி, பாராட்டுப் புகழுரைகளிலே எந்த அளவுக்குப் பற்றற்றிருந்தார் என்பதை ஒரு உதாரணம் காட்டி விளக்குகிறேன்.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலே ஈடு பட்டு நான் திருச்சி சிறையிலே அடைக்கப் பட்டிருந்தேன். அப்போது அஞ்சா நெஞ்சன் பட்டுக்கோட்டை அழகிரிசாமி மிகவும் உடல் நலம்கெட்டுப் படுக்கையில் இருந்தார்.

நான் விடுதலை செய்யப்பட்டபோது அண்ணு அவர்கள் வந்து என்னை வரவேற்ருர். திருச்சி தேவர் ஹாலில் எனக்கு ஒரு பாராட் டுக் கூட்டமும் நடத்தப்பட்டது.

அதில் அண்ணு அவர்கள் பேசிய பேச்சு ஒவ்வொரு அரசியல்வாதியும் மனதில் வைத்து அதன்படி நடக்க வேண்டிய அளவுக்கு முக் கியத்துவம் வாய்ந்ததாகும்.

அந்தக் கூட்டத்தில் என்னைப் பாராட்டிப் பலர் பேசினுர்கள்.

''இங்கே அளிக்கப்பட்ட போற்றுதல்களை யும், புகழுரைகளையும், பாராட்டுக்களையும் கண்டு என் .வி. நடராசன் மயங்கிவிடக் கூடாது. பொதுத் தொண்டிலே ஈடுபடுகிற வர்களுக்குப் புகழுரை என்பது அதிசய மல்ல. அதேபோல் அவர்களுடைய கடைசி காலம், மற்றவர்கள் காப்பாற்ற வேண்டிய அளவுக்குத்தான் இருக்கும். பொதுத் தொண் டில் என். வி. நடராசனைவிட மூத்தவரான பட்டுக்கோட்டை அழகிரிசாமியின் மருத்துவச் செலவுக்கு இதோ இந்தக் கூட்டத்தில் நண்பர் கள் உண்டியலேந்தி நிதி திரட்டுகிருர்கள் என் பதை என் வி. என். கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்!''

—என்று அண்ணு அவர்கள் பேசிய பேச்சு அரசியல்வாதி என்பவனுக்குரிய இலக்கணம் கற்பிப்பதாக இருந்தது.

இந்த இலக்கணத்துக்குக் கட்டுப்படாத வர்களெல்லாம் தங்களை அரசியல்வாதிகள் என் றுக் கூறித் திரிகிற விந்தையை இன்று நாம் பார்க்கிருேம்.

அப்படிப்பட்டவர்கள் கரம் தாழவும், கழக அரசின் புகழ் ஓங்கவும், முதல்வர் கலை ஞர் கரம் வலுப்பெறவும் செய்வது இந்த நாட்டு மக்கள் ஒவ்வொருவரின் கடமையாகும்.

வாழ்க அண்ணு புகழ்!

* * *



# நாங்களெல்லாம் இப்போது ஆத்திகர்கள்

குறையூர் ராஜா



சரித்திரம் பல தலைவர்களைப் படைத்திருக்கிறது;
ஆனால், எங்கள் அண்ணனே, நீயோ
ஒரு புதிய சரித்திரத்தையே படைத்தவன்!
பல அறிஞர்கள் தத்துவங்களைத்
தந்திருக்கிறார்கள்;
அந்தத் தத்துவங்களில் சில
சவக்குழியில் சங்கமமாகி விட்டன ;
ஆனால், அண்ணனே! நீயோ எங்களுக்குச்
சாகாத தத்துவமாகப் பரிணமிக்கின்றாய்!
தமிழால் பலர் வளர்ந்திருக்கிறார்கள்;
ஆனால் அண்ணனே உன்னால்
தமிழே வளர்ந்திருக்கிறது!

தாம்பூலத்தை மென்ற உனது நாவால்
தமிழ்ச் சொற்கள் வசந்தத்துப்
பூக்களாகி இருக்கின்றன!
உன்னைக் கவிஞன் இல்லை என்பவர்கள்
நீயே ஒரு கவிதை என்பதை உணராதவர்கள்;
உன்னை ஓவியன் இல்லை என்பவர்கள்
நீ, சுந்தரக் கனவுகளின் தூரிகையைத்
தமிழ்மணத்தின் சாற்றில் நனைத்து வரைந்த
சொர்க்க மகத்துவம் பெற்ற உனது
சொர்ண சித்திரங்களைக் காணாதவர்கள்;
உன்னைப் பாடகன் இல்லை என்பவர்கள்
உனது நாவால் நீ மணிவீணை நரம்புகளைத்
தடவி எழுப்பிய நாதத்தைக் கேளாதவர்கள்.
எல்லாக் கலைகளும் உனது இதயத்தைத்
தமது தலைநகராக்கிக் கொண்டிருந்தன;
அறிவுத்துறையின் எல்லாப் பாகங்களும்
உனது மூளையை
உரமாக்கிக் கொண்டு வளர்ந்தன.

தமிழ் மறுமலர்ச்சியும்

சுயமரியாதை இயக்கமும்

உனது இமாலயச் சிந்தனைகளில்

உயிர்த்தெழுந்த அமுதக் குழந்தைகள்!

ஆதிக்கக் கோட்டையைத்
தகர்த்தெறியும் பீரங்கிகள்
அதிசயமான உனது சொற்களில் இருக்கின்றன;
உனது சீதள உணர்வுகளின் கருத்தறித்த
நெருப்பு ரவைகள் அவை!
சமதர்மச் சமுதாயத்திற்கான வித்துகள்
உனது எழுத்துப் பிரவாகங்கள்!
மென்மையான
உனது ஆத்மாவின் சிறகுகளை எய்தே
வன்மையான
பல கோட்டைகளைத் தரை மட்டமாக்கிய
சாதுர்யன் நீ!
எங்கள் உணர்வுகளின் மையம் நீ!
ரத்தத்தின் சுழற்சி நீ!
நீ வழங்கிய ஞானப்பிச்சையால் நாங்கள்
சிந்திக்கிறோம்! அதனால்தான்,
கிறித்துவர் ''ஏசு ஏசு'' என்பதைப்போல்
முகமதியர்''அல்லா அல்லா'' எனபதைப்போல்
நாங்கள்
''அண்ணா அண்ணா'' எனப் பூஜிக்கிறோம்.
நாங்களெல்லாம்
இப்போது ஆத்திகர்களாகி விட்டோம்
காரணம், அண்ணனே!
நீ எங்களுக்குக் குலதெய்வமாகிவிட்டாய்!


* * *


விக்டரி மூவிஸ்
ரகுநாதனின்
தெய்வக்
குழந்தைகள்
டைரக்ஷன்: SP. முத்துராமன்



தீயினுல் பாதிக்கப்பட்ட குடிசைப்பகுதி

# கண்ணீர் மறைந்தது! களிப்பு மலர்ந்தது!



வசதிகளுடன் கூடிய புதிய குடியிருப்பு.


- ஏழைகள் வசதியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ
- பணி செய்யும் இடத்திற்கு அருகாமையிலேயே குடியிருப்புகள் அமைக்க
- விளையாட்டுத்திடல், பூங்காக்கள், நூலகங்கள், குடிநீர் குழாய்கள், மேல் நிலை நீர்த்தொட்டி முதலியன அமைக்க

இந்தப் புனிதப் பணியில் ஈடுபட்டுள்ளது
தமிழ் நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம்.


**இராம. அரங்கண்ணல், எம்.எல்.ஏ.**
தலைவர் மற்றும் உறுப்பினர்கள்,
தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்.

"காலத்தினாற் செய்த உதவி சிறிதெனும்
ஞான ததுள் மாணப் பெரிது"

என்ற வள்ளுவர் வாக்கின்படி நலிவுகண்ட "டெக்ஸ்டூலுக்கு" பொலிவுபெற வாய்ப்பளித்த அறிஞர் அண்ணாவின் தலைமையில் இயங்கிய தமிழக அரசு செய்துவரும் பேருதவியை மனதிற் கொண்டு அன்னாரை இந்த நன்னாளில் நினைவு கூர்கிறோம்.






# TEXTOOL



PIONEERS IN MANUFACTURE
OF TEXTILE MACHINERY
NOW OFFER
QUALITY MACHINERY
ON
ASSURED DELIVERY
AT
ECONOMIC PRICES


- RING SPINNING FRAMES - HIGH SPEED NARROW WIDTH & CONVENTIONAL
- WET OR DRY RING DOUBLING FRAMES 6A & 6AS
- TEXTOOL - KAMITSU R. T. CONE WINDER
- TEXTOOL - KAMITSU D. R. T. DOUBLER WINDER





TEXTOOL CO. LTD.
COIMBATORE-6 S. INDIA

TXT2/71


SIPCOT
SHOWS THE WAY
TO SUCCESS
You don't have to run after people any more to start an industry. SIPCOT is here to assist you, from the stage of planning up to the successful completion of your project.
Besides providing LIBERAL FINANCIAL ASSISTANCE, SIPCOT offers for the benefit of MEDIUM AND MAJOR Industries, a powerful package of INCENTIVES including:
1. Subsidy for feasibility studies
2. Interest-Free Sales Tax Loans
3. Developed plots with all infrastructural facilities
4. Subsidy on fixed assets in selected backward Taluks (this is available to Small Scale Industries also)
AND MANY MORE
For details please contact:
The Senior Development Officer.
STATE INDUSTRIES PROMOTION CORPORATION OF TAMIL NADU LTD.,
'Meco House'
11A/1, Anna Salai,
MADRAS-600002



"மாநில சுயாட்சியை அடைவதற்குப் பாடு படாத எவரும் என் தம்பியராக இருக்க முடியாது!"

**தி. மு.** கழகத்தைப் படைத்த பிர்மா — தமிழகத்தின் ஆட்சிப்பீடத்தைக் கைப்பற்றிய புரட்சியாளர் — தனக்குப் பின்னும் தமிழகத்தை ஆளத் தம்பியர் படையைத் தந்துபோன அமரர் — அண்ணாவின் பிறந்த நாள் செப்டம்பர் 15'ல் தமிழினத்தாரால் கொண்டாடப்படுகிறது.

அறிஞர் அண்ணா, தமிழ் மொழி வளர — தமிழினம் வாழ வழி வகுத்தார். செயல்திறன் படைத்த காளையர்களைப் படைதிரட்டி, அதனைத் தமிழினத்தின் உரிமைகளைக் காக்கும் காவற்படையாக வைத்துவிட்டுப்போனார்.

தம்முடைய எழுத்தாற்றலால், பேச்சுத் திறனால், செயல் நேர்த்தியால் தமிழகத்தின் வரலாற்றிலே தமக்கென ஒரு தனி இடத்தைத் தேடிக்கொண்டு விட்டார் அண்ணா.

சுயமரியாதை இயக்கத் தொண்டராகப் பொதுவாழ்வில் புகுந்து, நீதிக் கட்சியின் பிரச்சாரகராக வளர்ந்து திராவிடர் கழகத்தின் தளபதியாக மலர்ந்து — பின்னர், திராவிட முன்னேற்றக் கழகம் கண்டு, அதன் துணையால் ஆட்சிபீடமேறிய சரித்திர நாயகர் அண்ணா. அவரது சரித்திரம் ஒரு தனிநபரின் சரித்திரமல்ல; தமிழ் இனத்தின் சரித்திரம்!

# அண்ணா — சரித்திர நாயகர்



சிலம்புச் செல்வர் ம. பொ. சி.

ஆளுங் கட்சியாக இருந்த காங்கிரசைஎதிர்க்கட்சியாக்கி, எதிர்க்கட்சியாக இருந்த தி. மு. கவை ஆளுங் கட்சியாக்கிய அண்ணாவின் சாதனை, ஜனநாயக மறுமலர்ச்சியின் சரித்திரமாகும். இந்த அரிய சாதனையை—அரசியல் புரட்சியை அண்ணா புரிந்ததில்லையானால், தமிழகத்தில் காங்கிரஸ் கட்சியின் எதேச்சாதிகாரம்—தமிழினத்தின்உரிமைகளை பறிகொடுக்கும் துரோகத்தனம் தொடர்ந்து கோலோச்சி வந்திருக்கும். அந்தக் கொடுமையிலிருந்து தம்மை, தமிழ் இனத்தை, தமிழ் நாட்டைக் காத்த மாவீரர் அண்ணா.

மரணப் படுக்கையில் விழுந்து அவதியுற்ற நேரத்திலும், மாநில சுயாட்சி கோரும் மரண சாசனத்தை எழுதி வைத்துப் போனார் அண்ணா. அவர் எழுதி வைத்துப் போன அந்த உயில் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை.

மாநில சுயாட்சி பிறர் கொடுத்துப் பெறும் பிச்சைப் பொருளன்று; நாமே எடுத்துக் கொள்ளும் பிறப்புரிமை! அண்ணாவின் தம்பிகள், அந்த அமரரின் புகழ் பரப்ப அரும் பணி புரிந்து வருகின்றனர். நாடு முழுவதிலும் அண்ணாவின் உருவச் சிலைகள் நாட்டப்பட்டு வருகின்றன; அவை தேவைதான்! புதிய குடியிருப்புகளுக்கு, புத்தம் புதிய மேம்பாலங்களுக்கு, கல்வி நிறுவனங்களுக்கு அண்ணாவின் பெயர் சூட்டப்பட்டு வருகின்றன. அவை பாராட்டத் தக்க பணிகளே! ஆனால், இவை மட்டுமே அண்ணாவின் புகழை நிலைநிறுத்தும் சின்னங்களாகா.

அண்ணாவுக்கு அவரது தம்பிமார்கள்—ஏன், அவரைப் பெற்றெடுத்த தமிழினத்தார் அமைக்கத்தக்க அரும் பெரும் நினைவுச் சின்னம் ஒன்று இருக்குமானால், அது சுயாட்சித் தமிழகப் படைப்பு ஒன்றேயாகும். மாநில சுயாட்சியை மறுப்போரின் கரங்கள் நாளுக்கு நாள் வலுப்பெற்று வரக் காண்கின்றோம்.

அண்ணாவின் புனிதப் பெயரை அடைமொழியாகக் கொண்டு, அவர் படைத்த கட்சிக்குப் போட்டிக் கட்சி படைத்து அரசியல் நடத்தப்



"பராசக்தி" படம் இரண்டாவது முறையாக வெளியிடப்பட்டபோது படத்திற்கு வசூலான முழுத் தொகையை தீ நிவாரண நிதிக்காக தமிழக முதல்வர் அண்ணாவிடம் பொதுப்பணி அமைச்சர் கலைஞர் வழங்கினார்.

புறப்பட்டிருப்போரே, மாநில சுயாட்சியை எதிர்ப்போராக இருந்துவரும் இழி நிலையைப் பார்த்து வருகிறோம்'' தேவைப் படுவது, மாநில சுயாட்சி யல்ல; மக்கள் சுயாட்சி'' என்று புரட்டு வாதம் பேசி வருவதைக் கேட்கிறோம். இது அண்ணாவின் ஆன்மாவுக்கு குச் செய்யும் துன்பமாகும்.

திரும்பவும் சொல்கிறேன்: ''மாநில சுயாட்சி'' என்பது அண்ணா எழுதி வைத்துப் போயுள்ள மரண சாசனம். அதனை அடைவதற்குப் பாடு படாத எவரும் அண்ணாவின் தம்பியராக இருக்க முடியாது.

அண்ணா, என் அருமைத் தோழர். அவரைத் தோழராகக் கொண்டதற்காக நான் பெருமைப்படுகிறேன்.

அண்ணா, எங்கோ போய் விடவில்லை; அவர் தன் தம்பியர் வடிவங்களிலே கலந்து விட்டார். — அவர்களுடைய உணர்வுகளிலே உறைந்துவிட்டார். அண்ணாவின் பிறந்த நாள் இந்த ஆண்டிலே அவரது ஆன்மாவுக்கு ஆனந்தம் தருவதாகும். ஆம்; கைவிடப்பட்ட பூரண மதுவிலக்கைத் திரும்பவும் இந்த ஆண்டிலே தொடங்குகிறது. இது, அண்ணாவின் சமாதிக்கு அவரது அருமைத் தம்பியான கலைஞர் கருணாநிதி ஆட்சி அணிவிக்கும் வாடா மாலையாகும்.

தமிழினத்தார்க்கு எனது வேண்டுகோள் இதுதான்: அண்ணாவின் பிறந்த நாளிலே, கவர்ச்சி அரசியலுக்கு வெற்றி தருவதில்லை என்ற விரதத்தை மேற்கொள்ளுங்கள்.

சரித்திர நாயகரான அண்ணாவின் புகழ் விளக்கு அணைந்து போகாமல் காக்க இது ஒன்றே வழி!

கலைஞரின் ஆட்சி அண்ணா அவர்கள் தமிழினத்திற்குத் தந்துபோயுள்ள சொத்து. அதைக் காப்பது தமிழர் கடமை. வாழ்க அண்ணா புகழ்!

* * *



1959-ல் சென்னை மாநகராட்சியை கழகம் கைப்பற்றியது. அதற்குக் காரணமானது கலைஞரின் அயராத பணியே. இதனைப் பாராட்டி அவருடைய வலது கரத்தில் பேரறிஞர் அண்ணா அணிவித்த மோதிரம்—ஒரு வரலாற்றின் சாதனையை முத்திரையாகப் பதித்து அணிவிக்கப் பெற்றதாகும்!

புகைப் படம்: சி. என். சாமுவேல்.



# நான் அறிந்த அண்ணா!

டி.கணேசன்

நேருவைப் பற்றி எண்ணும்போதெல்லாம் அண்ணாவைப்பற்றிய நினைவுதான் எனக்கு வரும். நேருவுக்கும் அண்ணாவுக்கும் ஒற்றுமைகள் நிறைய உண்டு.

வரலாற்று நூல்கள் படிப்பதில் நேருவுக்கு நிரம்ப ஆர்வம் உண்டு. அதுபோலத்தான் அண்ணாவும். கூச்சமான சுபாவம் உடையவராக நேரு இருந்த போதிலும், அவருக்கு இருந்த மிகப் பெரிய அறிவாற்றல் மற்றவர்கள் அவரைத் தேடி வருமாறு செய்தது. அண்ணாவும் நேருவைப் போலவே கூச்சமான சுபாவம் உடையவர். அரசியலிலிருந்து அவர் ஒதுங்கி இருக்க விரும்பிய நேரத்தில்கூட, அவருடைய ஆற்றலை மற்றவர்கள் அங்கீகரித்து அவருடைய தலைமையினை விருப்பத்துடன் ஏற்றுக் கொண்டார்கள் என்பது வரலாறு.

எந்த அரசியல் அமைப்பில் இருந்தாலும் நேருவிடம் தனியான ஈடுபாடு கொண்டவனாகவே நான் இருந்து வந்திருக்கிறேன். அதுபோலத்தான் அண்ணாவிடம் நான் கொண்டிருந்த ஈடுபாடும். எனது அரசியல் நிலை மாற்றங்களால் அந்த ஈடுபாடு பாதிக்கப்பட்டதில்லை.

நேருவும் அண்ணாவும் கட்சி கடந்த பெருந் தலைவர்களாக விளங்கினார்கள். அதற்குக் காரணம் அவர்களிடம் காணப்பட்ட மிகப் பெரிய அளவிலான மனிதாபிமான உணர்ச்சிதான். நேருவைப் போலவே அண்ணாவும் மனித இனத்தை அளவு கடந்து நேசித்தார்.

''மனித இனத்தின் எந்தப் பகுதி துயரப்பட்டாலும் அதை எவன் ஒருவன் தன்னுடைய துயரமாக மதித்துச் செயல்படுகிறானோ அவனே நாகரிகமடைந்த மனிதன்'' என்றார் டாக்டர் ராதா கிருஷ்ணன். இந்திய விடுதலைக்காக நேரு போராடிய காலத்திலும், பிரிட்டிஷ்காரர்களின் நல்லியல்புகளை மனதார நேசித்தார். ஆரியத்தின் ஆதிக்கத்தை அண்ணா எதிர்த்



எழுத்துக்கு உயிரூட்டும் இதய மன்னன்

—புகைப்படம்; ரெங்கன்

தபோதும், வட நாட்டுச் சுரண்டலைச் சாடியபோதும் தனிப்பட்ட எவர் மீதும் அண்ணா குரோத உணர்ச்சி பாராட்டியதில்லை. மாறாக, அனைவரிடமும் இதயபூர்வமான அன்பு செலுத்தினார்.

தமிழகத்தில் அண்ணா கட்டிய அரசியல் இயக்கம் வெறும் கொள்கை அடிப்படையில் அமைந்த ஒன்று மட்டுமல்ல; **மனிதாபிமான அடிப்**படையில் உருவாக்கப்பட்ட மகத்தான இயக்கம் அது. அதனால்தான் வேறு எந்த அரசியல் அமைப்பிலும் காணப்படாத குடும்பப் பாசம் அண்ணா கண்ட இயக்கத்தை இறுக்கமாகப் பிணைத்து நிற்கிறது.

அண்ணாவின் மனிதாபிமான உணர்ச்சிதான் அரசியலில் அவருக்குப் பெரும் பலமாகவிளங்கி அவரை மகோன்னதமான மனித இனத் தலைவராக உயர்த்திற்று. அண்ணா மறைந்தபோது தமிழகம் வடித்த கண்ணீர் ஒரு அரசியல் தலைவனுக்காக மட்டும் வடிக்கப்பட்ட கண்ணீரல்ல; ஒரு மனிதாபிமானியின் மறைவுக்காக மனித இனமே வடித்த கண்ணீர் அது!

ஆபிரஹாம் லிங்கன், நேரு மார்ட்டீன்லூதர் கிங் போன்றவர்களின் வரிசையிலே வைத்து எண்ணத்தக்க மிகப் பெரிய மனிதர் அண்ணா. லிங்கன் நினைவுச் சிலைக்குக் கீழே ''அவர் தன்னுடைய அதிகாரத்தை இரக்கத்தின் சார்பாக அல்லாமல் வேறு எந்தச் சமயத்திலும் துஷ்பிரயோகம் செய்ததில்லை'' (He never abused his powers expect on the side of mercy) என்று எழுதப்பட்டிருப்பதைப்போல, அண்ணா எப்போதாவது தனது ஆற்றலையோ, அதிகாரத்தையோ துஷ்பிரயோகம் செய்திருப்பாரேயானால் அது இரக்கத்தின் காரணமாகச் செய்யப்பட்டதாகத்தான் இருக்கும்.

அதனால்தான் அண்ணா மறைந்தபோது கட்சி வேறுபாடு இன்றி—இன வேறுபாடு இன்றி—மொழி வேறுபாடு இன்றி அனைவரும் அவர் மறைவுக்காக நெஞ்சம் கசிந்து கண்ணீர் சிந்தினர்.

ஆபிரஹாம் லிங்கன் இறந்தபோது அவருடைய மறைவை அறிவித்த பத்திரிகை செயலாளர் லிங்கன் இறந்ததாகச் சொல்லவில்லை. ''வரலாற்றின் ஓர் அங்கமாக இப்போது அவர் ஆகிவிட்டார்'' என்று குறிப்பிட்டார்.

ஆமாம். அண்ணாவும் மரணமடையவில்லை. மனிதாபிமானிகளுக்கு மரணம் என்பது ஏது? வாழ்கின்றபோது அவர்கள் வரலாறு படைக்கிறார்கள் மறைகின்றபோது அவர்கள் வரலாற்றின் அங்கமாக மாறி விடுகிறார்கள். ஃ


Sponsored by the Government of Tamilnadu, TIIC provides financial assistance by way of loans, underwriting of shares and guaranteeing/counter-guaranteeing of loans deferred payments to industrial units in the State of Tamilnadu and Union Territory of Pondicherry. All types of Units including proprietary, partnership and joint stock companies are eligible for assistance. Special Schemes have been framed to help Technocrats and Rural Medical and Veterinary Practitioners. **Corporation gives Financial Assistance to Hotels Established or to be Established mainly for the purposes of Catering to the needs of International Tourism.** Concessional terms are offered to Units in backward areas.

The Corporation also offers **Foreign Exchange Credits** by way of loan to small and medium scale industries for import of mechinery and, in special cases, for meeting the cost of technical know-how and engineering fees. In such cases, the procedure for issue of import licences has been simplified.

**TIIC**

**The Tamilnadu Industrial Investment Corpn. Ltd.,**

**THE FINANCIAL INSTITUTION WITH A HEART**

*Head Office:* **'ARUL MANAI' 26, Whites Road, Madras.600014.**

*Branch Offices:*
THANJAVUR — 1231, South Main Street
MADURAI — 247, Naicker New Street
COIMBATORE — 'BALA NILAYAM' 6/37, Race Course Road

# அண்ணாவுக்கு அஞ்சலி




## முகம்மது அபூபக்கர் & கம்பெனி
## சங்கு மார்க்

கைத்தறி ஜவுளி தயாரிப்பாளர்கள்
95, தம்பு செட்டி தெரு, சென்னை-1.



# மாநில சுயாட்சி

## எஸ். ஜெ. சாதிக் பாட்சா
— வருவாய்த் துறை அமைச்சர்

உரிமைகள் பெற்றிட— கடமைகள் ஆற்றிட—ஆதிக்கமற்ற சமுதாயத்தை உருவாக்கிட மாநில சுயாட்சி.

1967க்கு முன் மத்திய அரசு தன்னுடன் இணைந்துள்ள மாநிலங்களை ஆதிக்கம் செலுத்த காரணமாக இருந்தது, அன்றைய அரசியல் சூழ்நிலையாகும். சுதந்திரம் பெற்ற இருபது ஆண்டுகளாக—இத்துணைக் கண்டத்தின் ஆட்சி ஒரே காங்கிரஸ் கட்சியின் கொடியின்கீழ் இருந்த காலம். ஆசியாவின் ஜோதி என அழைக்கப்பட்ட பண்டித ஜவகர்லால் நேருவின் காந்த சக்தி, இத்துணைக் கண்டமெங்கும் பரவியிருந்த காங்கிரஸ் ஆட்சியை விட சக்தி வாய்ந்தது எனக் கருதப்பட்ட காலம். எந்த மாநிலமும் (அல்லது) மாநிலத் தலைவரும் அவரின் சுட்டு விரல் காட்டும் முடிவுகளை ஏற்றுக் கொண்டிருந்த மறுக்க இயலாத காலம் அது. தட்டிக் கேட்க முடியாத அளவிற்கு மத்திய அரசு, எவ்வாறு மாநில அரசுகள் மேல் ஆதிக்கம் செலுத்தி வந்தது என்பதற்குச் சான்று பகன்ற காலம்.

திரு. ஜேம்ஸ் என்பவர் கூறுகிறார்—

"The problem of everv federation is to keep the centrifugal and centripetal forces in equilibrium, so that neither the planet states shall fly off into space nor the son of the central government draw them into its consuming fires.

"கூட்டாட்சியின் பிரச்சனையாவது, மையத்திலிருந்து விலகிச் செல்லும்—மையத்தை நோக்கி நெருங்கிச் செல்லும் சக்திகளை சமநிலையில் வைத்திருப்பதாகும். அதாவது, மாநிலங்களாகிய கோள்கள் மத்திய அரசு என்ற சூரியனிடத்திலிருந்து விலகிச்சென்று விண்வெளியில் பறந்து விடாமலும் அதே நேரத்தில் மத்திய அரசு என்ற சூரியனை நோக்கி அருகில் சென்று தீய்ந்து விடாமலும் இருப்பதாகும்.

எனவே, மத்திய அரசு, மாநில அரசுகளின் அதிகாரங்கள் உரிமைகள் பாதிக்கப்படாத அளவிற்கு நடந்துகொள்ள வேண்டுமென்பதைச் சுட்டிக் காட்டுகிறார்.

திரு. எம்.சி. செதல்வாட் அவர்களின் அறிக்கை கூறுகிறது:

"Where a single party has control over affairs at the centre as well as in the states, an alternative and extra-constitutional channel becomes available for the operation of Centre-State relations. In practice this channel has been every active during Congress Party rule and has governed the tenor of Centre State relations. The political network connecting centre and and state leadership was used amply to resolve conflict and ease tension or even to postpone consideration of inconvenient issues. In the process the Constitution was not violated at least not deliberately or demonstrably, but was often by-passed."

"தனிக்கட்சி ஒன்று மத்திய மாநில அரசுகளினுடைய பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துகிறபொழுது, மத்திய மாநில உறவுகளை இயக்கிவைக்க, மாற்றுமுறை ஒன்றும் அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு அப்பாற்பட்ட வழியொன்றும் ஏற்படும். பழக்கத்தில், இம்முறை காங்கிரஸ் கட்சி ஆட்சியின் போது மிக வெகுவாகக் கையாளப்பட்டது. மத்திய மாநில உறவுகளின் போக்கினை ஒழுங்குபடுத்தியது.

சச்சரவுகளைத் தீர்ப்பதற்கும், நெருக்கடியைத் தவிர்ப்பதற்கும் சங்கடமான பிரச்சினைகளை ஆய்வதைத் தள்ளிப்போடுவதிலும் கூட மத்திய மாநிலத் தலைமையை இணைக்

கும் அரசியல் அமைப்பு பெரிதும் பயன் படுத்தப்பட்டது. இந்தப் போக்கில் வேண்டுமென்றோ சோதனைக்காகவோ அரசியல் சட்டம் மீறப்படவில்லை; ஆனால் அதைக் கடந்து செயலாற்றியதுண்டு.''

இந்திய அரசியல் வானில் பல்வேறு அரசியல் கட்சிகள் செல்வாக்கோடு முகிழ்த்தெழுந்தன. பண்டித நேருவின் இழப்பிற்குப் பின் காங்கிரஸ் கட்சி, இணையான தலைவர் இன்றித் தவித்தது. தென்னகத்தில் குறிப்பாக, நாலரைக் கோடி மக்களின் இதயத்தில் உறைந்து விட்ட பேரறிஞர் அண்ணா அவர்களால் துவங்கி வைக்கப்பட்ட தமிழக அரசு மக்கள் உரிமைக் குரல் எழுப்பி—ஏனைய மாநிலங்களை விழித்தெழச் செய்தது.

அரசியல் சூழ்நிலையில் வளர்ந்து வந்த மாற்றம் பற்றி திரு. சி.பி. பாம்பரி (C. P. Bhambhari) என்பவர் கூறுகிறார்.

"The Central Government's new role simply means that a new style of centre state relations will develop in the country, defferent from that of Nehru Era"

''சுருங்கக் கூறின், நேரு சகாப்தத்திலிருந்து வேறுபட்ட, புதியதோர் மத்திய—மாநில உறவு முறைகள் உருவாவது தான் இன்றைய மத்திய அரசின் புதிய பொறுப்பின் பொருளாகும்.''

ஆக, நேருவின் காலத்தைப் போலன்றி மத்திய— மாநில உறவுகளில் புதியதோர் திருப்பம் தேவை என்ற நிலை உருவாகியது. மாநிலங்கள் தங்கள் கடமைகளையாற்ற, உரிமைக்குக் குரல் கொடுக்கும் நிலை உருவாகியது.

## இந்தியக் கூட்டாட்சித் தத்துவம்

''இந்தியாவில் அரசியல் கட்சிகள்'' என்ற தலைப்பின்கீழ் திரு.கே. சந்தானம் எழுதுகிறார்:

"The Indian Republic started with a contradiction while the constitution established a federal system of Government, all the political parties existing at the time, it came into force, were unitary and highly centralised. This was particularly the case with the congress."

''இந்தியக் குடி ஆட்சிமுறை முரண்பாட்டில் தொடங்கியது. அரசியல் அமைப்புச்சட்டம் கூட்டாட்சி யின்பாற்பட்ட அரசை நிறுவ வழி செய்திருக்கையில் அன்றிருந்த அரசியல் கட்சிகள் ஒன்றியும், மிக ஒருமித்தும் இருந்தன. காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தமட்டில் நிலை இதுவாக இருந்தது.'

அதாவது, அரசமைப்புச் சட்டம் ''கூட்டாட்சி''யை வற்புறுத்தினாலும் கூட்டாட்சிக்கு மாறுபாடான ஆட்சியே உருவாகியது என்கிறார்.

இராசமன்னார் குழுவினர் கூறுகிறார்கள்:—

''இந்திய அரசமைப்பு ''கூட்டாட்சி' என்று கூறப்பட்ட போதிலும் ''ஒன்றியம்'' என்ற சொல்லே அரசமைப்புச் சட்டத்தில் பயன்படுத்தப்பட்டு, அதன் தொடர்பாக ''கூட்டாட்சிக்'' கோட்பாடுகளுக்கு முரணான பலவகை நிறைகள் சேர்க்கப்பட்டு விட்டன; ''ஒன்றியம்'' என்பது பெயரளவிற்காகி ஒற்றையாட்சிப் போக்கு மிகுந்து விட்டதை யாரும் மறுக்க இயலாது....''

''கூட்டாட்சி'' என்பதற்குப் பதிலாக ''ஒன்றியம்'' என்ற சொல்லைப் பயன்படுத்தியிருந்தாலும், நமது அரசியல் அமைப்பு ''கூட்டாட்சி'' முறையில்தான் இருக்கிறதென்றும் அரசமைப்புச் சட்டமியற்றியவர்களில் தலைமையாளராகத் திகழ்ந்த டாக்டர் அம்பேத்கார் அவர்களே கூறுகிறார்.

1947—ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 22—ஆம் நாளன்று அரசமைப்புச் சட்ட மன்றத்தில் பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள்—சுதந்திர இந்தியாவில் அமைந்திடும் மாநிலங்களும் பிற ஆட்சிப் பகுதிகளும் சுயாட்சி உரிமைபெற்று மாநிலங்கட்கும் மத்திய அரசுக்கு என குறிப்பிட்ட அதிகாரங்கள் நீங்கலான எஞ்சிய அதிகாரங்களுடன் அமைந்து செயல்படும்'' என்று கூறியிருப்பது மாநில சுயாட்சியின் முக்கியத்தை விளக்கும்.

அரசியல் அமைப்பு சட்ட மன்றத்தில் அரசியலமைப்புச் சட்ட வரைவை அறிமுகப்படுத்தி உரையாற்றிய டாக்டர் அம்பேத்கார் அவர்கள்—

"It establish a dual polity with the Union at the Centre and the States at the periphery, each endowed with sovereign power to be exercised in the field assigned to them respectively by the Constitution. The Union is not a League of States, united in a loose relationship, nor are the States, the agencies of the Union, deriving powers from it. Both the Union and the States are created by the Constitution; both derive their respective authority from the Constitution, The one is not subordinate to the other in its own filed; the authority of one is coordinate with that of the other."

''மத்தியில் யூனியனும் அதைச் சுற்றி மாநிலங்களும் அரசியல் அமைப்புச் சட்டத்தால் வரையறுத்து அளிக்கப்பட்ட தத்தமக்குரிய எல்லையில் ஆட்சிபுரிய அரசியல் அமைப்புச் சட்டம் இரட்டை ஆட்சிமுறையை ஏற்படுத்துகிறது. யூனியன் என்பது நெருக்கமில்லாத உறவுகளால் இணைக்கப்பட்ட மாநிலங்களின் சங்கம் (League) அல்ல. யூனியனிடமிருந்து அதிகாரங்களைப் பெறும் ஏஜெண்டுகளுமல்ல மாநிலங்கள். யூனியனும் மாநிலங்களும் அரசியல் அமைப்புச் சட்டத்தால் உருவாக்கப்பட்டவை. இரண்டும் தங்களுடைய அதிகாரங்களை சட்டத்தினிடமிருந்து பெறுகின்றன. ஒன்றின் அதிகாரத்திற்கு மற்றது கீழ்ப்படிய வேண்டியதில்லை. அவைகள் இணைந்து இயங்க வேண்டியவைகள்.''

மாநில சுயாட்சி என்பது அதிகார உரிமைகளை மாநிலங்கள் பெறுவது மட்டுமல்ல! தங்குதடையின்றி வளமிகு திட்டங்களை மாநிலங்கள் நிறைவேற்றுவதற்குத் தேவையான நிதி வாயில்களை மத்திய அரசிடமிருந்து பெற்றிட வேண்டுமென்பதும் ஒன்றாகும்.

## மத்திய-மாநில நிர்வாகப்: அரசியல் உறவுகள், அரசியல் சட்டப் பிரிவுகள் சில.

1) அரசியல் சட்டம் பிரிவு 263—ன் கீழ் மாநிலங்களுக்கிடையே உள்ள பொதுப் பிரச்சினைகளைப் பற்றி ஆராய்ந்து பரிந்துரை வழங்க மாநிலங்களுக்கிடையே உறவை வளர்க்க ஆலோசனை மன்றங்கள் ஏற்படுத்த வகை செய்கிறது.

நிர்வாக சீர்திருத்தக் குழுவும் அத்தகைய சீரிய மன்றங்களின் தேவையை வலியுறுத்தியுள்ளது. இராசமன்னார் குழுவினரும் அத்தகைய ஆலோசனை மன்றங்கள் உடனடியாகத் தேவை என சுட்டிக்காட்டியுள்ளனர். இன்று இருப்பது தேசிய வளர்ச்சிக்குழு. தமிழக முதல்வர் தேசிய வளர்ச்சிக் குழுவில் திட்டங்கள் தீட்டப்படும் போக்கினைக் கண்டு வருத்தமுற்றார். மாநிலங்களுக்கு இடையே நல்லுறவை வளர்க்கும் மன்றங்கள் இதுவரை நிறுவப்படவில்லை. இத்தகைய மன்றங்கள் நிறுவப்பட்டால், மத்திய அரசால் நியமிக்கப்பட்டுள்ள தேசீய வளர்ச்சி மன்றங்கள் தேவையில்லை.

(2) அரசியல் சட்டம்— பொது அதிகாரப் பட்டியல் 20வது இனத்தின் கீழ், பொருளாதார சமூகப் பிரச்சனைகளையும் உள்ளடக்கிய திட்டக்குழு ஒன்று நிறுவ வகை செய்கிறது. அத்தகைய திட்டக்குழு சாதனைகள் புரியும் ஆர்வம் நிறைந்த மாநிலங்கள், தங்களுடைய நலன் பயக்கும் திட்டங்களை விரைவாகச் செயல்படுத்திச் செல்ல வழிகோலும்.

முன்னாள் கவர்னர் திரு. கே. சந்தானம் அவர்கள் கூறுகிறார். ''மறைந்த பண்டித ஜவகர்லால் நேரு அவர்களே' தம் விருப்பத்திற்கு ஏற்ப, ஓர் சாதாரண அரசு ஆணையை வெளியிட்டு திட்டக்குழுவை அமைத்துக் கொண்டார். நிர்வாக சீர்தக்குழுவும், சட்ட ரீதியான திட்டக்குழு பற்றியும் வலியுறுத்தியுள்ளது. அத்தகைய திட்டக்குழு தேவை என்று பரிந்துரைத்த இராசமன்னார் குழுவும், பாராளுமன்றம் திட்டக்குழு அமைக்கச் சட்டமியற்ற வேண்டும்; அத்தகைய திட்டக்குழு, பொருளாதார, விஞ்ஞான, தொழில்நுணுக்க, வேளாண்மைத்துறை வல்லுநர்கள் தேசப்பணிகளின் இதர துறை விற்பன்னர்கள் அடங்கிய குழுவாக இருத்தல் வேண்டும். இந்திய அரசாங்கத் துறையைச் சார்ந்த எவரும் உறுப்பினராக இருத்தலாகாது. என விளக்கிக் காட்டியுள்ளது.

மாநில அரசிற்கோ, மத்திய அரசிற்கோ பாரபட்சமில்லாமல் நாட்டுப் பொருளாதாரம் வளர்ச்சியடைய, அத்தகைய சட்ட ரீதியான திட்டக் குழு தேவை என திரு. சந்தானம் கூறுகிறார். மத்திய அரசால் அத்தகைய சட்ட ரீதியான திட்டக் குழு இதுகாறும் அமைக்கப்படவில்லை.

எவ்வாறு மாநிலங்கள் விறுவிறுப்போடு செயலாற்ற மத்திய அரசின் போக்குத் தடையாக உள்ளது என்பதை அறியலாம்.

இந்திய அரசின் முன்னாள் தணிக்கை கணக்குத் தலைமையாளர் (Former Auditor and Comptroler General of India) ''மத்திய மாநில உறவுகள் இன்று அமைந்திருக்கும் பான்மையில் மத்திய— மாநில அரசுகளினுடைய, மூலதனங்களையும் பங்குகளையும் இணைத்துச் செயல்பட இயலாதொன்று; நிதித்துறையில் மத்திய மாநிலங்களின் பங்கைச் சரியாக வரையறுத்துக் கொள்ள வேண்டும்'' என்கிறார்.

தமது வரவு செலவுத் திட்டத்தை 10.2.68—இல் சட்ட மன்றத்திற்குச் சமர்ப்பித்தபோது பேரறிஞர் அண்ணா அவர்கள்—

''சென்ற 15 ஆண்டுகளின் அனுபவத்தைக் கொண்டு அரசியல் அமைப்பில் வரையறுக்கப்பட்ட நிதிப் பங்குகளையும் அதிகாரங்களையும் ஓர் மேல் மட்டம் பரிசீலனை செய்வது மிகவும் முக்கியம்'' என்று விளக்கினார்கள்.

## மாநில அதிகாரங்கள்

மத்தியப் பட்டியலில் 97 அதிகாரங்கள் மத்திய அரசிற்கும் மாநிலப் பட்டிய

வில் 66 அதிகாரங்கள் மாநில அரசிற்கும் பொதுப் பட்டியலில் (மத்திய–மாநில அரசிற்குப் பொதுவான) 47 அதிகாரங்களோடு அரசியல் சட்டம் அமைந்த பொழுது எழுத்தாளர் பலர் மத்திய அரசிற்கு அளித்துள்ள அதிகாரங்கள் அதனுடைய ஆதிக்கத்திற்கு வழிகோலும் என்று சுட்டிக்காட்டியுள்ளனர். தற்போதுள்ள அரசியல் சட்டப்படி மத்திய அரசிடம், அளவிற்கு மீறி அதிகாரங்கள் குவிந்து கிடப்பதைக் காணலாம். எனவே, பதவிகளும் குவிந்திருப்பதைக் காணலாம்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் இப்போதுள்ள மாநில சுயாட்சி ''பின் வாசல் இரட்டை ஆட்சிதான்'' எனக் கூறினார்கள். திறமையும், வலுவும் கொண்ட மாநிலங்களின் மகிழ்ச்சியும், வலுவும் வலுவக்களிக்கூடியவை.

கூட்டாட்சித் தத்துவத்தைப் பற்றி கூறிய, வங்கம் தந்த தங்கம்–மாவீரன்–வங்காளதேஷ் பிரதமர் முஜிபுர் ரஹ்மான் கூறுகிறார்:

''நிர்வாகப் பணியில் ஆகட்டும், வளர்ச்சிப் பணிகளில் ஆகட்டும்—ஒரு அரசைத் திறவம மிகுந்ததாக ஆக்குவது அதிகாரத்தைப் பரவலாக்குவதால்தான் முடியுமே தவிர, அதிகாரத்தை ஒரே இடத்தில் குவித்துவைப்பதால் முடியாது. எந்த இலாக்காக்களை மத்திய அரசும் மாநில அரசும் சேர்ந்து கூட்டாகவும், திறமையாகவும் அதிகப் பயனுள்ள வகையிலும் நிர்வகிக்க முடியுமோ அந்த இலாக்காக்கள் மட்டுமே மத்திய அரசிடம் இருக்க வேண்டும் என்பதும், கூட்டாட்சித் தத்துவத்தின் முக்கியத்துவமாகும். ஜில்லா போர்டு, நகராட்சி போன்ற உள்ளாட்சித் துறைகள் இந்தத் தத்துவத்தின் அடிப்படையில் இயங்குகின்றன. வேற்றுமையில் ஒற்றுமை; அதிக அதிகாரக் குவியலின்றி ஒற்றுமை; அதிக அதிகாரக் குவியலின்றி ஏற்படுகின்ற இணைப்பு...எந்த இலாக்காக்களில் எல்லா மாநிலங்களுக்கும் தனித்தனி என்று பிரிக்க முடியாத நலன்கள் பின்னிக் கிடக்கின்றனவோ அந்த இலாக்காக்கள் மட்டுமே மத்திய அரசிடம் இருக்க வேண்டும் என்பது கூட்டாட்சித் தத்துவத்தின் முதுகெலும்பாகும்...''

சூரியன் அஸ்தமிக்காத பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை ஆண்ட ஆங்கிலேயர் கூட, அதாவது 1946'இல் இந்தியாவிற்கு வந்த (Cabinet Mission) மந்திரிசபைக் குழுவினர்கூட கூட்டாட்சித் தத்துவத்தின் அடிப்படையில், இந்தியக் கூட்டாட்சி என்கிற மத்திய அரசிடம் தேசப் பாதுகாப்பு, வெளிநாட்டு உறவு, செய்திப் போக்குவரத்து ஆகிய மூன்றே மூன்று இலாக்காக்கள் மட்டுமே இருக்க வேண்டுமென்று முன்மொழிந்தது. எண்ணற்ற சுதந்திரச் சுடர்கள் சூழ இருந்த அன்றைய காங்கிரஸ் இதனை ஏற்றுக் கொண்டது.



**மலர் மழலைக்கோர்**
**ஆசை முத்தம்!**

(1) ஒரு மாநில எல்லைக்குக் கட்டுப்பட்ட உடமைகள்—சொத்துக்களைக் குறித்து—மாநிலங்கள் அவைகளின் சட்ட மன்றங்கள் மூலம் சட்டமியற்றும் அதிகாரத்தால் பாராளுமன்றம் தலையிட்டு சட்டமியற்றலாம்.

(2) ஒரு மாநிலத்தில் சட்ட மன்ற மேலவை இருக்கலாமா வேண்டாமா என்ற அதிகாரம் அம்மாநிலத்திற்கே இருக்க வேண்டும். ஆனால் இன்றைய நிலையில் அதனுடைய சட்டப் பேரவை உரிய தீர்மானம் போட்ட பின், பாராளுமன்றம் அதற்குரிய—அதற்கான சட்டமியற்றிடும் சட்ட அமைப்பே இன்று உள்ளது.

(3) நாடாளுமன்றம் ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு, அவைகளின் சட்ட மன்றங்களின் தீர்மானத்தோடு கூடிய ஒப்புதலுடன் பொதுவான சட்டங்களை நிறைவேற்றலாம். ஆனால், அச்சட்டங்களில் இருந்து, அவசியம் ஏற்படுகையில் விடுவித்துக்கொள்ள மாநிலங்களுக்கு அதிகாரம் இல்லை.

தேசிய முக்யத்துவம் வாய்ந்த தொல்பொருள்கள்—வரலாற்று ஆவணங்கள்—நினைவுச் சின்னங்கள்—இவைகளில் பேணும் அதிகாரம், மத்திய அரசினிடம் உள்ளது. மாநிலங்களுக்கு இந்த அதிகாரம் இல்லை. மாநிலங்கள் இயற்றும் சட்டங்கள் பலவற்றிற்கு ஜனாதிபதியின் ஒப்புதல் வேண்டி, மாநிலங்கள் காத்துக் கிடக்கின்ற அவல நிலை இன்று.

இந்த மாநிலத்தின் கனி வளங்களை எடுப்பதற்காக உரிமம் வழங்கும் அதிகாரம் மத்தியில் இருக்கிறது. இம்மாநில வளர்ச்சிக்கு ஆக்கமளிக்கும் பல்வேறு தொழில்களுக்கு உரிமம் வழங்கும் அதிகாரம், இம்மாநிலத்திற்கு இல்லை. இந்திய அரசினுடைய உரிமம் வழங்கும் கொள்கை என்பது,

நாடாளுமன்றச் சட்டத்தால் உருவாக்கப்பட்டது. அதனை வேறு ஒரு சட்டம் மூலம் உரிமம் வழங்கும் அதிகாரத்தை மாநிலங்களுக்கு அளிக்கலாம்.

உழைப்பின் உயர்வை மதித்து உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்று சட்டம் இயற்றி, கையெழுத்துப் பெறுவதற்காக மத்திய அரசிடம் நிற்க வேண்டியுள்ளது. கண்ணீர் வடித்து நிற்கும் விவசாயிகளுக்கு அவர்கள் பட்ட கடன்களைத் தவணை முறையில் கட்ட, அனுமதிக்கும் விவசாயிகள் சட்டத்திற்கு, ஜனாதிபதியின் ஒப்புதலுக்கு காத்திருக்க வேண்டிய நிலை. நெசவு நூல் விலையேற்றத்தைத் தடுத்து நிறுத்தி வாழ நிற்கின்ற நெசவாளர் சமூகத்திற்குப் புத்துணர்வூட்டும் திட்டங்களுக்கு மத்திய அரசின் தயவு நாடி நிற்கவேண்டி உள்ளது.

தேன் தமிழின் வித்தகன்—இராஜராஜ சோழனுக்கு அவன் கட்டிய தஞ்சைக் கோயிலில்—அவனுக்கே இடமில்லை என்ற நிலை—அவன் சிலை தஞ்சைக் கோவிலுக்கு வெளியே இருக்க வேண்டிய நிலை.

இந்த மாநிலத்திலேயே, தேசிய பாதைகள் என்பவை வேறு; சிற்றூர் பேரூர் இவைகளின் பெயர்களின் மாற்றங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் தீவிரமாகச் செயல்பட்டு வரும் தமிழக அரசால் ஒப்பளிக்கப்படுகின்ற சட்டங்கள், ஜனாதிபதியின் ஒப்புதலுக்குக் காத்துக் கிடக்கின்றன—சீரிய பணிகள் நடைபெறுவதில் தடைகள் ஏற்படுகின்றன.

அதிகாரப் பட்டியல்களில் உரிய மாற்றங்கள் செய்ய அரசியல் சட்டத்திலுள்ள மத்திய அரசிற்குரிய பட்டியல், மத்திய அரசிற்கும் மாநில அரசிற்குமான பொதுவான பட்டியல்கள் இவைகளை ஆராய்ந்து, புகழ் பெற்ற வழக்கறிஞர்கள், சட்ட மேதைகள், நிர்வாக அனுபவமிக்கவர்கள்—அரசியல் வல்லுநர்கள் இவர்களடங்கிய குழு நியமிக்கப்பட வேண்டுமென இந்த அரசால் நியமிக்கப்பட்ட இராசமன்னார் குழு வலியுறுத்தியுள்ளது.

அடிப்படை உரிமைகள் உள்பட, மத்திய அரசு, இந்த நாட்டின் அரசியல் சட்டத்தில் இந்த 23 ஆண்டுகளில், மேற்கொண்ட திருத்தங்கள் 25-க்கு மேல்.

எனவே, மாநிலங்களுக்கு வளம் கூட்ட மத்திய அரசிற்கு வலிவூட்ட—பொருளாதாரத் துறையில் வளர்ச்சி பெருகிட—ஆதிக்கமற்ற சமுதாயத்தை ஏற்படுத்திட—மாநிலங்களுக்கு மாநில சுயாட்சி என்ற அடிப்படையில், அதிக அதிகாரங்கள் வழங்க அரசியல் சட்டம் உரிய வகையில் திருத்தப்பட வேண்டும்.

மாநிலங்களுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்ற இராசமன்னார் குழுவின் பரிந்துரைகளைப் பற்றி திரு. கே. சந்தானம் கூறுகிறார்.

"Taking these recommendations as a whole it must be evident that they do not make serious inroad into the power of the Centre and their effect will be only to make the State autonomy more in confirmity with the spirit of the constitution without having any destructive effect."

''இராசமன்னார் பரிந்துரைகளை ஒருங்கே நோக்குகையில், அவைகள் மத்திய அரசின் அதிகாரத்தில் தீவிர குறுக்கீடுக்கு வழி செய்யவில்லை; சீர்குலைக்கும் விளைவு ஏதும் இன்றி, மாநில சுயாட்சி கோட்பாடு, அரசியல் அமைப்புச் சட்டத்தின் அடிப்படைகளுக்கு ஒத்துவர வகை செய்பவையாகவும் உள்ளன; என்பது தெளியும்.''

எனவே, இராசமன்னார் குழுவின் பரிந்துரைகளை மத்திய அரசு ஏற்றுக் கொண்டால் மத்திய அரசிற்கு சேதமொன்றும் ஏற்பட்டுவிடாது; அரசியல் சட்டத்திற்குட்பட்ட மாநில சுயாட்சி மலரும் என்று கூறுகிறார்.

திராவிட முன்னேற்றக் கழகம், 1971'இல் வெளியிட்டுள்ள தேர்தல் பிரகடனத்தில் விளக்கியிருப்பது—

''இந்திய அரசியல் முறை 'கூட்டாட்சி முறை' (Federalism) என்று வர்ணிக்கப்பட்டாலும், அந்தத் தராசு மத்திய அரசு பக்கம் அதிகபட்சம் சாய்ந்திருப்பதால்; அதிகாரத் துறையிலும் நிதித்துறையிலும் மாநிலங்கள் செவ்வனே செயல்பட முடியாமல் தடைகள் இருப்பதால்; அதேநேரம் இந்தியா வலுப்பெற்றதாக இருக்க வேண்டுமென்கிற இலட்சியத்திற்கும் ஊறு தேடாமல் எந்தெந்தத் துறைகளில் வலுவான இந்தியா இயங்குவதற்காக மத்திய அரசு செயல்பட வேண்டுமோ அந்த அதிகாரங்களை மட்டும் மத்திய அரசிடம் கொடுத்துவிட்டு; இதர அதிகாரங்கள் மாநிலங்களுக்கு வழங்கப்படும்; வகையில் அரசியல் சட்டத்தைத் திருத்தி மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கருதுகிறோம்.

இந்த நோக்கத்தோடு நமது அரசு அமைத்த வல்லுநர் குழுவின் அறிக்கை கிடைத்த பிறகு; அந்த அடிப்படையில் அகில இந்திய ரீதியில் மாநில சுயாட்சி இயக்கத்திற்கான ஆதரவு திரட்டும் இயக்கத்தைக் கழகம் மேற்கொள்ளும்.

அரசியல் துறை அதிகாரங்களும், நிதித்துறை அதிகாரங்களும் மாநிலங்களுக்கு மேலும் தேவை என்று கேட்பது; மாநிலங்களில் இருப்போர் அதிக அதிகாரங்களை நுகர வேண்டுமென்கிற ஆசையால் அல்ல; மாநில அரசுகள் மக்களுக்கு நெருங்கிய நிலை

யில் இருப்பதால் அந்த அதிகாரங்களை மத்திய அரசிடமிருந்து மேற்கொண்ட பிறகே எதிர்பார்க்கும் விதத்தில் மக்களுக்குத் தொண்டாற்ற முடியும்—என்பதால்தான் மாநில சுயாட்சி கோருகிறோம்.

விஞ்ஞான யுகத்திற்கேற்ற சமதர்மச் சமுதாயம் அமைப்பதே நமது இலட்சியம் என்று கூறுகிற நேரத்தில்; இந்த நோக்கத்தில் நமது பொருளாதாரக் கொள்கையும், சமுதாயக் கொள்கையும் இணைந்திருப்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

## வளர்ச்சிக்கு விலங்கு

சாதி—பேதம் நிறைந்த நிலப்பிரபுத்துவ சமுதாயம் நமது வளர்ச்சிக்குப் போடப்படும் விலங்காகும்.


'சோஷலிச சமுதாயம்' நமது இலட்சியமாக இருப்பதால் அடிப்படை உரிமைகளை அழித்துவிட்டு, வறுமையை அனைவருக்கும் பங்கிட்டுக் கொடுப்பது என்பது கழகத்தின் நோக்கமல்ல.''

பேரறிஞர் அண்ணா அவர்கள் நமக்கெல்லாம் சாசனம் என்ற வகையில் கடைசிக் கட்டுரையாக எழுதியதில்—

''இந்த நாட்டு மக்களிடத்தில் அதிகம் எதிர்பார்க்கிறேன். ஏழைகளின் துயரம் துடைக்கப்பட வேண்டும். வசதிகளைப் பெருக்க வேண்டும். என்னுடைய கைகள் கட்டப்பட்டு இருக்கின்றன. சூழ்நிலையால் கைதாகி இருக்கிறேன். இந்த மாநில மக்களுக்கு ஏதாவது செய்ய வேண்டுமென்றால், அதிக அதிகாரங்கள் தரப்பட வேண்டும். உரிமைகளைப் பெற போராட்டத்தில் குதிக்கத் தயாராகிக் கொள் தம்பி. சூளுரை எடுத்துக் கொள் தம்பி,''

என்று அறிவுரை பகன்றார்.

எனவே, உரிமைகள் பெற்றிட கடமைகள் ஆற்றிட, ஆதிக்கமற்ற சமுதாயத்தை உருவாக்கிட—மாநில சுயாட்சி தேவை—இந்தத் துணை கண்டத்திலுள்ள 56 கோடி மக்கள் வாழ்வில் வளம் பெருக்கி ஒளியூட்ட மாநில சுயாட்சி தேவை. மாநில சுயாட்சி என்பது தன்னாட்சியல்ல—பிரிந்து வாழும் உரிமையைக் கோரும் ஆட்சியும் அல்ல—மக்களுக்கு நன்மை செய்யும் சீரிய வழி—மாநில சுயாட்சி—உரிமைகள் பெற்ற மாநிலங்கள்—உறவுகள் கொள்ளும் மாநிலங்கள்—ஒற்றுமையை வளர்த்து, நாட்டின் ஒருமைப்பாடு வளர்க்கும் மாநிலங்கள்—வலிமை மிக்க மத்திய அரசு இந்த நாட்டில் நிலை பெற்றிட—மிளிர்ந்திட வழி மாநில சுயாட்சி தான்!



# நாடக உலகில் அண்ணு!

## "சந்திரமோகன்" நாடகத்தில் சில அரிய காட்சிகள்



சீர்திருத்தம் பேசும் துரையை மடாதிபதியாக்கிவிடுகிருர்கள் மடாதிபதி சீர்திருத்தம் பேசுகிருர்! சந்திரமோகன் நாடகத்தில் துரையாகவும், மடாதிபதியாகவும் அண்ணு.

[புகைப்படம்: தி, நா. திரு நாவுக்கரசு, திருப்பத்தூர்,]






சந்திரமோகனில் அண்ணுவின் முன் அபிநயம் பிடிப்பவர் மறைந்த போளூர் சுப்பிரமணி

# அண்ணா நடித்தார்!

## கவிஞர் ஆனந்தம்

பேச்சாலே எழுத்தாலே நூறு நாட்கள்
பெரியதொரு கருத்தினையே புரிய வைத்தால்—
பூச்சாலே, ஒப்பனையால் வேடம் போடும்
புதுமையான நாடகத்தால், இரண்டே நாளில்
மூச்சுவிடத் திணறுகின்ற 'முதியோர்' கூட
முழுக்கருத்தும் புரியுமாறு செய்தல் கூடும்!
ஏச்சாலே நமையடக்கப் பார்த்தோர், அன்றே
இவ்வழியில் மிகமுயன்று தோற்றுப் போனார்!



படித்தவர்கள் நாடகத்தில் பங்கு கொள்ளல்
பண்பல்ல என்றுரைக்கும் பண்டை நாளில்—
இடித்துரைத்த இழிசொற்கள் எள்ளித் தள்ளி,
இளைஞருக்கு வழிகாட்ட, கலைகள் வாழ,
அடித்தளமிட் டார்அண்ணா! காஞ்சி மண்ணில்
அமைத்தனரே திராவிட நடிகர் சங்கம்!
வெடித்தெழுந்த புத்துணர்வால் சமுதா யத்தின்
வினாக்குறிபோல் தீட்டினரே நாட கங்கள்!



''சந்திரோத யம்''என்ற நாட கத்தில்
சமுதாயச் சிக்கலெல்லாம் விண்டு ரைத்தார்.
எந்தவிதம் - பணக்காரர், ஆதீ னத்தார்
ஏழையரை வதைக்கின்றார் என்ப வற்றைச்
சிந்தனைக்கு விருந்தாக்கிப் படைத்துக் காட்டி—
சிறப்பாக மூன்றுவித வேடந் தாங்கி—
வந்தனரே சுழற்காற்றாய்த் தமிழ்நா டெங்கும்;
வரவேற்றுச் சிரமீதில் வைத்தோம் அன்று!



# பதுக்கல்காரர்கள் ஏற்றிச் செல்லுவது அரிசியா? இதயமா?

''பதுக்கல் சமூக விரோத காரியம். பதுக்குகிறவர்கள் யாராக இருந்தாலும் அவர்களைவிட சமூகத்திற்கு ஆபத்தானவர்கள்; கேட்டை உண்டாக்கக் கூடியவர்கள் வேறு யாருமே இருக்க முடியாது என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

ஒரு லாரியில் பதுக்கல் நெல் மூட்டைகள்; அரிசி மூட்டைகள் ஏற்றிச் செல்லப்படுகின்றன என்றால்; ஏற்றிச் செல்லப்படுவது, அரிசி மூட்டைகள் மட்டுமல்ல; ஆயிரக் கணக்கான உயிர்கள் அதிலே ஏற்றிச் செல்லப்படுகின்றன; இலட்சக் கணக்கான பொது மக்களைப் பட்டினி போடுவதற்கான சதித் திட்டங்கள் அதிலே ஏற்றிச் செல்லப்படுகின்றன!''

**-சட்டமன்ற பேரவையில்**
**27–3–1967.**

''சந்திரமோகன் அல்லதுசி வாஜி கண்ட
இந்துராஜ்யம்'' சரித்திரத்தின் சாகாச் சான்று!
விந்தையுடன் அண்ணாவும் காக பட்டர்
வேடமேந்தி வைதிகத்தின் ஆண வத்தை—
தந்திரமாய் மன்னவரை, வீரர் தம்மைத்
தாள்பணியச் செய்தவொரு சாக சத்தைச்—
செந்தமிழர் மனங்களிக்கச் சித்த ரித்தார்;
சீரான தொழில்நடிகர் வியப்பில் ஆழ்ந்தார்!

இசைபாடி நடிக்கவல்ல இராம சாமி
ஏற்றமுறக், குழுவினர்கள் வாட்டம் நீங்க,
வசைபாடும் பழைமையாளர் வாய டக்க,
வரைந்திட்டார் ''ஓர் இரவு'', ''வேலைக் காரி!''
விசையோடே எழுச்சியுற்ற தமிழ கத்தில்
விரைவாக அறிவுணர்ச்சி பெருகக் கண்டோம்!
அசைபோடும் மாடுகள்போல் மடமை தன்னை
அரைத்துவந்த நிலைமாற்றி விட்டார் அண்ணா!

கலைவாணர் சிறைக்குள்ளே வதைந்த போது
கடமையுடன் அவர்பெயரால் குழுவ மைத்தார்
விலைபோகும் சரக்குள்ள இராம சாமி!
வெறுப்புமிகப் பொறுமையினால் வயிறெ ரிந்தே
அலைபாயும் சலனஉள்ளம் பெறாதார்— என்றே
அண்ணாவும் ஆதரவை நல்கி வந்தார்!
நிலையான கொள்கைநமக் களித்த அண்ணன்
நெஞ்சுக்குள் குடியிருந்தால் போதும் அன்றோ?



**சந்திரமோகன் நாடகத்தில் காகப் பட்டராக — அண்ணா.**

**புகைப்படம்: ரங்கநாதன்**

# அண்ணாவின் சுவடுகள்

ஏ. பி. ஜனார்த்தனம், எம்.ஏ., எம்.எல்.சி.,




பேரறிஞர் அண்ணா அவர்களுடன் பழகியவன், அவரது பேச்சுக்களைக் கேட்டவன், எழுத்துக்களைச் சுவைத்தவன் என்ற வகையில் அவர் இன்றைய நம் நிலைக்கு-போக்குகளுக்கு- என்ன வழிகளைக் காட்டினார் என்பதை ஆழ்ந்து சிந்தித்து இதை எழுதுகிறேன்.

அறிஞர் மறைந்த திகைப்பைப் போக்கி, அந்த இடத்தை நிரப்பி, பல தரப்பட்ட கழகத் தோழர்களை வழி நடத்தும் கலைஞர் எப்படியெல்லாம் தன போக்கில், ஆட்சியில், கழகத்தை வழி நடத்துவதில் அண்ணா முத்திரைகளைப் பதித்திருக்கிறார் என்பதைக் கவனிப்போம்.

இந்த அரசு நான்காம் தர மக்கள் (சூத்திரர்) அரசு என்று கலைஞர் முரசு அறைந்தது அண்ணாவின் தலையாய கொள்கையாகும. இந்த அடிப்படையில்தான் அண்ணா தன் பொது வாழ்க்கையை அமைத்துக் கொண்டார்.

பெரியார் சிலைகளை நாடெங்கும் திறக்கும் கலைஞர்—பெரியாரின் பெருந்தொண்டினைக் குறிப்பிட்டுப் பெரியார் பெருந்துணையை நன்றியுடன் குறிப்பிடுகிறார். 'இந்த அரசே பெரியாருக்கு காணிக்கையாக்கப்பட்டிருக்கிறது' என்ற அண்ணாவின் நன்றி உணர்வின் எதிரொலி இது.

இந்தி எதிர்ப்பு இயக்கம்தான் நமக்கு மக்கள் செல்வாக்கை நிறைய தந்தது என்பதை அண்ணா வலியுறுத்தி, தாளமுத்து நடராசன் போன்ற தியாகிகளின் புகழ்பாடி வந்தார். கலைஞரும் நம் புறநானூற்றுச்சிறப்பை உணர்த்தியபடி இருக்கிறார்.



'இயற்கை ஒரு அழகிய விதவை' என்று அண்ணா இயற்கை அழகு தவழும் பகுதிகளைப் படம் பிடித்து, அங்கு மக்கள் செல்ல வேண்டும், களிக்க வேண்டும் என்று தன் ஆசையை வெளியிட்டார். கலைஞர் ஆட்சியில் குற்றாலச்சாரல் விழா இந்த ஆவலைப் பூர்த்தி செய்துள்ளது.

தமிழ், தமிழர், தமிழ்க்கலை' தமிழ் இசை, நாகரிகம், இவைகளை ஏத்தும் பண்ணை 'அந்த வாழ்வுதான் எந்த நாள் வரும்!' 'தமிழனே இது கேளாய்!' போன்ற புரட்சிக் கவிஞரின் உயிர் வரிகளை எடுத்துக்காட்டி அண்ணா இடையறாமல் செய்து வந்தார். பூம்புகார் பண்டைய தமிழனின் செழிப்பை, வீரத்தை எடுத்துக் காட்டுவது என்பதை உணர்த்த கலைஞர் பூம்புகார் விழா நடத்தினார்.

மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தேவை, புது தில்லியின் இரும்புப் பிடி தளர வேண்டும் என்பது பேரறிஞரின் அரசியல் அடித்தளம். இன்று கலைஞர்—மாநிலங்களின் உரிமைகளுக்குக் குரல் கொடுக்கிறார்.

இப்படி கலைஞர் அண்ணாவின் அடிச் சுவட்டில் ஆட்சி நடத்துகிறார்.

அண்ணாவுக்கு அறிவாலயம் அமைக்கும் முயற்சியில் உள்ளோம். அண்ணாவின் சிந்தனைகள் நம் மக்களின் நெஞ்சங்களிலே எல்லாம் குடி புக முயற்சி எடுப்போம்.

எதைச் செய்தாலும் இதை அண்ணா ஒப்பியிருப்பாரா என்பதை எண்ணிச் செய்ய வேண்டும். 'ஈன்றாள் பசி காண்பாளாயினும் செய்யற்க சான்றோர் பழிக்கும் வினை' என்பது வள்ளுவர் வாக்கு. 'செய்யற்க அண்ணா பழித்த வினை' என்பது நம் கட்டுப்பாடு.

அண்ணா அவர்கள் எதிர்ப்பை வரவேற்றார். வைதாரையும் வாழ்த்திய பண்பு நெஞ்சம் அவருடையது. பழிவாங்கும் எண்ணத்துக்கு இடம் தரவில்லை. பழைய தோழர்களிடம் அன்பைச் சொரிந்தார். உறுமுவோர், ஊளையிடுவோர், உசுப்பி விடுவோர், கோள்மூட்டுவோர், புகழ் பாடிக் குழிபறிப்போர், இம்மி குறைந்தாலும் நன்றி மறந்து கை உலரும் முன்னே ஏசுவோர், ஒத்துழைப்புத் தராமல் உள்ளுக்குள் சிரிப்போர், ஆபத்தில் திசை திருப்புவோர், தவறான விவரம் தருவோர், திடீர் காதலர்கள், ஏமாந்த காலத்தில் ஏற்றங்கொண்டோர், அறுவடை காலத்தில் ஆட்டம் போடுவோர் இப்படி பலரிடமிருந்தும் கழகத்தை, ஆட்சியைக் காப்பாற்ற அண்ணா என்ன செய்தார் எப்படி சிந்தித்தார் எப்படி அணுகினார் என்பதையெல்லாம் நம் பாதைக்கு வெளிச்சமாக்கிக் கொள்ள வேண்டும். சொந்த விருப்பு, வெறுப்பு, இவைகளைக் கழற்றி விட்டு, முன் கணக்கு, பின் கணக்கு போட்டு எதிலும் மயங்காமல், கழகத்தை காப்பாற்றுவதையே முதல் கடனாகக் கொண்டு முடிவுகளை எடுக்க வேண்டியவர்கள் நாம்.

அன்பைவிட வலுவான ஆயுதம் இல்லை என்பதை அண்ணா எடுத்துக்காட்டினார். தன்னை தாக்கியவர்களும் நாணும்படி அவர்களுக்கு நல்லதைச் செய்து வென்றவர் அண்ணா. பலம் இருக்கிறது, எனவே எதிரிகளை வாட்டுவோம் என்ற போக்கை அவர் கையாளவில்லை. பொறுமை, அன்பு, மாற்றுக்கருத்துக்களை வரவேற்கும் பண்பு, எல்லையற்ற எளிமை, ஏழைகளுக்குத் துடிக்கும் நெஞ்சம் எல்லோரும் வளரட்டும், வாழட்டும் என்ற பேருள்ளம், இவை அண்ணாவின் அணிகலன்கள்.

நாம் ஆயிரம் பேர் சேர்ந்தாலும், அண்ணாவின் இடத்தை நிரப்ப முடியாது. எனவே, மிக விழிப்புடன், முதிர்ச்சியுடன், அவரது அணுகுமுறைகளைக் கையாண்டு பகைவர்களைச் சமாளித்தாக வேண்டும்.

பாவம் கலைஞர்! எத்தனை சிக்கல்? எத்தனை பிரச்சினை! எவ்வளவு தொல்லை!! யார் யாரை மலைபோல் நம்பிக் கைதூக்கி விட்டாரோ அவர்களாலேயே தாக்கப்படும் பரிதாபம்! முழு ஒத்துழைப்பு தரவேண்டியவர்கள் எதை எதையோ நினைத்துக் கொண்டு 'டன்கிர்க்' செய்கிறார்கள். பழைய காங்கிரஸ், கம்யூனிஸ்ட்டு புதுக்கட்சி, இத்தனை பலத்த எதிர்ப்புகள்!

தவறான கணிப்புகள், தவறான முடிவுகள், தவறான அணுகுமுறைகள் தவறான தாக்குதல்கள், இவை இலக்கத்துக்கு ஊறு தேடுபவை. ''அண்ணா என் எளிய தோள்களில் இத்தனை சுமையா! இத்தனை துரோகிகளா? இத்தனை எத்தர்களா! இருக்கட்டும்; தாங்கள் தந்த எதையும் தாங்கும் இதயம் கொண்டு சமாளிக்கிறேன்'' என்று கலைஞர் தொடர்ந்து பணியாற்றுகிறார். கலைஞரின், இந்த தாங்கும் இதயம் இல்லாதிருந்தால் அத்தனையும் பத்து நாட்கள் கூட தாக்குப் பிடித்திருக்க முடியாது.

கலைஞருக்கு நாம் எப்படி ஒத்துழைப்பது? கொள்கை வீரராக வாழ்ந்து, தூய்மைக்கு எடுத்துக் காட்டாகத் திகழ்ந்து, எதிரிகள் பொறாமைப்படும் நேர்மையுடன் தொண்டாற்றுவது! ''நாங்கள் இருக்கிறோம், கவலை வேண்டாம், அண்ணா தந்த சக்தி, நம்மை இயக்குகிறது'' என்று கலைஞருக்கு, தெம்பூட்ட வேண்டும். கலைஞரின் நல், வாழ்வுத் திட்டங்களை செயல்படுத்தி அண்ணாவின் கனவுகளை நனவாக்குவோம்! அதுதான் நமது முதற்கடமை!!

* * * *

**1954** ஆம் ஆண்டு. செங்கற்பட்டு மாவட்ட தி.மு.க. மாநாடு காஞ்சீபுரத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரம்.

தினத்தந்தியின் சென்னை மாநகரச் செய்தியாளனான நான், அம்மாநாட்டுச்செய்திகளைச் சேகரிக்கும் சிறப்புச் செய்தியாளனாக அனுப்பப்பட்டேன்.

அதற்கு முந்தைய ஆண்டு தி.மு.க. வரலாற்றில் ஒரு முக்கியமான திருப்பு முனை ஆகும்.

# செய்தியாளர்களின் நண்பர் அண்ணா



மும்முனைப் போராட்டங்களை வெற்றிகரமாக கழகம் முடித்திருந்தது. அந்தப் போராட்டத்தை ஒட்டிய செய்திகளைச் சேகரிக்கச் சென்றதன் மூலம் அதில் ஈடுபட்டுச் சிறை புகுந்த வீரர்களை சைதாப்பேட்டை மாஜிஸ்திரேட் கோர்ட்டில் அடிக்கடி சந்தித்து நட்பினை வளர்த்துக் கொண்டிருந்தவன் நான்.

சென்னையில் அப்போதைய முதலமைச்சர் ராஜகோபாலாச்சாரியாரின் வீட்டு முன் மறியல் நடத்திக் கைதானோரில் செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் மிகப் பலர் உண்டு.

மாஜிஸ்திரேட் கோர்ட்டுக்கு கட்டுக் காவலோடு அழைத்து வரப் படுகிற அவர்களோடு— கட்டுக் காவலையும் அன்பால் மீறி அளவளாவும் பேறு பெற்றிருந்தேன் அன்று.

பின்னர் ஓராண்டு கழித்து மாநாட்டிலே அதே வீரர்களை வேறு உருவில் தலைவர்களாகவும், பேச்சாளர்களாகவும் சந்திக்க நேர்ந்தபோது எனது மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

அம்மாநாட்டில் அண்ணா நாவலர், கலைவாணர், கலைஞர், கவிஞர், புலவர் (ஏ.கே வேலன்) ஆகியோர் பங்கேற்றனர்.

மாநாட்டுச் செய்தி சேகரிப்பில் கிடைக்கும் இடைநேரத்தில் எல்லாம் ஓடோடிச் சென்று தொலைபேசி மூலம் சென்னைக்குச் செய்தியைக் கொடுத்துக் கொண்டிருந்த என்னை, இரு விழிகள் மேடையில் இருந்தவாறே கவனித்துக்கொண்டிருந்தன என்பது எனக்குத் தெரியாது.

**நா. கிருஷ்ணமூர்த்தி**

அந்த விழிகள்.. பேரறிஞர் அண்ணாவின் விழிகள்.

**மா**நாட்டின் முற்பகல் நிகழ்ச்சிகள் முடிந்ததும்' பசியாறிட உணவு விடுதியை நோக்கி நடைபோட்டுக் கொண்டிருந்தேன். அப்போது சைதாப்பேட்டைக் கோர்ட்டில் எனக்கு மிகவும் பழக்கமான அன்புக் குரல் ஒன்று அழைத்தது.

திரும்பிப் பார்த்தேன்.

மாநாட்டின் அமைப்பாளர்களில் ஒருவரான அண்ணன் சி.வி.எம். அண்ணாமலை என்னை நோக்கி வந்து கொண்டிருந்தார்.

அண்ணா சாப்பிட அழைக்கிறார் வாருங்கள் என்றார் 'சி.வி.எம்'. என் மீதுள்ள அன்பு காரணத்தினால் அப்படிச் சொல்கிறார் போலும் என்று எண்ணித் திரும்பிய நான், ''அண்ணாவா—என்னையா அழைத்தார்?'' என்று வியப்பு மேலிடக் கேட்டேன்.

''ஆம்! சென்னையிலிருந்து நம் மாநாட்டிற்கு 'ஒண்ணே ஒண்ணு; கண்ணே கண்ணு' என்று ஒரு நிருபர் வந்திருக்கிறார்; அவருக்கும் சாப்பாடு போடாமல் எங்கே அனுப்பி விட்டீர்கள் என்று கேட்கிறார் அண்ணா'' என்று என்னை இழுத்துச் சென்றார் சி. வி. எம்.

அவரோடு சென்று உணவுப் பகுதியில் இடம் தேடியபோது அண்ணா அவர்கள் ''இப்படியே உட்கார்ந்து கொள்'' என்று என்னை அவர் அருகிலேயே உட்கார்ந்து உண்ணும்படி செய்தார்.

இந்த நிகழ்ச்சிக்குப்பின் வேறு பல சந்தர்ப்பங்கள் செய்தி சேகரிக்கும் பணியில் அண்ணாவிடம் நான் சென்றதுண்டு. ஆனால் அவையாவற்றைக்காட்டிலும் நினைக்கும் தோறும் நெஞ்சமே கண்ணீராகி விடுமோ என்கிற உணர்வை உண்டாக்கிய ஒரு சந்திப்பு உண்டு.

1968—ம் ஆண்டு டிசம்பர் மாதம்.

கீழ் வெண்மணியில் கோரச் சம்பவம் நடைபெற்றிருந்த அந்தநாளில் இரவு நெடு நேரம் கழித்து முதல்வர் அண்ணா அவர்களின் இல்லத்துக்கு நடுக்கத்துடன் போனேன்.

என் நடுக்கத்திற்குக்காரணம்— அண்ணாவின் அப்போதைய உடல் நிலைதான்.

அண்ணாவைச் சந்திக்கும் முன்னாலேயே அண்ணா கலைஞ

ரையும் அமைச்சர் மா.த வனேயும் கீழ்வெண்மணிக்குச் செல்லுமாறு பணித்து விட்டார். என்கிற 'செய்தி' தெரிந்து விட்டது. சில மேல் விவரங்கள் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு நானும் சில சக நிருபர்களும் அண்ணாவைச் சந்திக்க விரும்புவதாகச் சொல்லி அனுப்பினேம்.

மாடியில் நான் கண்ட அந்தக் காட்சி என் கண்களைக் குளமாக்கியது. அமெரிக்காவில் அறுவை சிகிச்சை பெற்றுத் திரும்பியிருந்த நிலையில் இருந்த அண்ணா கழுத்தை கம்பளத் துண்டால் போர்த்திக்கொண்டு தம் படுக்கையில் அமர்ந்தபடி எங்களுக்குப் பேட்டி தந்தார்.

அண்ணா சொன்ன தகவல்களுக்கு மேல்— நாங்களாகச் சேகரித்திருந்த வேறு சில தகவல்களையும் அண்ணாவிடத்திலே கூறி, இவை உண்மைதானு என்று கேட்டோம்.

தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவரோடு தொடர்பு கொண்டு பிறகு கூறுகிறேன்; மீண்டும் ஒரு மணி நேரம் கழித்து வாருங்கள் என்ருர்.

அப்போது அவர் இருந்த நிலையில்— இதை ஏன் கேட்டோம் என்ற உணர்வு எங்களுக்கு ஏற்பட்டது.

''நீங்கள் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்; நாங்கள் விசாரித்துக் கொள்கிருேம்'' என்று சொன்னேம்.

கீழ்வெண்மணியால் எங்கள் நெஞ்சங்களில் இருந்த உணர்ச்சியைக் காட்டிலும் ஓராயிரம் மடங்கு அந்த அருமந்தத் தலைவனின் நெஞ்சம் பாதிக்கப்பட்டிருந்தது.—அவர் பேசும்போது அவர் நா தழுதழுத்தது; அவர் கண்களில் அன்று நாங்கள் கண்ணீரைக் கண்டோம்.

அன்று அண்ணா உறங்கவில்லை. ஓய்வு கொள்ளவில்லை. அண்ணா மீண்டும் வரச் சொல்லி விட்டார் என்பதற்காக ஒரு மணி கழித்து நாங்கள் போன போது— அண்ணா அங்கிருந்தபடி தாமே விசாரித்தறிந்த உண்மைகளை எங்களுக்குத் தெரிவித்தார். நாங்கள் அவற்றை மக்களுக்குத் தெரிவித்தோம்.

செய்தியாளர்களிடத்தில் அண்ணா காட்டிய பரிவுக்கும், பாசத்துக்கும் அடிப்படைக்காரணம் ஒன்றுண்டு.

அவர் உழைக்கும் பத்திரிகையாளரின் நண்பர். அவர் ஒரு உண்மையான உழைக்கும் பத்திரிகை ஆசிரியர்.

# இதயத்தில் பொறிக்கப்பட்ட எழுத்து!



சில சட்டங்கள் ஐந்தாண்டுகள் வரை இருக்கும். வேறு சில சட்டங்கள், பத்தாண்டுகள் இருக்கும்; பிறகு மாற்றப்படக்கூடும்.

ஆனல் இனி தமிழகத்தையாள எந்தக் கட்சி வந்தாலும் சரி; காங்கிரசாரே மீண்டும் வந்தாலும் தமிழ் நாடு என்ற பெயர் மாற்றத் தீர்மானத்தை மாற்றுவது ஒருக்காலும் நடக்காது. அவ்வளவு பெரிய காரியம் இது.

இது மணலில் எழுதப்பட்ட எழுத்தல்ல; கல்லிலே பொறிக்கப்பட்டதுமல்ல— தமிழ் மக்களின் இதயத்திலே பொறிக்கப்பட்டது. வரலாற்று நிகழ்ச்சிகள் என்ருல் இவற்றைத்தான் கூறுவார்கள்.

காங்கிரசுக்காரர்கள் ஒரு காலத்தில் தலைகவிழ்ந்து அண்ணுதுரை செய்ததை நாமே செய்திருக்கலாமே என்று எண்ணுகிற போது— அந்த எண்ணம் எழுகின்ற போது—தமிழகத்தை தி.மு.க தான் அரசாளுகின்றது என்ற எண்ணமே ஏற்படும்.

மக்களை ஆளுவது மட்டும் ஆட்சி அல்ல. மனதை ஆளுவதுமாகும். அதுதான் இன்றைய நிகழ்ச்சி!

**—தமிழ்நாடு பெயர் மாற்ற விழா**

*(1–12–1967)*

# தொடுத்ததை முடித்தோம், அண்ணா!

கவிஞர் கா. வேழவேந்தன் எம்.எல்.ஏ

அண்ணனே! அறிவே! மூச்சே!
ஆற்றலே! முதலே! ஏறே!
எண்ணமே! எழிலே! எங்கள்
ஏற்றமே! இதயப் பாட்டே!
கண்ணான இறையே! வந்த
காலத்தின் பரிசே! நீங்கள்
மண்ணுக்குள் மறைந்தா போனீர்?
'மழைகண்ட விதை' நீர் அன்றோ?

ஆயிரம் பணிகள் செய்ய
அற்புதக் கருத்தைச் சொன்னீர்!
'பாயிரம்' முடிவ தற்குள்
பறந்ததேன் எங்கோ? சொந்தத்
தாயகம் செழிப்ப தற்குத்
தலைமையை ஏற்றே ஆள
நாயகர் கலைஞர் வந்தார்;
நற்பணி தொடர்ந்த திங்கே!



விழிமூடி உறங்கு கின்ற
வேந்தரே! கொஞ்ச நேரம்
விழிகளைத் திறந்து பாரீர்!
'வேதனைக் கூவம்' இன்றோ
எழிற்காட்சி நல்கும்; அங்கே
எத்தனைப் படகின் ஓட்டம்!
பழித்திட்ட குருடர் கூட்டம்
பாய்போட்டே உறங்கி விட்டார்!

உயர்ந்தவர், தாழ்ந்தோர் என்ற
உப்பிலாக் கொள்கை தன்னை
அயராமல் சாடி வந்த
அண்ணலே! கலைஞர் இன்றோ
தயங்காமல் தன் பிள்ளைக்கே
தாழ்ந்திட்ட குலத்துப் பெண்ணை
வியன்மணம் செய்யும் காட்சி
மேதினி காணக் கண்டோம்!



பயிர்த்திட்டப் புதுமை யாலே
'பசுமையின் புரட்சி' கண்டோம்!
வயிறார உணவைக் காணும்
மாநிலம் நமதே அண்ணா!
அயல்வாழும் மாநி லத்தார்
அரிசிக்கே அணுகு கின்றார்!
உயிர் வாழ உண வளிக்கும்
ஒப்பிலாப் பெருமை பெற்றோம்!

ஒண்டிடும் குடிசை தன்னை
உலுத்தர்கள் கொளுத்தும் போது
மண்டிடும் துயரத் தாலே
மனம் நொந்து கிடந்தீர் அண்ணா!
உண்டான குடிசை யெல்லாம்
உயர்ந்திடும் மாடி வீடாய்
எண்டிசைப் புகழ் பரப்ப
எழுந்தன; எழுந்து பாரீர்!

மிட்டாக்கள், மிராசுக் கூட்டம்
மிடுக்குடன் வாழ்ந்த மண்ணில்
சட்டத்தால் சமத்துவத்துச்
சரித்திரம் எழுது கின்றோம்!
குட்டுதல், கண்டு, கண்டு
குனிந்திட்ட குப்பன் இன்று
பட்டாக்கள் பெற்ற தாலே
பாய்கின்ற வேங்கை யானான்!

தொழிலாளி 'முத'லை ஆளத்
துவக்கினோம் புதிய திட்டம்!
உழுபவன் உரிமை கொள்ள
உதித்தது புரட்சிச் சட்டம்!
'இழிநிலை அரிசன்' என்ற
எக்காளம் தகர்ப் பதற்கே
தொழும்கோயில் அறப் பணிக்கே
தொகையாக நியமிக் கின்றோம்!

குருடர்கள் விழியைக் காணக்
குறைவிலாத் திட்டம்; வாழ்க்கை
இருண்டதோர் நிலையைப் போக்க
இரவலர் வாழ்வுத் திட்டம்
இருக்கின்ற மனிதன் தன்னை
இழுக்கின்ற மனித னுக்குத்
திருப்பத்தை அளிக்கும் திட்டம்!
செப்பிட இடமும் உண்டா?

கொடியிலே உம்மைப் போட்டுக்
கொள்கையை விற்று விட்ட
வடுபெற்ற துரோகக் கும்பல்
வம்புகள் செய்தபோதும்
எடுத்து நீர் தந்தபாட்டை
யாம் பாடத் தயங்கு வோமா?
தொடுத்தவை முடித்தோம், அண்ணா
சுடரே! நீர் காண வாரீர்!

* * *

நாளைய வரலாறு நமக்காக......!

தமிழகம் ஒரு புதிய பொற்காலத்தை
உருவாக்கி வருகிறது —
ஒப்பற்றப் பணிகளால்!

இன்றையத் தலைமுறைக்கு நன்மை நல்க
நாளையத் தலைமுறைக்கும் நல்வாழ்வு அளித்திட
தமிழகத்தில் பொற்காலம் அமைந்திட
நாம் ஆற்ற வேண்டிய பேருதவி

**அளவான குடும்பம்**

சீரான வாழ்வுக்கு மட்டுமல்ல

**சிறு குடும்பம் —**

செழித்திடும் நன்மைகளை
நாட்டில் நிலைத்திடச் செய்ய
அமையட்டுமே அளவான குடும்பம்!

**அடுத்தக் குழந்தை இப்போது வேண்டாம்**
**இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்**

குடும்பநலத்துறை, தமிழ்நாடு அரசு.

# அருள்மிகு கொளஞ்சியப்பர் திருக்கோயில்,

**மணவாளநல்லூர், விருத்தாசலம் வட்டம்.**

முருகன் குடிகொண்ட இக்கோயில் ஓர் பிரார்த்தனைத் தலம். பக்தர்கள் நினைத்ததை முடிக்கும் கொளஞ்சியப்பருக்கு கோழி காணிக்கை செலுத்துவதும்; எடுத்ததை கொடுக்கும் கொளஞ்சியப்பருக்கு முடி காணிக்கை செலுத்துவதும் பொருள் ஏதும் காணுமற்போயின் அவற்றை மீட்டுக் கொடுக்க கொளஞ்சியப்பருக்கு பிராது எழுதுவதும் நோயுற்ரோர் நோன்பு கொண்டு காவடி எடுத்தலும் நல்லன வேண்டுவோர் தான்யங்களும் பிறபொருளும் பணமும் காணிக்கை தருவதும் இத்திருக்கோயில் சிறப்பு.

கல்விக்கண்ணை திறந்துவைக்க 3 லட்ச ரூபாயும் புறக்கண்ணை திறக்க கண்ணொளி திட்டத்திற்கு ரூ. 35 ஆயிரமும் கொடுத்துள்ள இத் திருக்கோயிலில் முன்மண்டபம், சுற்றுப் பிரகாரம், கோபுரம் கட்டவும் ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

எழுச்சிமிகு கொளஞ்சியப்பரின் எழில்காண வாரீர்.

அருபமான முருகனின் அருள்பெற வாரீர்.

**இங்ஙனம்,**

T. S. முருகேசன், எம்.ஏ., பி.எல்.,
**அறங்காவலர் குழுத் தலைவர்.**

**V. S. வெங்கடாசலம்,**
**நிர்வாக அதிகாரி.**

**அறங்காவலர்கள் : N. இராசவேலு, M. சாமிதுரை, P. கலியன், D. இராசவேலு.**

சக்தி அளிக்கும் உணவு சர்க்கரை.

நாட்டின் சுகாதாரத்திற்கு இது அவசியம் தேவை.

நாங்கள் கிரேட் D-30 மற்றும் E-30 "சூரியகாந்திப் பூ" மார்க் உயர்ந்த ரகத் தூய வெண்ணிறச் சர்க்கரை தயாரிக்கிறோம்.

இன்று நாட்டில் சர்க்கரை தயாரிக்கும் ஆலைகளில் முதலாவதாகத் திகழ்கிறது அருணா ஷுகர்ஸ். இப்பொழுது நாள் ஒன்றிற்கு 3000 டன்களாக உயர்ந்திருக்கும் எங்களது கரும்பு அரவை சக்தியை அடுத்த ஆண்டில் நாள் ஒன்றிற்கு 4000 டன்களாக உயர்த்த இருக்கிறோம்.

எங்களது சர்க்கரைப் பாகு கால்நடைத் தீவனம், மருந்து தயாரிக்கும் தொழில், மற்றும் தொழிற்சாலைகளுக்குத் தேவையான மதுசாரம் (ALCOHOL) ஆகியவற்றிற்கு மிகவும் சிறந்தது.

ARUNA

## அருணா ஷுகர்ஸ் லிமிடெட்,

பதிவு அலுவலகம்:
"மெக்கோ ஹவுஸ்", 5-வது மாடி,
11-A/1, மவுண்ட் ரோடு, சென்னை-600002
சர்க்கரை ஆலை: பெண்ணாடம், தென்னாற்காடு மாவட்டம், தமிழ்நாடு.



## சிட்கோ

"இன்றைய உடைமை நாளைய உரிமை" – பலன் பெறுவது நீங்கள், கடன் வழங்குவது சிட்கோ
எங்கள் திட்டங்கள் உங்கள் நலனுக்கே

உதவிக்கான விதிமுறைகள்.

| சிட்கோவின் புதிய கடன் திட்டம். | இயந்திரம் வாங்க | தொழிற் கூடங்கள் அமைக்க |
|---|---|---|
| நிலையான சொத்துக்களில் 75% தொகை | ரூ. 25000/- வரை 5% முன் பணம் கட்டவேண்டும். | சிட்கோ நிலத்தில் 5% முன் பணம் கட்டவேண்டும். |
| | ரூ. 25000/-க்குமேல் 10% முன்பணம் கட்டவேண்டும். | சொந்த நிலத்தில் 10% முன் பணம் கட்டவேண்டும். |
| திருப்பிச் செலுத்துதல் — 10 ஆண்டுகளுக்கு மேற்படாமல் | 6 ஆண்டுகளுக்கு மேற்படாமல். | 8 ஆண்டுகளுக்கு மேற்படாமல். |
| குறைந்த வட்டி | | |

மேலும் விபரங்களுக்கு தொடர்புகொள்க:—

TAMIL NADU SIDCO

## தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம்


112, அண்ணா சாலை, சென்னை-600006

கிளைகள்:- வேலூர், கோவை, திருச்சி, மதுரை, திருநெல்வேலி, தர்மபுரி (திறக்கப்படவிருக்கிறது.)

# உங்களுக்குத் தெரியுமா?

## உங்களுக்குத் தெரியுமா?

தமிழ்நாடு அரசு பரிசுத் திட்டத்தின் மூலம் கிடைக்கும் வருவாய் நாடு செழிக்க உதவும் மக்கள் நல்வாழ்வு திட்டங்களிலேயே செலவிடப்படுகிறது.




## உங்களுக்குத் தெரியுமா?

ஒவ்வொரு மாவட்டத்திலும் திரட்டப்படும் தொகை அந்த மாவட்டத்திலேயே கிராம நலத் திட்டங்களில் செலவிடப்படுகிறது.

## உங்களுக்குத் தெரியுமா?

இத்திட்டத்தில் திரட்டப்படும் வருவாய் மருத்துவமனைகள் மற்றும் பள்ளிகளை கட்டவும், சேரிகளை சீரமைக்கவும் மற்றும் பிச்சைக்காரர் மறுவாழ்வுக்கும் பயன்படுத்தப்படுகிறது.

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு ஒன்றை வாங்குங்கள். உங்களுக்கும் நலிவுற்ற உங்களது சோதரர்களுக்கும் நல்வாழ்வு அளிக்க அது உதவும்.
உங்களுக்கு ரூ. ஒரு லட்சம் பரிசு கிடைக்கும் வாய்ப்பும் உள்ளது.

வெளியீடு: இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2

# நவம்பர்

வெளியீடு


## நவராதா


அளிக்கும்...

# ராதா

திரைக்கதை · டைரக்ஷன்

A.C. திருலோகசந்தர் M.A





படத்தொகுப்பு / கந்தசாமி

ஸ்டில்ஸ் / ப.ஈ.ரவீந்திரன்

ஒளிப்பதிவு / தம்புராஜ்

இசை / சங்கர்-கணேஷ்

உரையாடல் / 'காரைக்குடி' நாராயணன் /

பாடல்கள் / வாலி /

அலை அடித்துக் கொண்டிருக்கும் கடற்கரையோரம் மீளாத் துயில் கொண்டிருக்கும் அண்ணன் எழுந்து வந்து, தமிழ்நாட்டைக் காண விரும்பி நடை போடுகிறார். எதிரே கழகத் தோழன் தங்கத்தைக் கண்டு மெய் சிலிர்க்க அணைத்து குடும்பநலம் விசாரித்து விட்டு, சென்னையின் சிங்காரத் தெருக்களில் உலா வருகிறார். அண்ணன் பிறந்த செப்டம்பர் திங்களில் இக் கற்பனை கலந்த சிந்தனைத் தேரோட்டம் போகிறது. அந்தக் கற்பனைத் தேரோட்டச் சுவடுதான் இந்த ஓவியம்.



# காட்சி 1


இடம்: கடற்கரைச் சாலை.

[அண்ணனும் தங்கமும் நாட்டின் அரசியலை ஆராய்ந்தவாறு நடந்து கொண்டிருக்கிறார்கள்.]

அண்ணா: தங்கம்...! அதிக நேரம் நடந்து விட்டேன். ஏதாவது வண்டி வருகிறதா —பார்!

தங்கம்: நீங்கள் இங்கேயே நில்லுங்கள்... அண்ணா! நான் போய் வண்டி கொண்டு வந்துவிடுகிறேன்.

அண்ணா: வேண்டாம் தம்பீ! நான் நீண்ட நாள் தனிமையில் இருந்துவிட்டேன்! என் வாழ்நாளில் ஈரோட்டில் இருந்த போதும், சென்னைப் பெத்துநாயக்கன் பேட்டைப் பகுதியில் உலவியபோதும், காஞ்சிபுரத்தில் வாழ்ந்த போதும், நுங் கம்பாக்கத்தில் இருந்தபோதும்...எப்போதும் தம்பிமார் புடைசூழ இருப்பேன்! இரவு நெடுநேரம் அளவளாவி மகிழ்வேன்! என் தம்பிமார்கள் தூக்கக் கலக்கத்தால் இயலாமல் சாய்கிறவரை பேசிக் கொண்டிருப்பேன்.. அதையெல்லாம் மறந்துவிட்டு ஏறத்தாழ நான்கு ஆண்டுக் காலம் தனிமையில் இருந்துவிட்டேன்! போதுமப்பா.. அந்தத் தனிமை! உன்னை நான் ஒரு நிமிடம்கூடப் பிரியமாட்டேன்! ஆமாம். அதோ, டாக்சி வருவதுபோல் தெரிகிறது! வரட்டும்!



"மனிதக் கொடுமை நீக்கவந்த சைக்கிள் ரிக்ஷாக்கள்!"

# அண்ணா மீண்டும் திரும்பி வந்தால்...

— அடியார் —



தங்கம்: அண்ணா! ரிக்ஷாகூட வருகிறது!

அண்ணா: ரிக்ஷாவா? உன் அண்ணன் அந்த ரிக்ஷாவில் ஏற வேண்டும் என்று எதிர் பார்க்கிறாய்? தம்பீ...உன் அண்ணன் உனக்கென்று ஒரு தத்துவத்தை விட்டுச் சென்றிருக்கிறான். அது மனிதாபிமானத் தத்துவம்! மனிதனை மனிதன் இழுக்கும் கை ரிக்ஷா—அந்த மனிதாபிமானத் தத்துவத்திற்கு எதிரானது!

தங்கம்: அண்ணா! கை ரிக்ஷாவைப் பற்றி நான் சொல்லவில்லை. சைக்கிள் ரிக்ஷாவைப் பற்றிச் சொல்கிறேன். கைரிக்ஷா இப்போது சென்னையில் இல்லை.

அண்ணா: பின எங்கே இருக்கிறது?

தங்கம்: மியூசியத்தில்!

அண்ணா: என்ன சொல்கிறாய்?

தங்கம்: கைரிக்ஷாக்கள் ஒழிக்கப்பட்டுவிட்டன!

அண்ணா: அந்தத் தொழிலாளிகள் என்ன ஆனார்கள்?

தங்கம்: அவர்களுக்குச் சைக்கிள் ரிக்ஷாக்கள் தரப்பட்டிருக்கின்றன.

[ஒரு புதிய சைக்கிள் ரிக்ஷா வருகிறது. அதைத் தங்கம் சுட்டிக் காட்டுகிறான்.]

இதோ...அண்ணா! அந்தப் புதிய ரிக்ஷா! மஞ்சள் வண்ணத்தில் எழிலோடு உள்ள அந்த வண்டியை எவ்வளவு உற்சாகத்தோடும் பெருமிதத்தோடும் 'பழைய கை ரிக்ஷா' தொழிலாளி ஓட்டிச் செல்கிறான் பார்...அண்ணா!

அண்ணா: என்னால் பார்க்க முடியவில்லை!

தங்கம்: என்ன அண்ணா! என்ன ஆயிற்று?

அண்ணா: என்னால் பார்க்க முடியவில்லை! ஆனந்தக் கண்ணீரால் என் கண்கள் குளம் கட்டிவிட்டது. அதனால் பார்க்க முடியவில்லை! எனது மனிதாபிமானக் கொள்கையைப் புரிந்து கொண்டு—நூற்றாண்டு காலமாய் மனித குலத்துக்கு இழிவாய் நடமாடிய கை ரிக்ஷாவை அறவே அழித்து—அந்தத் தொழிலாளருக்குப் புது வண்டிகள் தந்த என் தம்பிமார் ஆட்சியை நான் வாழ்த்துகிறேன்!

தங்கம்: அண்ணா! இதைச் செய்ய வேண்டும் என்ற யோசனை அவர்களுக்கு—குறிப்பாகக் கலைஞருக்கு எப்படி வந்தது?

அண்ணா: தங்கம்!..கருணாநிதி என் தம்பி மட்டுமல்ல; என்னை முழுதும் உணர்ந்தவன்! அதனால்தான் இந்தச் சாதனையை அவனால் செய்ய முடிகிறது! வா... டாக்சி வந்துவிட்டது!

(திரை)



# காட்சி 2

இடம்: தெரு.

[அண்ணாவும் தங்கமும் வருகிறார்கள். எதிரே தொழுநோய் பிச்சைக்காரன்—ஆனால் நல்ல துணிமணியோடு—வருவதுதெரிகிறது. அண்ணா தனது பையிலிருந்து காசு எடுத்து வைத்துக் கொண்டு தயாராக நிற்கிறார்.]

தங்கம்: எதற்கண்ணா, காசு எடுத்து வைத்திருக்கிறீர்கள்?

அண்ணா: அதோ—தொழுநோய் பிடித்த பிச்சைக்காரன்...அவனுக்குப் போடத்தான்.

தங்கம்: (சிரித்து) அவன் வாங்கமாட்டான்.

அண்ணா: ஏன்? அவன் எங்கள் காஞ்சீவரம் பக்கத்தில் இருந்தவன்... அவனுக்குக் காசு போடுவது என் வழக்கம்.

[தொழுநோய்ப் பிச்சைக்காரன் வருகிறான். அண்ணா அவனிடம் காசை நீட்ட அவன் கவனிக்காமல் போய்விடுகிறான்.]

அண்ணா: (மூக்கின் மேல் விரலை வைத்து) அடப்பாவி!...கம்பன் பாடினானே...கொள்வாரும் இல்லை...ஆகவே கொடுப்பாரும் இல்லை என்று. அந்த ஆட்சி வந்துவிட்டதா? (தங்கத்திடம்) ஏம்பா...இது தமிழ்நாடுதானே! இங்கே நடப்பது தி.மு. கழக ஆட்சிதானே?


தங்கம்: ஆமா! அண்ணா! இது தமிழ்நாடு தான்..இங்கே நடப்பது தி.மு.க ஆட்சி தான்! அதுவும் உங்கள் தம்பி கருணாநிதி ஆட்சிதான்!...

அண்ணா: (வியந்து—பின்) சரி...சரி...அந்தத் தொழுநோய்க்காரனைக் கூப்பிடு!

[தங்கம் போகிறான். அண்ணா தனியாகப் பேசுகிறார்.]

(தனியாக) கருணாநிதி! தாய்ப் புலி எட்டடி பாய்ந்தால், குட்டி பதினாறு அடி பாயும் என்பதை நிரூபித்துவிட்டாயே அப்பா! நான் படித்த தமிழக சரித்திரத்தில் கூட இப்படி ஒரு ஆட்சி இருந்ததாகப் படிக்கவில்லையேடா தம்பீ! வள்ளுவன்கூட பிச்சை எடுப்பதைப் பார்த்து பொறுமியிருக்கிறான்; சீறியிருக்கிறான்; சபித்திருக்கிறான் கடவுளை! ஆனால், பிச்சை எடுத்தாலும் படிப்பது நன்று என்றுதான், நம் பழைய பனுவல்கள் பாடியிருக்கின்றன. பிச்சை எடுக்காத நாட்டை கம்பன் கனவிலேதான் கண்டான்; ஆனால் தம்பி, கருணாநிதி...என் கருணாநிதி...என் ...(உணர்ச்சி வசப்பட்டு பேச முடியாமல்) கருணாநிதி! உன் அண்ணன் வாழ்த்துகிறேன்! நீ இருக்கும் திக்கு நோக்கி என் வாழ்த்தையும் பாராட்டையும் அனுப்புகிறேன்...

[தொழுநோய்ப் பிச்சைக்காரனுடன் தங்கம் வருகிறான்.]



''கல்லூரி ஹாஸ்டல்போல் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்கள்''

தொழு: வணக்கம் அண்ணா! வணக்கம்! உங்களைக் கவனியாமல் போய்விட்டேன். மன்னிக்கவும்.

அண்ணா: பரவாயில்லை...பரவாயில்லை! !

தொழு: அண்ணா! நீங்கள் கூப்பிட்டதாக இவர் சொன்னார்...ஓடோடிப் போய் உங்களுக்குப் பிடித்தமான பொடி வாங்கிக் கொண்டு வந்தேன்; இது நான் சம்பாதித்த காசிலிருந்து வாங்கியது! இந்தாருங்கள்!...

அண்ணா: நீ எனக்குத் தருகிறாயா? அதுவும் நீ சம்பாதித்து எனக்குத் தருகிறாயா?

தொழு: ஆம் அண்ணா! எங்களை, கலைஞர் ஆட்சி பிச்சை எடுப்பவர்கள் என்ற நிலையிலிருந்து மாற்றிவிட்டது. இல்லங்கள் இல்லாமல் இருந்த எங்களுக்கு இல்லங்கள் கட்டித் தந்திருக்கிறது...அதோ...எங்கள் இல்லங்கள்!...

அண்ணா: அடடா! அது ஏதோ கல்லூரி ஹாஸ்டல் மாதிரி அழகாக இருக்கிறதே!

தொழு: ஆம் அண்ணா!...அந்த அழகு இல்லங்களில் என்னைப்போல் உள்ளவர்கள் வேலைகூட செய்கிறோம். தினம் இரண்டு ரூபாய் கிடைக்கிறது. கை யேந்தி திரிந்து உண்ட நாங்கள் இன்று எங்கள் கைகளால் உழைத்துச் சாப்பிடுகிறோம், அண்ணா.

அண்ணா: வாழ்க! இப்படி எத்தனை இல்லங்கள் இருக்கின்றன?

தொழு: பரனூர்—உளுந்தூர் பேட்டை, புதுக்கோட்டை, பனமேரிப்பட்டி—மல்லவாடி—போன்ற இல்லங்கள் இருக்கின்றன...இன்னும் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு இல்லங்கள் அமைக்கப் பட இருக்கின்றன. அந்த இல்லங்களை முதல்வர் கலைஞர் இல்லங்கள் என்றுகூட சொல்வதில்லை. ஆலயங்கள் என்று சொல்கிறார்...எங்களைப் பார்த்து நீங்கள்தான் நான் வணங்கும் கடவுள் என்றும் சொல்கிறார்! ஆனால் உண்மையில் அவர்தான் அண்ணா—நாங்கள் வணங்கும் கடவுள்... அண்ணா! நான் வருகிறேன். இல்லம் போக வேண்டிய நேரமாயிற்று.

[போகிறான்.]

அண்ணா: தம்பி!...

[தொழுநோய்க்காரன் திரும்பி வருகிறான்.]

அண்ணா: உன் அன்புக் காணிக்கையைத் தராமல் போகிறாயே!...

தொழு: ஆமண்ணா! மறந்து விட்டேன்.

[என்று பொடி டப்பாவைத் தருகிறான்.]

அண்ணா: சமுதாய மாற்றம் இதுதான். இது வரை சோம்பி இருந்த கரங்கள் உழைக்கத் தொடங்கிவிட்டன. உழைப்பின் பயனை அன்புள்ளோருக்குத் தரத் துவங்கிவிட்டன.

தொழு: (வணங்கி) அண்ணா! இது நான் தங்களுக்குத் தந்த அன்புக் காணிக்கை!

அண்ணா: அன்புக் காணிக்கை மட்டுமல்ல. உங்கள் அண்ணன் எந்தச் சமுதாயம் பற்றிக் கனவு கண்டானோ, அந்தச் சமுதாயத்தின் அடையாளக் காணிக்கை—நினைவுக் காணிக்கை தம்பி! போய் வா.!.

[தொழுநோய்க்காரன் போகிறான். அண்ணாவும் தங்கமும் செல்கின்றனர்.]

## காட்சி 3



இடம்: தெரு.

இருப்போர்: அண்ணா, தங்கம், அம்மையார்.

[அண்ணாவும், தங்கமும் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.]

அண்ணா: ஆமாம்! பேசிக்கொண்டே இந்தப் பகுதிக்கு வந்துவிட்டோமே!...இந்தப் பகுதியில் குடிசைகள் இருந்தனவே... என்ன ஆயிற்று?

தங்கம்: அதோ...இருக்கிறது. பாருங்கள் அண்ணா!



" குடிசைசுள்—கோபுரம்! "

அண்ணு: என்னப்பா விளையாடுருய்: அங்கே ஏது குடிசை? கோபுரம் போல்? வரிசையாக மாடி வீடு இருக்கிறது.

தங்கம்: அதில்தான் முன்பு குடிசையில் வாழ்ந்தவர்கள் இப்போது குடி இருக்கிருர்கள்!...

அண்ணு: என்னப்பா இது? குடிசையில் வாழ்ந்தவர்களுக்கு மாடி வீடா? முன்பு நான் குடிசைகள் தீப்பற்றி எரிவதைக் கண்டு, தீப்பிடிக்காத வீடுகள் கட்டினேன்... என் தம்பி தீப்பிடிக்காத வீடுகள் மட்டுமல்ல; தீபஸ்தம்பம் போல் உயர உயரமான மாடி வீடுகளையே கட்டித் தந்திருக்கிருனே!...

தங்கம்: சென்னையிலுள்ள எல்லாக் குடிசைப் பகுதிகளும் இப்படி ஆகப் போகின்றன, ஏழு வருடத்துக்குள்...

அண்ணு: ஏழு வருடத்திற்குள்ளா...?

தங்கம்: ஆம்! இப்படிக் குடிசைகளை மாற்றி அமைப்பதற்கு ஒரு வாரியம் அமைத்திருக்கிருர்கள். அதற்குப் பெயர் குடிசைமாற்று வாரியம்... அந்த வாரியத்திற்குத் தலைவர் இராம. அரங்கண்ணல்.

அண்ணு: யார்? அரங்கா! பொருத்தமானவன்... பொறுப்புணர்ச்சியும்—பொறுமையும்—பொதுப் பணியாற்றும் பரந்த இதயமும் இன் சொல்லும் நிரம்பியவன்... நிச்சயம் இந்தப் பணி வெல்லும்! ஆமாம் தம்பீ! ஒரு சந்தேகம்?

தங்கம்: என்ன அண்ணு?...

அண்ணு: இப்படிப் பல நூறு ஆண்டுகளாய்த் தீராத பிரச்சினைகளைத் தீர்த்து—ஏழை எளிய மக்களின் கண்ணீரைத் துடைக்கும் இந்த ஆட்சியையா சிலர் ஒழிக்க வேண்டும் என்கிருர்கள்?

தங்கம்: ஆம் அண்ணு... ஆம்...

[ஒரு அம்மையார் வருதல்.]

அண்ணு: தாயே! கொஞ்சம் நில்லுங்கள்! நீங்கள் இந்த மாடியிலா குடியிருக்கிறீர்கள்?

அம்மை: ஆமப்பா... இங்கேதான் குடி இருக்கிருேம்...

அண்ணு: சவுகரியமாக இருக்கிறதா?

அம்மை: இந்தாப்பா... நான் சத்தியமாச் சொல்றேன். நான் பிறந்ததும் குடிசையிலே; நான் வாழ்க்கைப் பட்டதும் குடிசையிலே; நான் பிள்ளைகுட்டி பெத்ததும் குடிசையிலே; கல்லு வீட்டை தூரமா நின்னு பார்த்திருக்கிருேமே தவிர, உள்ளே போய்க் குடித்தனம் நடத்தினது இல்லே... ஆனு... இந்த மவராசன் ஆட்சியிலே, நாங்க கல்லு வீட்டிலே அதுவும் மாடி வீட்டிலே இருக்கிருேமப்பா... அந்தக் கருணுநிதி மகராசன் நல்லா இருக்கணுமப்பா...

[என்று சொல்லிப் போகிருர்.]

அண்ணு: தம்பீ! அந்த அம்மையார் பாதையைக் கடக்க முடியாது! நீ கொஞ்சம் போய் உதவி செய்!

[தங்கம் போகிருன். அண்ணு தனியாக நிற்கிருர்.]

அண்ணு: கருணுநிதி! உன் ஆட்சியைக் கவிழ்க்க ஆயிரம் பேர்—அணி தேர்ப்புரவி ஆட்பெரும் படையோடு வரட்டும்... இந்த ஏழைகளின் இதயத்திலிருந்து ஒரு நாள்—ஒரு கணம் உன்னை மகராசா, என்று வாழ்த்தி வெளிவருகிறதே... அந்த ஒரே ஒரு சொல்லுக்குமுன், அவர்களின் அக்ரோணி சேனை தூளடா தூள்!...

## காட்சி 4



இடம்: வீடு.

இருப்போர்: அண்ணு, கிழவி, வாலிபன், தங்கம்.

[அண்ணு தனியே உட்கார்ந்து வெற்றிலே போட்டுக் கொண்டிருக்கிருர். ஒரு கிழவியும் கண் தெரியாத ஒரு வால்பனும் வருகிருர்கள்.]

கிழவி: தங்கம்... தங்கம்... (அண்ணுவிடம்) ஏம்பா தங்கம் இல்லே?..

அண்ணு: உள்ளே சாப்பிட்டுக் கொண்டிருக்கிருர், உட்காருங்கள்!...

[வாலிபனே மெதுவாகப் பிடித்து உட்கார வைக்கிருர் கிழவி.]

கிழவி: ஏம்பா... உன்னே நான் எங்கோ பார்த்த மாதிரி இருக்குது. ஆனு இந்த வீட்டிலே பார்த்தது இல்லியே! நீ ஏதாவது உறவா?...

அண்ணு: ஆமா... இந்தத் தமிழகத்திலுள்ள நாலரைக் கோடித் தமிழர்களுக்கும் நான் உறவுதான்...

கிழவி: என்ன உறவு?...

அண்ணு: அண்ணன் உறவு! ஆமா, தாயே! அந்தப் பையனே நீங்கள் உட்கார வைக்கிறீர்களே... என்ன காரணம்?...

கிழவி: ஏம்பா அதைக் கேட்கறே! இவன் பிறந்ததிலிருந்து கண் தெரியாது. வாலிப வயசிலே இருட்டையே பார்த்தவன்... இன்னிக்குத்தான் அவனுக்கு வெளிச்சம் கிடைச்சுது.

அண்ணு: வெளிச்சமா? அது எப்படி? ...

கிழவி: இப்போ தான் கண்ஒளி வழங்கு விழா நடத்தருங்களே!

அண்ணு: அப்படீன்னு, என்னம்மா?

கிழவி: என்ன இப்படிக் கேட்கறே... நீ இந்த நாட்டிலேதானே இருக்கே?

அண்ணு: ஆமாம்மா! இந்த நாட்டிலேதான் இருக்கிறேன். ஆனு, அந்தக் கடற்கரையோரம், வெண் மணற் பரப்பில், வெகு காலமாக மௌனத் தபசு இருந்துவிட்டேன்... ஆகவே இங்கு நடந்தது பல தெரியாது. சொல்லுங்கள்... கேட்கிறேன்.....

கிழவி: அப்படியா? முதல்லே இருந்து உனக்கு விளக்கமா சொல்றேன்... நம்ம நாட்டிலே பலபேர் கண்ணில்லாம இருக்காங்க... என் மாதிரி அரை குருடு, கால் குருடு... இதோ என் பையன் மாதிரி முழுக் குருடு இப்படிப் பல பேரு இருக்காங்க! இவுங்களுக்கெல்லாம் கண் குடுக்கணுமுன்னு ஒரு மகராசன் நெனேச்சான்!...

வாலி: அம்மா... அம்மா! மீதியை நான் சொல்றேன் அம்மா...

வால்: சார்! எங்களைப் போல் இருக்கிறவர்களுக்கு முன்னே யெல்லாம் கண் சிகிச்சை செஞ்சாங்க! ஆனு அதுக்குச் செலவாகும்; பல ஏழைகளினுலே அது முடியலே! ஆனு இப்போ நம்ம கலேஞரும், பேராசிரியரும் இலவசமாக ஏழைகளுக்குக் கண்ணொளி வழங்குற திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அந்தத் திட்டப்படி முதல்லே டாக்டர்கள் ஒவ்வொரு கிராமமாகப் போயி, கண் கெட்டிருப்பவர்களைப் பார்க்கிருங்க! அப்புறம் அவங்களே அழைச்சுக்கிட்டுவந்து சிகிச்சை செய்யருங்க... சிகிச்சை மட்டும் இல்லீங்க... இதோ பாருங்க... கண்ணுடி... இதுவும் இலவசமாத் தர்ருங்க! நான் பிறந்ததிலே இருந்து இந்த உலகத்தையே பார்த்தது இல்லீங்க. இன்னிக்கு எல்லாச் சிகிச்சையும் முடிந்து கண்ணுடியும் தந்தாங்க... அந்தக் கலேஞர் கையாலே நான் என் கண்ணுடியை போட்டுக்கிட்டு, முதல் தடவையா இந்த உலகத்தைப் பார்க்கலாமின்னு நெனேச்சேன். என் ஆசை நிறைவேறலே... ஆனு, எங்க தங்க மாமா இருக்கிருரே, அவர் கையாலே கண்ணுடி மாட்டிக்கணும், அதுக்குப் பிறகு உலகத்தைப் பார்க்கணுமின்னு ஆசை!... அதனுலேதான் ஓடோடி வந்தேன்... எங்கே தங்கம் மாமா!..


அண்ணு: வந்துவிடுவார்... சாப்பிட்டுக் கொண்டிருக்கிருர். நீங்கல்லாம் சாப்பிட்டீங்களா?

வாலி: இல்லே... முதல்லே தங்கம் மாமா கையாலே கண்ணுடியை மாட்டி இந்த உலகத்தைப் பார்க்கணும். அப்புறம் அவர் சிறு வயசிலே எனக்குச் சோறு ஊட்டி விடுவார். அது மாதிரி ஊட்டி விடணும்.


கிழவி: இதுக்கெல்லாம் நாம அந்த கருணுநிதி மகாராசனேத்தான் கையெடுத்துக்



"சிகிச்சை முடிந்து இலவசக் கண்ணுடி"











அண்ணா அரசினர் மருத்துவமனை







அறிஞர் அண்ணா
அரசினர் கலைக்கல்லூரி செய்யாறு




அறிஞர் அண்ணா பாலம்



" சீரணியின் காணிக்கை " —



" கூவம் நதியின்மிசை படகினிலே.... "

கும்பிடணும்! அவரு தன்னோட பிறந்த நாளை முதல் தடவை—பிச்சைக்காரர்களுக்கு மறு வாழ்வு தர்றதுக்காக அர்ப்பணித்தார். இப்போ கண் இல்லாதவர்களுக்கு கண் தர அவர் பிறந்தநாளைப் பயன்படுத்துணுமனு பேராசிரியா கேட்டுக்கிட்டாரு. கலைஞரும் அதுக்கு ஒத்துக்கிட்டாரு. அதனால் எங்களை மாதிரி இருக்கிறவர்களுக்குக் கண் கிடைச்சுது.

[அண்ணா ஆனந்தக் கண்ணீரைத் துடைத்துக் கொள்கிறார்.]

கிழவி: ஏன் நீங்க இப்படி ஆனந்தக் கண்ணீர் விடறீங்க? உங்களுக்குக் கருணாநிதி என்ன வேணும்? ..

அண்ணா: அவனை எடுத்து வளர்த்து ஆளாக்கியவனே நான்தானம்மா... அவன்கூட அடிக்கடி என்னை ஆளாக்கிய அண்ணன் என்பானே...அது நான்தான் தாயே!

கிழவி: கண் தந்த எங்க கருணாநிதியை வளர்த்தது நீங்களா?

வாலி: (உணர்ச்சி வயப்பட்டு) ஐயா! ஐயா! அப்போ உங்க கையாலே என் கண்ணாடியை மாட்டி விடுங்கய்யா...!

[தங்கம் வருகிறான்.]

தங்கம்: (வந்து) நானே சொல்கிறேன்... அண்ணா, நீங்களே கண்ணாடியை மாட்டி விடுங்கள்!

கிழவி: ஆமய்யா! நீங்களே செய்யுங்கள்.

வாலி: ஐயா...ஐயா...மாமாவே சொல்லிட்டார்; எங்கம்மாவும் சொல்லிட்டாங்க நீங்களே கண்ணாடியை மாட்டிவிடுங்கள் ஐயா!...

[பெருமையோடு அண்ணா கண்ணாடியை மாட்டி விடுகிறார். பையன் உலகை உற்றுப் பார்க்கிறான்.]

வாலி: ஆ! உலகம் எவ்வளவு வெளிச்சமா இருக்கு? வெளிச்சம்.. (கிழவியிடம் வந்து) நீங்க பேசுங்க..

கிழவி: என்ன பேசச் சொல்றே?..

வாலி: ஆம்.. நீங்க எங்கம்மா.. (தங்கத்திடம் வந்து) நீங்க பேசுங்க..

தங்க: கண் நல்லாத் தெரியுதா?..

வாலி: ஆ.. நீங்கதான் எங்க தங்க மாமா.. தங்க மாமா.. (அண்ணாவிடம் வந்து) நீங்க? ஆம்.. எனக்கு கண்ணாடி மாட்டி விட்டவர்! எனக்குக் கண் தந்த கடவுள்.. கலைஞரை எடுத்து வளர்த்து ஆளாக்கி (யோசித்து) என்ன சொன்னீங்க.. என்னை ஆளாக்கியவர் என்று அவர் அடிக்கடி சொல்வது என்னைத்தான்னு சொன்னீங்களே.. (யோசித்து) கலைஞர் யாரைச் சொல்வார் அப்படி? அண்ணாவைத்தானே சொல்லுவார்! அண்ணாவைத்தானே சொல்லுவார்! (திடீரென திரும்பி) அப்போ.. அப்போ.. நீங்க அறிஞர் அண்ணா.. (திடீரென காலில் விழுந்து) அண்ணா. அண்ணா.. நான் பாக்கியசாலி! அண்ணா! அண்ணா!..

கிழவி: (கும்பிட்டு) அறிஞர் அண்ணாவா? அதுதான் நான் முதலிலேயே நினைத்தேன்.

வாலி: அண்ணா! எங்க மாமா கையிலே நான் சோறு சாப்பிடணும்மின்னு ஆசைப்பட்டேன்...இப்போ உங்க கையாலே நான் சோறு சாப்பிட ஆசைப்படறேன்.

[தங்கத்தை அண்ணா பார்க்

கிறார். தங்கம் உள்ளே போகிறார்.]

வாலி: இவ்வளவு பெரியவன், இப்படி சின்னக் குழந்தை மாதிரி ஆசைப்படறான்னு பார்க்கிறீங்களா? அண்ணா... இத்தனை நாள் நான் தாயின் வயிற்றுக்குள் இருட்டையே பார்த்திருந்த குழந்தை மாதிரி இருந்தேன். அண்ணா... இன்னிக்குத்தான் உலகத்தைப் பார்க்கிறேன்... இன்னிக்குத்தான் நான் உண்மையான, ஊனமில்லாத குழந்தையா இருக்கிறேன்.. எனக்கு உங்க கையாலே...

[தங்கம் தட்டில் சோறு, தண்ணீர் டம்ளருடன் வர அண்ணா அதை வாங்கி அமர்ந்து]

அண்ணா: வா... உன் ஆசையை நிறைவேற்றுகிறேன், வா...!

[அவன் பக்கத்தில் வந்து உட்கார்ந்ததும் தட்டில் சோற்றைப் பிசைந்து உருட்டி அவன் கையில் தருகிறார். அவன் மகிழ்ச்சியோடு எடுத்து உண்கிறான்.]

அண்ணா: தம்பி! உன்னைப்போல் எத்தனை பேருக்கு சிகிச்சை அளிக்கப் போகிறார்கள்?

வாலி: 'பத்து லட்சம் பேர் இருக்கிறார்கள், என்னைப் போல்... வருடத்திற்கு ஒரு லட்சம் என்று கிச்சை தரப்போகிறார்கள்..

[விக்கிக்கொண்டு புரையேறுகிறது. அண்ணா ஆதுரத்துடன் அவன் தலையில் லேசாகத் தட்டி அவன் வாய் அருகில் தண்ணீர் கொடுக்கிறார்.]

வாலி: இப்போதுதான் அண்ணா புரிகிறது; கலைஞருக்கு கருணையுள்ளம் ஏன் வந்தது என்று?

அண்ணா: ஏன் வந்தது?...

வாலி: ஒரு தாயைப் போல் கருணை காட்டும் நீங்கள் எடுத்து வளர்த்த பிள்ளையல்லவா? அதனால்தான் எங்கள் துன்பமுணர்ந்தார். தாயைப்போல் கருணை காட்டினார்! எங்களுக்குக் கண் தந்தார்! என்ன அண்ணா உங்கள் கண்களில் கண்ணீர்?

அண்ணா: இது ஆனந்தக் கண்ணீரப்பா! வள்ளுவன் சொன்னானே, தான் பெற்ற மகனை இந்த உலகம் சான்றோன் என்று புகழ்கிறபோது ஒரு தாய்—அந்த மகனைப் பெற்றெடுத்த நேரத்தில் அடைந்த சந்தோஷத்தைவிட அதிகமான சந்தோஷத்தை அடைவாள் என்று... அந்த வள்ளுவன் சொன்ன தாயைப்போல் நான் இன்று... என் தம்பி கருணாநிதியைப் புகழ்கிறபோது பெருமை அடைகிறேன். பூரிக்கிறேன். அடக்க முடியாத மகிழ்ச்சி அடைகிறேன். ஆனந்தக் கண்ணீர் வடிக்கிறேன்.



## காட்சி 5

இடம்: கிராமம்.

[அறிஞர் அண்ணாவும் தங்கமும் வண்டியிலிருந்து இறங்கி நடந்து வருகிறார்கள்.]

தங்கம்: என்ன அண்ணா இது? திடீரென சென்னையை விட்டுக் கிராமத்திற்குப் புறப்பட்டு வந்துவிட்டீர்கள்? என்ன காரணம்?

அண்ணா: தம்பிகளைச் சோதிக்கத்தான்!

தங்கம்: தம்பிகளைச் சோதிக்கவா?

அண்ணா: ஆம்; எனக்குப் பின் என் தம்பிமார்கள் ஆயிரமாயிரம் சாதனைகள் செய்திருக்கிறார்கள். காவல் துறையில்—கல்வித் துறையில்—நலத்துறையில்—சட்டத் துறையில்— விவசாயத் துறையில்—உணவுத் துறையில்—உள்ளாட்சித் துறையில்—கூட்டுறவுத் துறையில் பலப்பல சாதனைகளைச் செய்திருக்கிறார்கள். படித்தேன்; பூரித்தேன்! ஆனால்...

தங்கம்: என்ன ஆனால்?

அண்ணா: செய்த சாதனைகள் மக்களை சென்றடைந்திருக்கிறதா—எனச் சோதிக்கவே இங்கு வந்தேன்!

தங்கம்: பல சாதனைகளால் மக்கள் பெற்ற இன்பத்தை உங்கள் கண்களாலேயே கண்டீர்களே அண்ணா!

அண்ணா: உண்மைதான்! மெத்தவும் மகிழ்ச்சிக்குரிய உண்மைதான்! ஆனால்... அவர்களது சாதனைகள் கிராம மக்களுக்குச் சென்று சேர்ந்ததா—எனக் கண்டறியும் போதுதான் என் மனம் முழுமையான ஆறுதல் அடையும். அதற்காகத்தான்

இந்தக் கிராமத்திற்கு வந்திருக்கிறேன். [ஒரு விவசாயி வருகிறார்.]

அண்ணா: வணக்கம்.

விவசாயி: வணக்கங்க! உங்களை எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கிறதே?

தங்கம்: அவர்தான்...

அண்ணா: பொறு தம்பி! (தங்கத்திற்குஜாடை காட்டி, கையமர்த்தி) நான் காஞ்சிபுரத்துக்காரன்.

விவ: அடடே...எங்க அண்ணா ஊரு!

தங்கம்: எங்க அண்ணா ஊரும் அதுதான்!

அண்ணா: (தங்கத்திடம்) கொஞ்சம் சும்மா இருப்பா... தங்கம்! (விவசாயியைப் பார்த்து) எப்படி...விவசாயம் எல்லாம்?

விவசாயி: வெள்ளைச் சோளம் வெடிச்ச மாதிரி உண்மையைச் சொல்லணுமின்னா... நாங்க நிம்மதியாத் தூங்கறோம்!

அண்ணா: என்ன சொல்றீங்க?

விவ: ஐயா...நான் ஒரு விவசாய குத்தகைகாரன்! ஆனா, என் நிலைமைக்கும் கீழே இருக்கிறவங்க—விவசாயக் கூலிகள்! அவுங்க வேலை செய்யற இடம் மட்டுமில்லே; அவுங்க குடியிருக்கிற இடம்கூட மிராசுதாரருக்குச் சொந்தம். எந்த நேரத்திலே—எப்போ வெளியே போகச் சொல்வாங்களோன்னு பயந்து பயந்து வாழ்ந்தோமுங்க! ஆனால்... இந்த ஆட்சியிலே அந்தப் பயம் போய்விட்டது.

அண்ணா: எப்படி?

ச: அவுங்க குடியிருக்கிற இடத்தை அரசாங்கமே வாங்கி விவசாயக் கூலிகளுக்குத் தத் தர்ற சட்டத்தைக் கொண்டுவந்தாங்க! இன்னிக்கு அந்த விவசாயக் கூலிகள்—இது நம்ம வீடுங்கற சந்தோஷத்தோட நிம்மதியாத் தூங்கறாங்க!



“ இலவச வீட்டுமனைப் பட்டா ”

அண்ணா: ஆமாம் விவசாயக் கூலிகள்தானே நிம்மதியாத் தூங்கறாங்க? உங்களைப்போல குத்தகைதாரர்கள்?

விவ: காலமெல்லாம் பிறருக்காகவே இந்தப் பூமியிலே உழுது விதைச்சு—அறுத்துக் கொடுக்கறவங்க நாங்க! அந்தப் பூமியே கூட எங்களைக் கண்டாத்தான் சிரிக்கும்! ஆனா.. அந்தப் பூமி மட்டும் எங்களுக்குச் சொந்தமில்லாமலேயே இருந்தது! இந்த அரசாங்கம் எங்களைப்போல குத்தகைதாரர்களுக்கு நிலத்தைச் சொந்தமாக்கும் சட்டம் கொண்டுவந்திருக்குதாம்! அவுங்க நல்லா இருக்கணும்?!

அண்ணா: நீங்க மட்டும் முன்னேறினாப் போதுமா? இந்தக் கிராமம் முழுதும் முன்னேறியிருக்குதா?

விவ: என்ன அப்படிச் சொல்லிட்டீங்க? விவசாயி, அதிகாரிகளைத் தேடி ஓடறது அந்தக் காலம்! விவசாயிகளுக்கு உதவி செய்ய அதிகாரிகள் ஓடோடி வர்றது இந்தக் காலம்! உரமா—கடனா—எது வேணும்? சொடுக்குப் போட்டாப் போதும் பறந்து கிட்டு வருதுங்க!

அண்ணா: பள்ளிக்கூடம்—படிப்பு இதிலெல்லாம் முன்னேற்றம் இருக்கா?

விவ: ஏன் இல்லே? படிப்பு வாசனையே இல்லாத என் குடும்பத்திலேயே மூணு பேர் காலேஜ் போயிருக்காங்க. அதிலும் பரம்பரை பரம்பரையாகப் பின்தங்கியிருக்கிற எங்களுக்குத்தான் முதலிடங்க!

அண்ணா: இவ்வளவுதானா உங்க முன்னேற்றம்?

விவ: இன்னும் இருக்குதுங்க! கரண்டை நாங்க பட்டணத்திலே பாத்ததுங்க! இப்போ எங்க ஊருக்கு வந்திருக்குதுங்க! அதுவும் முதன் முதலிலே.. பெரிய ஜாதிக்காரங்க இருக்கிற இடத்துக்கு வர்லீங்க! எங்க சேரிக்குத்தான் வந்தது! சமுதாயத்திலே கடைசியிலே இருக்கிற எங்களுக்கு முதலிடம் தந்த சர்க்காரை நாங்க.. இதோ இந்த இதயத்திலே வைச்சுருக்கோங்க! சுருக்கமாகச் சொல்றேங்க! இவுங்க செய்யற ஒவ்வொரு காரியமும் எங்கோ குக்கிராமத்திலே இருக்கிற எங்க வீட்டு வாசல்லே.. பொன்னா விளையுதுங்க!

அண்ணா: (மகிழ்ச்சியால் வெளிவந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு) தம்பி கருணாநிதி என் வாழ்த்துக்குரிய ஆட்சியை நடத்துகிறான்.

விவ: ஐயா.. அவர் தம்பி கருணாநிதி இல்லீங்க! எங்க சம்பந்திங்க!

அண்ணா: (ஆச்சரியத்துடன்) உங்க சம்பந்தியா? எனக்குத் தெரியாதே!

தங்கம்: ஆமண்ணா! கலைஞர் தன்னுடைய மகன் அழகிரிக்குத் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த குடும்பத்தில் பெண் எடுத்திருக்கிறார்!

அண்ணா: யார்—நம்ம அழகிரிக்கா? அடடா! அந்தத் திருமணத்திற்கு நான் இல்லாமல் போனேனே? நான் இருந்திருந்தால் வாய் மணக்க வாழ்த்தியிருப்பேனே?

விவ: ஐயா.. நான் வயலுக்குப் போகணும்! வருகிறேன்! (போகிறார்)

அண்ணா: (தனியாக) தம்பீ—கருணாநிதி! நாமெல்லாம் சிந்தித்து வருடத்திற்கு ஒரு சாதனை செய்து ஐந்தாண்டு வரை பேசுவார்கள் பிறர்!

ஆனால் நீயோ, நாள்தோறும் ஒரு சாதனையைச் செய்து குவிக்கிறாயே! உன் சாதனையைச் சோதனை செய்ய கிராமத்திற்கு வந்தேன்! இங்கே என்ன கண்டேன்?

புராணத்தில் எங்கோ ஒரு குளத்தில் சுந்தரமூர்த்தி நாயனார் போட்ட பொன், திருவாரூர் கமலாலயக் குளத்தில் கிடைத்ததாமே.. அதுபோல எங்கோ கோட்டையில் தீட்டும் திட்டம், குக்கிராமங்களில்—குடியானவர் வீடுகளில் குலவிளக்காய் எரிகிறதப்பா!

ஈன்ற பொழுதில் அடையாத இன்பத்தை தாய்மார்கள்—தன் மகனைப் பிறர் சான்றோன் எனக் கேட்க மகிழ்வார்கள்!

இதோ உன்னை அரசியலில் ஈன்று பெருமைப்பட்ட அண்ணன்—நீ ஒரு சான்றோன்—சாதனையாளன் எனக் கேட்டு ஆனந்தக் கண்ணீர் வடித்து நிற்கிறேனப்பா!



"கைரிக்ஷா தொழிலாளிக்கு சைக்கிள் ரிக்ஷா"



"ஆனந்தக் கண்ணீர் வடிக்கிறேனப்பா!"

இத்தகு சாதனை புரியும் உன்னை ஆயிரம் அவதூறுகள் கூற உடன்பிறந்த துரோகிகள் கிளம்பியிருக்கிறார்கள். அவர்களின் சூழ்ச்சி வலை கிழிக்கும் ஆற்றல் உனக்குண்டு; உனக்குப் பக்கத்தில் நாவலரும், அன்பழகனும் மற்றும் கழக முன்னணியினரும் உண்டு!

ஆனால் அதைவிட.. . இதோ உன் அண்ணன் உனது சாதனைகள் கண்டு, கேட்டு, மெய் சிலிர்த்து உள்ளுருகி வடிக்கும் ஆனந்தக் கண்ணீர்த் துளிகள் உனக்குக் கேடயமாக இருந்து உன் நல்லாட்சியைக் காப்பாற்றும்!

அவதூறு முகில்களைக் கிழித்து உன் புகழ் முழு நிலாப் போல் திகழும்!

தங்கம்! நான் தூங்கும் நேரம் வந்துவிட்டது! வா—சென்னை செல்வோம், தம்பிகளைக் கண்டு பாராட்டுவோம்! பின்னர் நான் மட்டும் அந்த வெண் மணற் பரப்பில்—ஆறடிச் சந்தனப் பேழைக்குள் ஓய்வெடுக்கிறேன். புறப்படலாமா?

(போகிறார்கள்)

* * *

# அண்ணனுக்குத் தொடுத்த எழுத்தாரம்



**தில்லை வில்லாளன்** எம்.பி

அண்ணனோடு இருந்த நாட்களில் நடந்த நிகழ்ச்சிகளை மீண்டும், இந்த நாளில் நினைவு கூர்ந்திடுவதில் எவ்வளவு மகிழ்ச்சி ஏற்படுகிறது! அந்த மகிழ்ச்சியை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளும்பொழுது அது எவ்வளவு பெருகுகிறது!!

அப்பப்பா, அண்ணன் எழுத்துக்கள் என்றால், அவ்வளவு கவர்ச்சி—அந்த நாள் 'திராவிட நாடு' அத்தனையும் அடியேனுக்கு மனப்பாடம். அந்த ஏடு ஊருக்குள் வருவதற்குக்கூட பொறுத்திருக்க முடியாது—வரும் இரயிலை வரவேற்க இரயிலடிக்கே சென்று, கட்டைப் பிரித்து, அங்கேயே ஒரு இதழைப் பிரித்து வழிநெடுகிலும் படித்துக்கொண்டே வீடு வந்து சேர்வேன்.

பிறகு 'திராவிடநாடு' இதழுக்கு அடிக்கடி கட்டுரைகள் அனுப்பி வைப்பேன். முதலில் வெளியான கட்டுரை 'கிழவனின் காதலி' என்பதாகும். அதன் பிறகு பல கட்டுரைகள் வெளிவந்தன. பிறகுதான், அண்ணன், காஞ்சிக்கே அழைத்துக்கொண்டார்.

அப்பப்பா, அந்த நாட்களில் எழுத்துத் துறையில் மட்டும் நடந்த நிகழ்ச்சிகள் இன்னமும் என் நெஞ்சில் பசுமையாக இருக்கின்றன. அண்ணனிடம் கட்டுரை எழுதி வாங்குவது என்பது எளிதான காரியமல்ல—வெள்ளிக்கிழமை பத்திரிகை வெளியில் அனுப்ப வேண்டுமென்றால், வியாழக்கிழமை இரவுதான் எழுதவே ஒப்பி அமர்வார். விடியற்காலை 4 மணி வரைக்கூட எல்லோருடனும் உரையாடிக் கொண்டிருப்பார். உடனிருப்பவர்கள் அனைவரும் உறங்கி விடுவர். அண்ணனின் அழியாத அற்புத இலக்கியப் படைப்புகள் அதன் பிறகே உருவாகும். திரும்ப எழுந்து பார்த்தால், மலைக்கணக்கில் எழுதிக் குவித்திருப்பார், அதன் பிறகே பத்திரிகை உருவாகி வெளிச் செல்லும்.

எழுத்துக்களைப் பாராட்டும் அண்ணன் என் கண் முன்னால் தெரிகிறார்..... 'யாத்திரை' என்றொரு தொடர் கதை. 'திராவிடநாடு' இதழில் எழுதினேன். அதனை மனமாரப் பாராட்டினார். அதன் பிறகு அது 'அடிவானம்' என்ற தலைப்பில் நூலாக வெளியிடப்பட்டது. அதற்கு அண்ணன் எழுதியுள்ள முன்னுரை, என ஆயுளில் மறக்க முடியாத ஒரு அழியாத செல்வம். அதனை என் இதயப் பெட்டியில் பூட்டி வைத்துள்ளேன்.

திராவிடநாடு' இதழில், பிரஞ்சுப் புரட்சியோடு ஒப்பிட்டு, ஒரு கட்டுரை தீட்டியிருந்தேன். அதனை அண்ணன் வெகுவாகப் பாராட்டி, நிறையப் படித்து, அதனை மிகச் சுருக்கி, தக்க நேரத்தில், தக்க முறையில், மக்களுக்கு எடுத்துச் சொல்வது தான் எழுத்தாளனின் கடமையாக இருக்க வேண்டும் என்றார்கள்.

திரைப்படத் துறையில் என்னை ஊக்குவிக்க வேண்டும் என்று முடிவு செய்து, ஒருநாள் ஜூபிடர் நிறுவனத்திற்கு அழைத்துச் சென்றார். அதன் உரிமையாளர்களில் ஒருவரான சோமு, அவர்களிடம், என்னை, அவரது கதைக்கு வசனம் எழுத ஒப்பந்தம் செய்யச் சொன்னார்கள். அப்பொழுது உடனிருந்த ஒரு அருமை நண்பர்— இப்பொழுது நம்முடனில்லை. பல கட்சி மாறிவிட்டார்!

அண்ணன் காட்டிய அந்த அன்பினை இன்னமும் நினைக்கின்றேன்—நெக்குருகிப் போகின்றேன்.

அண்ணனை விட்டுப் பிரிந்து, தனியாக 'தம்பி' ஏடு நடத்தினேன். அதன் மூன்றுமாண்டு துவக்கத்திற்கு அண்ணன் எழுதிக் கொடுத்த வாழ்த்து என் எழுத்துலக வெற்றிக்கு அண்ணன் அளித்த ஆமோதிப்பு முத்திரை—அதனைக் கண்ணாடி சட்டமிட்டு என் கண் பார்வையிலேயே எப்பொழுதும் வைத்திருக்கிறேன்.

அண்ணனோடு இருந்த நாட்களில், ஒரு ஆங்கில ஏடு நடத்த வேண்டும் என்று துளையாய்த் துளைத்து வந்தேன். அதற்காக ஒரு தோழரை அழைத்துக் கொண்டு போய் அலுவலகத்திலேயே வைத்திருந்தேன். 'ஆகட்டும் ஆகட்டும்!' என்று நாள் கடத்தி வந்து, கடைசியில், 'நீ பார்த்துக் கொள்வதாக இருந்தால் சொல்— ஆரம்பிக்கின்றேன— இல்லாவிட்டால் இல்லை' என்றார்கள். அப்பொழுது எனக்குத் தன்னம்பிக்கையும் தைரியமும் இல்லை. ஆகவே தள்ளிப் போயிற்று. பிறகு ஆண்டுகள் சில கழித்து, நான் இல்லாதபொழுது. 'ஹோம்லேண்ட்' ஆரம்பித்தார்கள். ஆனால், அண்ணன் தில்லை வந்திருந்தபொழுது, நான் எழுதிவைத்திருந்த 'Came with rains and gone with the wind' என்ற ஆங்கில நவீனத்தை எடுத்து வந்து அழகான படங்களுடன, தொடர் நாவலாக வெளியிட்டார்கள்.

அதிலே சுவையும், சூடும் நிறைந்த அரசியல் கட்டுரைகளை தொடர்ந்து வெளியிட்டார்கள்.

பிறகு ஒரு சமயம், அண்ணன் 'நீ தான் என்னைவிட்டு ஓடி விட்டாய்— ஆனால் ஆங்கில வார ஏடு நீ கேட்டபடி வருகிறது—தொடர்ந்து எழுது' என்றார்கள்.

அண்ணனைக் கோவை நண்பர்கள் ஒரு திரைக்கதை எழுதித் தரச் சொன்னார்கள். அண்ணன் தான் எழுதி வைத்திருந்த 'நீலநிலா' என்ற நவீனத்தைப் படித்திருந்தார்கள், அதனை அவர்களுக்கு கொடுப்பதாக எடுத்துச் சென்றார்கள். ஆனால் அந்தத் தோழர்கள் அண்ணன் கதையே வேண்டுமென்றார்கள். அண்ணனின் இதயத்தில், இந்த எளியவன் மீது இருந்த அன்பினைத் தான் எண்ணுகின்றேன்.

அண்ணனின் எழுத்துக்களை தொகுத்து ஏழெட்டு புத்தகங்களாக வெளியிட்டேன். அதில் ஒன்றுதான், 'காதல் ஜோதி'. அந்த நூல் அண்ணன் எழுதிப் போட்ட பல்வேறு துண்டுக் காட்சிகளை இணைத்து உருவாக்கப்பட்டது. அதில் இணைக்கும் காட்சிகள் கூட நான் எழுதி அண்ணன் திருத்தி இணைக்கப்பட்டுள்ளது. அவரது அன்பின் ஆழம் அளந்திடக் கூடியதல்ல.

அண்ணனிடம் கொண்ட அன்பினால், அவரைப் போல் எழுதுவது, தானேவந்து விட்டது— எழுத்து முதற்கொண்டு!

என்னுடைய எழுத்துக்கள்—தோழர் 'அரங்கு' அவர்களது எழுத்துககள்—அண்ணாவின் எழுத்துக்கள் பல்வேறு நேரங்களில், வித்தியாசம் காண முடியாமல் கூடப் போய் விடும். அலுவலகத் தோழர்களுக்கே சந்தேகத்தை உண்டாக்கிவிடும். உதாரணத்திற்கு ஒன்று சொல்வேன். அந்தக்காலத்தில், அரசியல் கற்பனைக் கதைகள் என்ற தொடர் ஒன்று எழுதி வந்தேன். அதனைப் பின்னர் 'மல்லிகைத் தோட்டம்' என்ற நூலாகக் கூட வெளியிட்டேன்.

அண்ணனுடன், மாயவரத்தை யடுத்த கொத்தங்குடிக்கு, ஓய்விற்காக, தோழர் ஜி. ஆர். உடன் செல்கிறோம்.

'நீ இப்பொழுது ஏன் எழுதுவதில்லை?' என்று கேட்டார் அண்ணன்.

'எங்கே அண்ணா எழுத முடிகிறது— வக்கீல் வேலை—அதுவுமல்லாமல், எழுதினால் உடனுக்குடன் வெளியிடும் வாய்ப்பும் இல்லை' என்று சலிப்புடன் கூறினேன்.

அதற்கு அண்ணன், 'வில்' அதுதான் ஒன்று வெளியிடப்படும்—வெளியிடப்படாது என்று பாராமல், எழுதத் தோன்றுகிற பொழுதெல்லாம் எழுதிவிட வேண்டும்— அதற்கு நிச்சயம் ஒரு வாய்ப்பு வரும்' என்றார். அத்தோடு விட்டுவிடவில்லை. 'நீ எழுதிக்கொடு. நான் போடுகிறேன்'' என்றார்கள். அது போலவே என்னிடம் நீண்ட நாளாக இருந்த 'மழலைச் செல்வம்' என்ற நூலை எடுத்துச் சென்றார்கள். அதற்குப் படங்கள் வரையவும் கொடுத்திருந்தார்கள். ஆனால், அந்த அன்பு அண்ணன், அதன்பிறகு தானே, கவனிக்க முடியாத நிலையடைந்தார். அது வேறொரு வார ஏட்டில் வெளிவந்து, நூலாக வெளிவந்து அதற்கு, அண்ணனைப் போலவே, அடுத்த அண்ணனாக விளங்கும் கலைஞர் அரியதொரு முன்னுரை அளித்து மகிழ்வித்தார்.

அண்ணனின் பிறந்தநாளில், அவர் கற்பித்த வழியான எழுத்தாரம் கோர்க்கும் வகையிலேயே, அண்ணனுக்கு, இந்த எழுத்தாரத்தைக் காணிக்கையாக்கி, என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். அண்ணன் கற்பித்த அந்தக் 'கலையை' அவர் எந்த இலட்சியங்களைப் பரப்பிடப் பயன் படுத்தினாரோ, அதற்குப் பயன்படுத்துவேன் என்று கூறி இதனை முடிக்கின்றேன்.

*　　*　　*

Phone : 328

## வட ஆற்காடு மாவட்ட
## முன்னாள் இராணுவத்தினர் கூட்டுறவு
# மரத்தொழிற்சாலை லிமிடெட்.,

காட்பாடி நகர்விரிவு, வேலூர் - 6.

**அலங்கார சாமான்கள் :—**

அரசாங்க அலுவலகங்கள், ஆஸ்பத்திரிகள், அரசாங்க நிறுவனங்கள், நகர சபைகள், உயர்நிலைப்பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் மக்களுக்குத் தேவையான அலங்கார மரச்சாமான்கள் பெருமளவில் சிறப்பாக தயாரித்து விற்பனை செய்து வருகிறோம்.

**கலை நுட்பப் பொருள்கள் :—**

ஒப்பனைமேஜைகள், ஸ்டூல்கள் (Dressing table and stools) சாப்பாட்டு மேஜைகள் & நாற்காலிகள், சோபாசெட் (சொகுசு) நாற்காலிகள் (Sofa sets, Sofa Chairs) அலமாரிகள் மற்றும் கலை நுட்ப வேலைப்பாடுகள் அமைந்த மரச் சாமான்களையும் தயார் செய்கிறோம்.

நியாயமான விலை! ஒரு முறை விஜயம் செய்யுங்கள் !!

**A. சுப்பரத்தினம்,** B.A.
காரியதரிசி.

**R.P. உலகநம்பி,** M.A., B.L. M.P.
தலைவர்.

## சுவைமிக்க உணவு வகைகளுக்கும்
## இணையற்ற ஐஸ்கிரீம் வகைகளுக்கும்
## குடும்பத்தினருடன் வருகை புரியுங்கள்

**புஹாரி**

ஹோட்டல்ஸ்

**சென்னை.**

பிரசித்தி பெற்ற பிரியாணி வகைகள்!

உங்கள் அபிமான 'புஹாரிஸ் No. 65 சிக்கன்' தந்தூரி சிக்கன், சிலோன் எக் பரோட்டா, மற்றும் மேலைநாட்டு, வட இந்திய உணவுகள் மனநிறைவூட்டும் மேன்மையான ஐஸ்கிரீம் வகைகள், மதுரமான மில்க் ஷேக் வகைகள் புஹாரியின் எல்லா கிளைகளிலும் கிடைக்கும்.

கல்யாண பார்ட்டி, வரவேற்பு, விருந்து, உபசாரவிழா போன்ற விசேடங்களுக்கும் தொடர்பு கொள்க.

# "புஹாரி ஹோட்டல்ஸ்"

சென்னை

"IN MEMORY OF

A GREAT LEADER OF THE PEOPLE"

TYRES MAY COME TYRES MAY GO

**BUT MANSFIELD GOES ON FOREVER***

*(OR SO IT SEEMS)



MRF

**GREETINGS FROM**

**MANSFIELD**

**THE TYRE WITH MUSCLE**

MRF

Manufactured by Madras Rubber Factory Ltd. In collaboration with MANSFIELD TIRE & RUBBER COMPANY, U.S.A.

**OVER 50 YEARS' TYRE-BUILDING EXPERIENCE**

LINTAS

# மைய கூட்டுறவு வங்கி லிமிடெட்,

## வேலூர் (வட ஆற்காடு மாவட்டம்)

சேமிப்பு சிறந்த பழக்கம். சேமிப்பதோ சிக்கலான பணி. உங்களுக்காகவும் உங்கள் குடும்பத்தாருக்காகவும் மட்டுமின்றி, நாட்டின் நலனுக்காகவும் சேமிப்பு மிகவும் அவசியம்.

நாட்டின் நல் அபிவிருத்திக்காகவும் உழவர் பெருங்குடியினருக்காகவும் நல்ல பல பணி செய்து முடித்திட கூட்டுறவு மைய வங்கிகள் ஈடுபட்டுள்ளன. அவைகள் உங்கள் சேமிப்பை நல்ல திட்டங்களில் முதலீடு செய்கின்றன.

## வேலூர் கூட்டுறவு மைய வங்கி

வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள எல்லா பகுதிகளையும் ஒருங்கிணைத்து, 32 கிளைகளின் மூலமாக அவரவர் வருமானத்துக்கும், பழக்கத்துக்கும் ஏற்ற வகைகளில் பல சேமிப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்தி செயலாற்றி வருகிறது.

உங்கள் சேமிப்பு, எங்கள் வங்கியில் ஏதாவதொரு திட்டத்தில் சேர்வதின் மூலம் முதலீடு செய்யுங்கள். அது உங்கள் நிலையினை உயர்த்திட உதவுவதுடன் வங்கியின் நிலையினையும் மாவட்ட உழவர் பெருங்குடி மக்களின் நிலையினையும் அதன்மூலம் தமிழகத்தின் நிலையினையும் உயர்த்திட வழிகோலும்.

உங்கள் தேவைக்கு உதவிட காத்திருக்கும் எங்கள் வங்கியின் தலைமையகம் மற்றும் கிளைகளில் பணியாற்றிடும் பணியாளர்களை தயவுசெய்து அணுகுங்கள்.

## மைய வங்கியின் சேமிப்பு திட்டங்கள்

| | விவரம் | | வட்டி விகிதம் |
|---|---|---|---|
| அ. | நடப்புக் கணக்கு | ... | ½% |
| ஆ. | சேமிப்புக் கணக்கு | ... | 4% |
| | ரூ. 25 குறைந்த பட்ச நிலுவை வைத்திருந்தால் | ... | 4½% |
| இ. | ரெக்கரிங் டெபாசிட் | ... | 7% முதல் 7½% வரை |
| ஈ. | நிரந்தர வைப்புத் தொகை | ... | 5½% முதல் 8% வரை |
| உ. | சீசன் டெபாசிட் | ... | 4% |
| ஊ. | மினி டெபாசிட் | ... | 5% |
| எ. | கேஷ் சர்ட்டிபிகேட்கள் | ... | 5% கூட்டு வட்டி |
| ஏ. | இரட்டைச் சலுவை திட்டம் | ... | |
| ஐ. | பரிசுக் காசோலைகள் | ... | |
| ஒ. | தவணை முறையில் திருப்பி செலுத்தும் திட்டம் | ... | |
| ஓ. | கியுமிலேடிவ் டெபாசிட் | ... | |

**ஆர். செல்வின், பி.எஸ்.சி., பி.காம்.,**
செயலாளர்.

**முல்லை பொ. வடிவேல்,**
பெருந்தலைவர்.

**கே. நடராசன், பி.காம்.,**
தலைமை நிர்வாக அதிகாரி.

**பி. என். சந்தானம்,**
துணைத்தலைவர்.

BEST WISHES OF:

# UNITED INDIA ROLLER FLOUR MILLS PRIVATE LIMITED

Manufacturers & Leading Suppliers of Superior Quality Wheat Products Under their famous

## "GOPURAM"

**BRAND**

**MAIDA & SOOJI**

GOPURAM BRAND MAIDA

GOPURAM BRAND SUJI

**AND**

## "SHIP"

**BRAND**

**ATTA & BRAN**

**MILLS & SALES DEPARTMENT**

**1/4, SURYANARAYANA CHETTY STREET, MADRAS - 81.**

Phone: 552671 - 552672 Grams: "MONARCH

# THIRU AROORAN SUGARS LIMITED

**VADAPATHIMANGALAM.**

TANJORE DISTRICT (TAMILNADU)

Manufacturers of:

**BEST QUALITY**
**WHITE CRYSTAL SUGARS**

*REGISTERED OFFICE:*

17/4, NUNGAMBAKKAM HIGH ROAD,
POST BOX No. 3328 MADRAS-34.

Telephone: 86001 - 3 Lines
Telegrams : "FINESUGAR" } MADRAS.

# கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி லிமிடெட்.

**வேளாண்மை செழித்திட — உற்பத்தி பெருகிட**
**டாக்டர் கலைஞர் ஆட்சியில் பசுமைப் புரட்சி வெற்றி கண்டிட**
**கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி**
**விவசாயப் பெருங்குடி மக்களுக்கு காலத்தில் கடனும்**
**பிற பொருள்களும் கொடுத்துதவுகிறது.**

நடப்பு ஆண்டு இதுவரை வழங்கிய கடன் ரூ. 5.58 கோடிக்குமேல். கடன் வசூலில் இந்திய உப கண்டத்திலேயே முதலிடம் பெற்றுள்ளது நமது வங்கி.

ஏழு வட்டங்களில் 17 கிளைகள்.

**வங்கியின் பணிகளில் சில:**

* நகையீட்டின் பேரில் குறைந்த வட்டியில் கடன்.
* எல்லாத் துறையினருக்கும் ஏற்ற வகையில் ரூ. முதல் ரூ. 5 1000/– வரை மாதாந்திர ஏலச் சீட்டுக்கள். இது நமது வங்கியின் புது முயற்சி.
* இந்தியாவில் உள்ள எல்லா இடங்களுக்கும் குறைந்த கமிஷனில் டிராப்டுகள்.
* வாடிக்கைத்தாரர்களுக்கு குறைந்த கமிஷனில் கழிவு முறை வசதி.
* அதிகப்பற்று கடன் வசதி.
* மோட்டார் சைக்கிள், ரேடியோ, பீரோ போன்ற பொருள்கள் வாங்க தவணைமுறையில் கடன் வசதி.
* திருமணம் போன்ற விழாக்களில் பரிசளிக்க ஏற்ற ரொக்க பத்திரங்கள்.


உங்கள் முதலீடுகளுக்கு உயர்ந்த விகித வட்டி 9% வரை அரசு உத்திரவாதத்துடன்- இதர எல்லா வங்கி சேவைகளும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

எம். பார்த்தசாரதி, பி.ஏ., எச்.டி.சி.,
செயலர்.

கோ. சி. மணி, எம்.எல்.சி.,
தலைவர்.

# சில நினைவுகள்

அ.கா.அ. அப்துல் ஸமது எம்.ஏ., எம்.பி.



**1961**-ம் ஆண்டின் தொடக்கக் கட்டத்தில் ஒரு நாள் பெரு மதிப்பிற்குரிய கலைஞர் மு. க. அவர்கள் கண் நோயினால் வேதனைப் பட்டுக் கொண்டிருந்த ஒரு பொழுது.

அவர்களைக் கண்டு நலன் விசாரிக்ககோபலபுரத்திலுள்ள அவர்கள் இல்லத்திற்குச்சென்றிருந்தேன். அவர்களோ, தம் நலத்தைவிட நாட்டு நலத்தைப் பற்றி என்னிடத்தில் விசாரித்தார்கள்; விவாதித்தார்கள்.

கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களும், அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களும் சந்தித்து உரையாடுவது நன்மை பயக்குமல்லவா? என்று என்னிடத்தில் கேட்டார்கள். அந்த எண்ணத்தை என் உள்ளத்தில் நீண்ட நாட்களாக வளர்த்துக் கொண்டிருந்த நான் உடனடியாகச் சந்திக்க வேண்டியது இன்றியமையாததாகுமென வல்யுறுத்தினேன்.

கலைஞர் அவர்கள் தொலைபேசி மூலம் காஞ்சியிலிருந்த அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களுடன் தொடர்பு கொண்டார்கள். அன்று மாலையே குரோம்பேட்டையில் காயிதேமில்லத் அவர்களைச் சந்திக்கலாம் என அண்ணா அவர்களும் ஒப்புதல் தெரிவித்தார்கள்.

இச் செய்தியை காயிதேமில்லத் அவர்களிடம் தெரிவித்தேன். அண்ணா அவர்

கள் ஜலதோஷத்தால் ஏற்பட்டிருந்த காய்ச்சலுடன் நேரே கோபாலபுரம் சென்று கலைஞர் அவர்களையும்அழைத்துக் கொண்டு குரோம்பேட்டைக்கு வந்தார்கள். அங்கே காயிதே மில்லத் அவர்களுடன் நானும் காத்திருந்தேன்.

தமிழக அரசியலில் மகத்தான திருப்பத்தை ஏற்படுத்திய சந்திப்பு அங்கே நடந்தது.

அறிவின் நிறைகுடமான அடக்கத்தின் மொத்த உருவம் அறிஞர் அண்ணா அவர்களும், கண்ணியத்தின் திருஉருவான காயிதே மில்லத் அவர்களும் ஏறத்தாழ இரண்டு மணி நேரம் உரையாடிக் கொண்டிருந்தார்கள்.

ஜனநாயகத்தின் மரபுகள் குடியாட்சியின் பெருமைகள், வீரத் துருக்கியர் வரலாறு, சுல்தான் ஐயூபியின் சாகசச் செயல்கள், இஸ்லாமியக் கலைப் பண்பு—இன்ன பிற பொதுக் கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. பல்கலைக் கழக அரசியல் வகுப்பிலே அமர்ந்து உலகப் புகழ் வாய்ந்த இரு பேராசிரியர்கள் கருத்துக்களைக் கேட்டறிந்தது போன்ற நிறைவு என் நெஞ்சத்தில் ஏற்பட்டது.

இடையில் அண்ணா அவர்கள் செருமினார்கள். நெஞ்சில் சளி நிறைந்திருந்ததை அவர்களின் இருமல் எடுத்துக் காட்டிற்று.

காயிதே மில்லத் அவர்கள் திடீரென எழுந்து, குடிசையா, பங்களாவா என்று பிரித்தறிய முடியாத அவர்கள் வீட்டுக்குள்ளே பரபரப்புடன் சென்றார்கள். சில நிமிடங்களில் ஒரு கையில் கோப்பைத் தண்ணீரும், மற்றொரு கையில் கஸ்தூரி மாத்திரைகளும் கொண்டு வந்து முதலில் ஒரு மாத்திரையை வாயிலிட்டு சுவைக்குமாறு அண்ணாவிடக் கேட்டுக் கொண்டார்கள். மேலும் சில மாத்திரைகளைத் தாளில்மடித்து கையில் கொடுத்தார்கள். காயிதேமில்லத் அவர்களின் பரிவுணர்ச்சி அண்ணா அவர்களின் கண்களில் அன்பு கலந்த நன்றியுணர்ச்சியைக் காட்டிற்று.

இரு பெருந்தகைகளின் அன்பின் பிணைப்பையும், அறிவுப் பெருக்கையும் கண்டு மெய் மறந்து நின்றோம்.

இந்திய அரசியல் வரலாற்றில் தூய நோக்கின்அடிப்படையில் அமைந்த அரசியல் பிணைப்புக்கு அன்று அடிகோலப் பட்டது.

அண்ணா அவர்களும், காயிதே மில்லத் அவர்களும் அதன் பிறகும்அரிதாகவே சந்தித்தார்கள். ஆனால் அவர்களின் இதயங்களின் கூட்டுக்கு வலிமை சேர்த்து எண்ணங்களின் வெற்றிக்கு பாடுபட்ட பெருமை இன்றைய தமிழகத்தின் முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்களுக்கு உரியது. அதில் ஒரு சிறு பங்குக்கு நானும் சொந்தக்காரன் என்ற மன்னிக்கத்தக்க பெருமிதம் எனக்கு என்றும் உண்டு. ஃ



"பகையினை விரட்டி விட்டு பழியிலா
வெற்றி பெற்று நலமிகு அமைதி நாட்டி
நாம் நமது அரசு காக்கும் பணியினை
மேற் கொள்வோம்!"

— பேரறிஞர் அண்ணா.

சக்தி சுகர்ஸ், லிமிடெட்.,

ரேஸ் கோர்ஸ் சாலை, கோயம்புத்தூர்.



# தேவன் பிறந்தான்!

மணிமொழி



தேவன் பிறந்தனன்
தேவன் பிறந்தனன்
நாட்டிலே—நம்
வீட்டிலே
பாவில் நிறைந்தனன்
பாவில் சிறந்தனன்
ஏட்டிலே—தமிழ்ப்
பாட்டிலே!

மன்னவன் வந்திந்த
மண்ணில் பிறந்தகதை
பாடுவோம்—தினம்
கூடுவோம்!
தென்னவர் நாட்டுக்குத்
தெய்வம் அவனென்று
போற்றுவோம்—கவி
சாற்றுவோம்!




இளமைத் தமிழ்க்கொளி
இனிமைச் சுவைதன்னை
ஏற்றினன்—நிலை
மாற்றினன்
வளமை கொழித்திங்கு
வறுமை ஒழித்திங்கு
ஆக்கினன்—நலம்
தேக்கினன்!


இருட்டுத் தமிழுலகில்
எழுந்த பரிதியெனப்
பிறந்தனன்—அன்பு
சுரந்தனன்
மருட்டும் மதம்சாதி
மடமைப் பேய்களினை
எரித்தவன்—உண்மை
பொறித்தவன்!


ஆதிக்க நெஞ்சினர்
ஆடிஒடுங்கி விழ
ஆர்த்தவன்—பகை
தீர்த்தவன்!
சோதிக்க வந்ததோர்
சோடை இந்தியினை
வீழ்த்தினன்—தமிழை
வாழ்த்தினன்!

கோடிக் கதிரொளியைக்
கோணல் தமிழகத்தில்
தூவினன்—புகழ்
மேவினன்!
கோடிக் கொருவனவன்
கோயில் இறைவனவன்
தாவினன்—பிரிவை
ஏவினன்!


மார்க்கம் வகுத்தவனின்
மனத்திற் கிசைந்தபணி
ஆற்றுவோம்— அவனைத்
தேற்றுவோம்.
பார்க்கும் இடமெங்கும்
பாட்டுத்தலைவன் புகழ்
நாட்டுவோம்—செயலில்
காட்டுவோம்!







# மதுவிலக்கும் அண்ணாவும்



## ஆர். ராமச்சந்திரன்

தலைசிறந்த மனிதப் பண்பு கொண்ட தலைவர் அண்ணா.

1937—38'ம் வருடம் இரண்டாம் உலக யுத்தத்திற்கு முன்னமே அவரோடு எனக்குப் பழக்கம் உண்டு.

ஒய். எம். சி. ஏ. அரங்கத்தில் அவர் பேசாத நாளே கிடையாது. சிறந்த பேச்சாளியாக ஆங்கிலத்திலும், தமிழிலும் அன்றாடப் பிரச்சினைகளை யெல்லாம் மிகவும் ஆராய்ந்து பேசக் கூடியவராகத் திகழ்ந்தார், அண்ணா.

கோபாலரத்தினம், செங்கல்வராயன் போன்றோர்கள் ஒரு பக்கமும், அண்ணா, எஸ். எஸ். ராஜகோபாலன் போன்றவர்கள் ஒரு பக்கமும்என்று இருப்பார்கள். அழகாகப் பேசுவார்கள்.

அண்ணாவின் ஆங்கிலப் பேச்சைக் கேட்க அன்றே அநேகர் ஆவல் மிகுந்து கூடுவார்கள். அவர்—பேச்சுக்கு ஆங்கிலத்தில் ஈடு கொடுத்துப் பேசக்கூடியவராக செங்கல்வராயன் இருந்தார். நகைச்சுவையில் அன்று கோபால் ரத்னம் பேச்சு எடுப்பாக இருக்கும்.

அந்தக் காலத்தில் ராஜாஜி கொண்டுவந்த மதுவிலக்கை ஆதரித்து அண்ணா பேசியது இன்றும் என் காதில் நீங்காமல் இருக்கிறது.

அண்ணா முதல் அமைச்சராக வந்தபோதுகூட ஒரு நாள் அதைப் பற்றி நான் நினைவு படுத்தினேன்.

''அதே கொள்கைதான் இப்போது எனக்கு!'' என்று ஆணித்தரமாகச் சொன்னார், அண்ணா.

தி. மு. க ஆட்சியில் மதுவிலக்கை ரத்துச் செய்துவிட்டால் நல்லது என்ற எண்ணம் பிரதிபலிக்க ஆரம்பித்த நேரம்.. ஒரு நாள் கோட்டையில் அவரிடம் இது குறித்து நிருபர்கள் கேட்டார்கள்.

''என்ன ராமசந்திரன்..' உங்களுக்குத்தான் தெரியுமே அந்தக் காலத்தில் நாம்—மவுண்ட்ரோட்டில் இருட்டிவிட்டால் தைரியமாக நடந்து போக முடியுமா? குடித்துவிட்டு, எத்தனை தெருச் சண்டைகள் நடக்கும்? இப்போது அவை எதுவும் இல்லையே? அறவே ஒழிந்திருக்கிறது இல்லையா—இது எதனால்? கள்ளுக்கடைகளை மூடியதால்! இந்த ஒரு நன்மைக்காகவாவது மதுவிலக்கைத் தீவிரமாகக் கடைப்பிடித்து அமலாக்க வேண்டும்!''

இப்படி அண்ணா அன்று கூறினார். அதில் எனக்கு மிகவும் சந்தோசம்.

''நீங்கள் நினைப்பது சரிதான். எதைக் கொண்டும் மதுவிலக்கை ரத்துச் செய்யாதீர்கள்!'' என்று சொன்னேன்.

அவர், கருத்துக்களுக்கு மதிப்புத் தருபவர். ஒரு சில நிருபர்களைத் தவிர, ஏனையோர் கள்ளுக் கடைகளைத் திறக்கக் கூடாது என்று சொன்னார்கள். ''என் முடிவு மதுவிலக்கு தொடர்ந்து நடைபெறும்'' என்று அண்ணா அன்று தெரிவித்தார்.

''1967'ல் தி. மு. கதான் ஆட்சிக்கு வரும்!'' என்று கோட்டையிலுள்ள செய்தியாளர்கள் அறையில் திட்டவட்டமாக அறிவித்தவன்—முன் கூட்டியே அறிவித்தவன்—நான். அந்த ஆண்டு எங்கள் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை சார்பில் அநேக மாவட்டங்களைச் சுற்றிப் பார்த்து அறிந்து வந்த—தன் விளைவாக நான் அறிந்த உண்மை அது.

இதில் நான் மிகவும்தெளிவாகவே இருந்தேன்.

இதனைப் பற்றி நான் தினத்தந்தி நிருபர் திருப்பதியிடமும், அன்றைய நவமணி நிருபர் கல்யாணத்திடமும், முன்னாள் ''ஹிந்துவின் பிரதம நிருபர் காலஞ்சென்ற எஸ். கே. வெங்கடேசன் ஆகியோரிடமும் கூறியபோது அவர்கள் மூவரும் ஒன்றாகக் கேட்டார்கள்:

''ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?''

நான் பதில் சொன்னேன். ''நாட்டில் மக்கள் ஒரு மாற்றத்தை எதிர்பார்க்கிறார்கள். அந்த மாற்றம் தேவை யென்றும் விரும்புகிறார்கள். தி. மு. கதான் அந்த மாற்றத்தைத் தர முடியும். இது மக்களின் கருத்தாக இருக்கிறது. இதைஎன் சுற்றுப் பயணத்தில் உணர்ந்தேன்!''

நான் கூறியது உண்மையாகிவிட்டது. அப்போதுஎன்னைக் கேள்வி கேட்ட நிருபர்கள் தி. மு. க ஆட்சிக்கு வந்ததும் என்னைத் 'தீர்க்கதரிசி'' என்றும், ''நீங்கள் சொல்லியது போலவே நடந்து விட்டது'' என்றும்—சொன்னார்கள்.

அண்ணாவை எப்பொழுதும் எளிமையாகவே பார்க்கலாம்.

நிருபர்களிடத்தில் அலாதிப் பிரியம் காட்டியவர் அண்ணா. ஒரு நாள்— நட்டநடு ராத்திரியில் பனிரெண்டு மணிக்கு எழுப்பி ஒரு செய்தியை ஊர்ஜிதம்செய்ய வேண்டும் என்று விரும்பினாலும்— அதனால் அவருக்குச் சிறிதும் சலிப்பு இருக்காது.

''எப்பொழுது வேண்டுமானாலும்கூப்பிடுங்கள். ஆனால் தப்புச் செய்தியை மட்டும் போட வேண்டாம்!'' என்று அடிக்கடிசொல்வார், அண்ணா.

ஒரு நாள் அவரது பிறந்த நாளுக்கு அவர் நுங்கம்பாக்கம் வீட்டில் நிருபர்களுக்கு விருந்து கொடுத்தார்.

அப்போது ஒரு பழைய பனியனைப் போட்டுக் கொண்டு மிகவும் எளிமையாக இருந்த அவரது தோற்றம் இன்னமும் என் கண்களில் நிற்கிறது.

எங்கள் எல்லோரையும் வரவேற்ற அவரது பரிவையும், பாசத்தையும் கண்ட நான்—முதிர்ந்த நிருபர் என்கிற முறையில் நன்றி கூறினேன்:

''ஒரு முதலமைச்சர் தமிழ்நாட்டில் தனது பிறந்த நாளில் நிருபர்களை வீட்டிற்கு அழைத்துச் சாப்பாடு போடுவது இதுதான் முதல் தடவை.''

அண்ணா என்னை அப்படியே கட்டி அணைத்து ஒரு தூக்குத் தூக்கிக் கீழே விட்டு விட்டுச் சிரித்தார். அண்ணாவின் மகிழ்ச்சியான அந்தச் சிரிப்பு இன்னும் என் கண்களிலேயே நிற்கிறது.

நிருபர்கள் கூட்டத்தில் என்ன கேள்வி கேட்டாலும் கோபம் கொள்ளாது அண்ணா நிதானமாகப் பதில் சொல்வார். எப்போதும் இதற்காகவே நிருபர்கள் அவரை வாழ்த்துவார்கள். ஏனென்றால்—சில அரசியல் தலைவர்களிடம் கேள்வி கேட்டால் எப்படிக் கோபம் கொள்ளுவார்கள் என்பதைப் புரிந்தவர்கள் நிருபர்கள்!

அண்ணாவின் நிதானத்தைத் தற்போது கலைஞர் அவர்களும் அதே அமைதியுடன் கடைப்பிடித்து வருவதைப் பற்றி இங்கே கவனப்படுத்துவது சிலாக்கியம்.

நெருங்கிப் பழகிய நிருபர்களை அண்ணா மறக்கவே மாட்டார்.


நவமணி—கல்யாணத்தின் மீது அவருக்குச் சற்று அதிகமான பிரியம் உண்டு என்பதைக் கண்டிருக்கிறேன்.

எவ்வளவு கூட்டம் இருந்தாலும் கல்யாணத்தைக்கண்டு


இந்திய துணை ஜனாதிபதி
பதக் அவர்களால் பொற்பதக்கம்
அளிக்கப் பெற்றது!
நறுமணத்திற்கென்றே பிறந்த
அரவிந்தா பரிமள ஒர்க்ஸ்
தயாரித்து அளிக்கும்




சுகந்த சிங்கார்
அகர் பத்திகளே!



மைசூர் அரவிந்தா பரிமள ஒர்க்ஸ் புதிய கட்டடம்
Prop: H. S. RAO & Bros.
MYSORE-4 Phone: 21760
தமிழ்நாடு முழுவதற்கும் பூரண விநியோகஸ்தர்கள்
S. M. K. & SONS.
41, ரயில்வே ரோடு, கும்பகோணம்.
போன்: 612,
பிராஞ்சு.
தில்ஷாத் ஏஜன்ஸி,
72, பெரிய தெரு, கும்பகோணம். போன்: 702



# இன்னும் ஒரே ஒரு முறை!

பொன்னுரிமை, மண்ணுரிமை,
பொருளுரிமை, புகழுரிமை,
என்பா ரெல்லாம்

உன்னருமைத் தமிழினிமை,
உனதருமைக் குரல்பெருமை,
உணரா தாரே!

என்னருமை தமிழ்த்தாயின்
எழிலருமை பெருமையினைக்
காத்த அண்ணு;

நின்னருமை பெருமையினை
நித்தநித்தம் நினைப்பதனல்
உயிர்வாழ் கின்றேம்!

அருளிருக்கும், அன்பிருக்கும்,
அழகிருக்கும், மாற்ருரைப்
பணிய வைக்கும்

பொருளிருக்கும், பூந்தென்றல்
போக்கிருக்கும், புயலிருக்கும்
உன்றன் பேச்சில்!

தெருசிரிக்க அரசியலைத்
தினம்நடத்த முனைந்துள்ள
புதுக்கூட் டத்தார்!

இருளிருக்கும் மனம்தெளிய
இன்னுமொரு முறைவந்து
தோன்றேன் அண்ணு!

—பட்டுக்கோட்டை
**இராசேந்திரன்**

---

பிடித்து அருகே அழைப்பார். அவரைக் காணவில்லை யென்ருல் ''எங்கே கல்யாணம்?'' என்று கேட்பார்.

**அ**ண்ணு சிறந்த மேதாவி. எந்தச் சிக்கலான பிரச்னைக்கும்—தெளிவாக வழியெடுத்துச் சொல்லுவார். இனிய சுபாவம் படைத்தவர்; ஆதலால் கடுஞ் சொற்களே அவரிடம் வராது. பரந்த நோக்கங்கள் கொண்ட ஒரு தலைவர் அண்ணு. இந்தப் பாரதம் மேம்பாடு அடைய வேண்டும் என்ற அவா அவருக்குப் பெரிதும் உண்டு.

ஏனைய முதன் மந்திரிகள் கூட அவரிடம் மதிப்புக்குப் பாத்திரமானுர்கள். ஏன்? அகில இந்தியத் தலைவராகவே அவர் திகழ்ந்து கொண்டிருந்தார் என்று சொல்லலாம்.

கோட்டையிலுள்ள நிருபர்கள் அறையில் அவரைப் பற்றி நாங்கள் இப்படிப் பேசியதுண்டு.

**"ஒரு நாள் அண்ணு இந்தியப் பிரதமராக ஆகக் கூடும்!"**

எங்கள் எண்ணத்தைக் காலம்—ஏமாற்றிவிட்டது!

* * *

# இன்னுயிர் ஈந்தும் கழகம் காப்போம்

டாக்டர் பி.எம்.ரெக்ஸ்



காலமெல்லாம் அடிமைகளாய் அல்லலுற்ற
கன்னித்தமிழ் மாந்தரினம் எழுச்சிபெற்று
ஞாலமெல்லாம் புகழ்மணக்கச் சூளுரைத்து
ஞாயிறுபோல் எழுந்துவிட்ட வீரம்பேசி
கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திற்கும்
முன்பிறந்த மூத்தபெருங் குடிகள்தம்மை
வெல்லமுயல் சிறுநரிகள் கூட்டந்தன்னை
எச்சரிக்க ஒருவிரலைக் காட்டினாயோ?

…. ஏன் அண்ணா?

நான்பெற்ற, நான்காத்த, நான் வளர்த்த
நலம்திகழும் தமிழர்தம் இயக்கமொன்றே!
வான்உயரப் புகழ்சேர்த்த தமிழினத்தின்
வரலாறு வாழ்வோடு பிணைந்திருக்கும்
திரவிடத்தின் முன்னேற்றக் கழகமொன்றே!
திராணியற்று என்சிலைக்கு மாலைசூடும்
துரோகிகளே ஓடுங்கள்! என்று சொல்லி
எச்சரிக்க ஒருவிரலைக் காட்டினாயோ?

…. ஏன் அண்ணா?

தாழ்வுற்றுச் சீர்கெட்டு நின்றதாமோர்
தமிழர்தம் வாழ்வினிலே ஒளியையேற்ற
வாழ்வெல்லாம் உழைத்து உருக்குலைந்தேன்!
வளர்பிறைபோல் தமிழினத்தின் வாரிசாக
கலையாழி பரிசுபெற்ற கருணை தங்கும்
தம்பியையே தந்துவிட்டேன் அழித்திடுவான்
பகைப்புலமே ஓடிவிடு! என்று சொல்லி
எச்சரிக்க ஒருவிரலைக் காட்டினாயோ?

…. ஏன் அண்ணா?

சொத்தையும் சுகத்தையும் நீ காணவில்லை!
பொன்னையோ பொருளையோ நீ தேடவில்லை!
நித்தமும் நீ கண்விழித்துக் காத்தெமக்குச்
சொத்தாகத் தந்துவிட்ட தி.மு.க—வை
என்னவிலை கொடுத்தேனும் காத்திடுவோம்.
எத்தர்தம் கூட்டத்தை வீழ்த்திடுவோம்!
இன்னுயிரை ஈந்தேனும் கழகந்தன்னை
என்றும்யாம் காத்திடுவோம் உன்மேலாணை!

* * *




# புகைப்படக்காரர்களின்


நெஞ்சில் ஆழ்ந்து விடும் நினைவுகளை மீண்டும் சம்பவ வடிவத்தோடு இமைத் திரையில் எண்ணிப் பார்க்கத் தூண்டுவது புகைப்படங்கள்.


'அமுதம் உண்ட இளமை' என்பார்களே... அப்படி என்றும் முதிராத நிரந்தரம் ஒவ்வொரு புகைப்படங்களுக்கும் உண்டு. பதிகின்ற நினைவுக்கும், அதற்கும் மூப்பு என்பதே இல்லை. அப்படி ஒரு அமரத்வம்! வெறும் நிழல்கள்தான். என்றாலும் உயிரும் உணர்வும் உள்ள நிழல்கள். எண்ணுந்தோறும் நெஞ்சில் மிதந்து வந்து நினைவுகளாய் விரியும் அற்புதங்களை நிகழ்த்தக்கூடிய வலிமை கொண்ட நிழல்கள்!

சாதாரண மனிதர்களுக்கு சில பசுமையான அனுபவங்களைத் தோற்றுவிக்கும் இந்த நிழல்கள் தான்— சரித்திர நாய



# பார்வையில் அண்ணா







கர்களுக்கு வரலாற்றுச் செப்பேடாக அமை கின்றன!

வருங்காலத் தலைமுறைக்காக, வாழ்ந்த பெரிய மனிதர்களின் கடந்த காலம் விட்டு வைக்கின்ற 'நிகழ் காலங்கள்' அந்த நிழற் படங்கள்!

என்றும் நெஞ்சில் வைத்து எண்ணத் தக்கவர் என்ற வகையில் இந்தத் தமிழ்க் குலம் நன்றியுடன் காலாந்திர காலத்துக்கும் போற்றுகிற ஒரு தலைவர்— பேரறிஞர் அண்ணா!

குடும்பப் பாச உணர்வுடன் ஒரு மாபெ ரும் இயக்கத்தை தோற்றுவித்து, அத்தனை

இமஜஉரான்



"எப்படி இருந்த உடம்பு?"

பேரையும் தன் சகோதரர்களாக்கி ''தம்பி'' என்று அரவணைத்த ஒரு தலைவன், இந்த யுகத்தில் அண்ணாவைத் தவிர வேறு யாரும் இல்லை என்பது உலகு ஒப்பிய ஓர் உண்மை.

பாச உணர்வுடன் நாம் அண்ணா என்கிற இந்தச் சொல் வெறும் மூன்றெழுத்தில் அடங்கிய பதமல்ல; இச்சமுதாயம் அர்ச்சித்துக் கொண்டிருக்கிற பல்லவி.



"இது 'கிரியேடிவ்' இல்லையா?"

திரும்பத் திரும்ப இந்த வார்த்தை நமது செந்நாவில் பிறக்கும் போதெல்லாம் நமக்கு ஒரு புதுத் தெம்பு; புது உத்வேகம் புதிய எழுச்சி; ஒரு புதிய பெருமிதம் உருவாகிக் கொண்டே இருக்கிறது.

நம்முடைய ரத்தத்தின் உணர்விலும், இதயத்தின் துடிப்பிலும் நடக்கிற ஆராதனைக்குரிய அத்தனையிலும் அவர் விரிந்து நிற்கிறார்.

காரணம் இந்தச் சமுதாயத்தின் கூனல் பட்டுக் கிடந்த முதுகுக்கு தனது அரும் பாடுகளை அவர் தண்டுவடமாக்கி நிமிர வைத்தவர் என்கிற மாபெரும் பணியே!

அதுமட்டுமில்லை. தாக்குப் பிறகு ஒரு தொடர்புக் கண்ணி போல் அவரது வரலாற்றின் சுவடு பற்றிய சங்கிலியும் நீண்டிருக்கிறது. தன்னைப் பின் தொடரும் ஒரு தலைமுறையை உண்டாக்கிய நெடிய வரலாறு அவருக்கு உண்டு.

அந்தத் தலைவனைப்பற்றி எண்ணும் போதெல்லாம் எத்தனை எத்தனை நினைவுகள் நெஞ்சில் மிதக்கின்றன?

இமைக்குச் சுமையாகாத கனவுகள் போல் நெஞ்சுக்குப் பாரமில்லாத அந்த நினைவுகளையெல்லாம் சம்பவங்களாக எண்ணிப் பார்த்திட எத்தனை எத்தனையோ ''உயிர் நிழல்'' களை நாம் கண்டு போற்றி வருகிறோம். அண்ணாவின் வாழ்க்கையோடு இணைந்த எத்தனையோ சம்பவங்களை அவரோடு நெருங்கிப் பழகிய தலைவர்கள் எழுத்திலும், சொல்லிலும் வடித்து நம் நினைவுகளில் மிதக்க விடும்போதெல்லாம் — அந்த மாபெரும் தலைவருக்கும் நமக்கும் ஒரு நெருக்கத்தை மானசீகமாக நாம் அனுபவிக்கத் தவறியதில்லை.

சமுதாய மாற்றத்தை உருவாக்கியவர்கள்; சமுதாயத்தின் ஏற்றத்துக்குக் காரணமாக அமைந்தவர்கள்— என்கின்ற வரிசையில் ஒவ்வொரு தலைவர்களின் படத்துக்குப் பின்னணியிலும் ஒவ்வொரு சம்பவம்; அல்லது நிகழ்ச்சி நிச்சயம் இருந்தே தீரும்!

அந்த வகையில் நமது சமுதாயத் தளநாயகன் அண்ணா அவர்களைப் பற்றிய புகைப் படங்கள் ஒவ்வொன்றும் பேசும் சித்திரங்களாக அமைந்துள்ளன.

அவற்றைப் பல்வேறு சந்தர்ப்பங்களில். நம் பார்வையில் சேரும்படி செய்தவர்கள் பலர் இருக்கிறார்கள்.

அவர்களில் அண்ணாவிடம் மிக நெருக்கமான ஈடுபாடு கொண்டு, ஒரு வரலாற்று நாயகனைப் பற்றிய வரலாற்று நிகழ்ச்சிகளைத் தொகுக்கிறோம் என்கிற பெருமையோடு

தொகுத்தவர்களில் குறிப்பிடத் தக்க இருவரிடம் கேட்டறிந்த சேதிகளே இந்தக் கட்டுரையை உருவாக்க உதவியுள்ளன.

சி. என். சாமுவேல் அண்ணாவிடம் தொண்டராகப் பழகிய புகைப்பட நிபுணர். அமைச்சர் ராசாராமின் நண்பரான அவரிடமிருந்து சில அரிய புகைப்படங்களைப்பெற்று அதன் பின்னணிச் சம்பவங்களையும் தொகுத்திருக்கிறோம்.

இன்னொரு புகைப்படக்காரர் சுந்தரம். இவர் எடுத்த அண்ணா படங்கள் முரசொலி மலர்களைப் பலமுறை அலங்கரித்துள்ளன.

காமிராவின் கண்களுக்கு அப்பால்— இருவருடைய பார்வைகளிலும் அண்ணாவைப்பற்றி பல யதார்த்தங்கள் பதிந்துள்ளன.



அண்ணாவைக் காணவந்த ஐயா....

## சி. என். சாமுவேல்

1954–ஆம் ஆண்டு காதல் ஆண்டு மலரில் அண்ணாவைப் பற்றிய புகைப்படக் கட்டுரை ஒன்றினை இடம்பெறச் செய்ய விரும்பினார் அரு. ராமநாதன். அந்தக் கட்டுரைக்கான புகைப்படங்களை எடுப்பதற்கு சாமுவேலிடம் கூறினார். அன்று அண்ணா பற்றிய கட்டுரையை எழுதியவர்— காஞ்சி கல்யாணசுந்தரம்.

அந்தக் கட்டுரைக்குப் பொருந்தும் புகைப்படங்களை எடுக்கச் சென்ற சாமுவேலுக்கு— அன்று முதல் அண்ணாவிடம் பழக ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது.

அண்ணாவிடம் பழகிய அந்த நாளிலிருந்து ஒரு தலைவனோடு ஒன்றிய தொண்டன்போல் ஒன்றிவிட்ட சாமுவேல், அண்ணா பற்றிய பற்பல சம்பவ முக்கியத்துவம் வாய்ந்த படங்களையெல்லாம் எடுத்திருக்கிறார்.

கழக வளர்ச்சியுடன் ஒன்றிய பல்வேறு நிகழ்ச்சிகள்—மாநாடுகள் ஆகியவை எல்லாம் நிகழ்ச்சிக் கோவையாகத் தொகுக்கப்படும் அளவுக்குப் புகைப்படங்களில் பதியச் செய்துள்ளவர் சாமுவேல்.

முரசொலி வழங்கிய அண்ணாமலர், வரிசைகளில் முதல் டிரேன்ஸ்பரன்சி படத்தையெடுத்த நிகழ்ச்சி பற்றி அவர் விவரித்தபோது— அண்ணா புறாக்களுக்குத் தீனிபிடுவது–போன்ற அந்தக் காட்சி நமது மனத்திரையில் வண்ணக் கோலமிட்டது.

புகைப்படக்காரர்களுக்குச் சில கோணங்களில் படம் எடுக்க வேண்டுமென்ற எண்ணம் தோன்றி விட்டால், அந்தக் கோணம் பதிகிற வரையில் படம் பிடித்துக்கொண்டே இருப்பார்கள். அதுபோல் சாமுவேல் தம் காமிராவின் 'கிளிக்' ஒலியை நிறுத்தாமல் படம் பிடித்துக் கொண்டே இருப்பதுண்டு.



புகைப்படக்காரர் விருப்பத்திற்கு ஏற்ப...

அப்போதெல்லாம் அண்ணா போதும் என்று கூறாமல்— போதுமா? என்றுதான் கேட்பது வழக்கமாம்.

"அந்த அளவுக்கு புகைப்படக்காரர்களின் விருப்பத்தை மதிப்பவர் அண்ணா"

* * *

சாமுவேலிடமிருந்து சில படங்களைத் தேர்ந்தெடுத்தோம். ஒவ்வொரு படத்திற்குள்ளும் ஒவ்வொரு சம்பவங்கள் பொதிந்திருந்தன.

அண்ணா ஒருநாள் சூட்டும் கோட்டுமாக இருந்தாராம். உடனே அன்று அவரைப் பார்க்கச் சென்ற ராசாராம் அவர்களும் சாமுவேலும், இப்படி ஒரு படம் எடுத்தால் நன்றாக இருக்குமே என்று விரும்பினார்கள்.

உடனே அண்ணா—சரி எடுத்துக் கொள் என்று கூறிவிட்டு நின்றார். படம் எடுத்து முடிந்ததும்—"நான் எப்படி இருக்கிறேன்" என்று வேடிக்கையாக அண்ணா கேட்டார் ராசாராமுக்கும் சாமுவேலுக்கும் என்ன சொல்வதென்று புரியவில்லை.


அண்ணாவே சொன்னார்: "நீங்கள் இரண்டு பேரும் கோலார் போயிருக்கிறீர்களா?"

"இல்லையே அண்ணா!"

"அங்கே ஓய்வு பெற்ற ஃபோர் மேன் இப்படித்தான் இருப்பார், தொள தொளவென்று சூட்டும் கோட்டும் போட்டுக்கொண்டு!"

* * *

சென்னை மாநகராட்சி கழகத்தின் வசம்வந்த நேரம். அதற்கு அரும்பாடுபட்டவர் என்ற முறையில் கலைஞர் அவர்களுக்கு ஒரு பரிசு தர விரும்பினார் அண்ணா. இந்த எண்ணத்தை அவர் யாருக்கும் தெரிவிக்கவில்லை.




சாமுவேலிடம் மட்டும் தனியாக அழைத்து அவர் ரகசியமாகக் கூறினார். "கருணாநிதிக்கு மோதிரம் போடப் போகிறேன் — கவனமாக இரு."

அந்தப் பாராட்டு விழாவில் திடீரென்று எழுந்து அண்ணா கலைஞரின் கையில் வெற்றிக்கணையாழியை அணிவித்தார்.

ஒரே ஒரு 'பிளாஷ்' மேடையில் ஒளிர்ந்தது. அது சாமுவேலின் காமிரா பிளாஷ்!

விழா முடிந்ததும் அண்ணா கேட்டார்:

"கவனமாக இருந்தாயா?"

"கவனமாக இருந்தேன் அண்ணா" என்று சாமுவேல் கூறிய பிறகு, தம் செங்காவிப் புன்முறுவல் காட்டினார் அண்ணா. அந்தப் படத்தை அன்று சாமுவேல் மட்டும் தான் பிடித்தார்.

எவ்வளவு பெரிய பாராட்டு அது? கழகம் அரசு கட்டிலில் ஏறுவதற்கு அது முன்னோடிச் சம்பவம் ஆயிற்றே!

* * *

அண்ணாவை லைப்ரரியில் படம் பிடிக்க வேண்டும் என்று ஒரு ஆசை. சாமுவேல் அண்ணாவிடம் இதனைத் தெரிவித்தாராம். 'லைப்ரரியில் புத்தகம் படிக்கிற மாதிரி எடுக்கலாமே' என்று சாமுவேல் கேட்டதும் அண்ணா சட்டென்று கூறினார்: "நான் நடந்து போகும்போது எடேன். அது ஒரு 'கிரியேடிவ்' ஆக இருக்குமே!"

இப்படி அண்ணா சில சந்தர்ப்பங்களில் தம் விருப்பத்தைத் தெரிவித்தது உண்டு. ஆனால் இது போன்ற படங்கள் அதிகம் பதிந்ததில்லை—என்கிறார் சாமுவேல்.

* * *

அமெரிக்கா மருத்துவமனையில் அண்ணா இருந்த நேரம். திருவிளக்கு இதழில் அண்ணாவின் திறந்த மேனிப்படம் மேலட்டையில், வெளியிடப்பட்டிருந்தது. அதன் பிரதியை அமெரிக்காவில் பார்த்த அண்ணா ராசாராமிடம் கேட்டாராம்! "எப்படி இருந்திருக்கிறேன்— பார்த்தாயா ராசாராம்?"

இந்தக் கேள்விக்குப் பதில் கூற முடியாமல் துளிர்த்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டது பற்றி ராசாராம் தமிழகம் வந்ததும் சாமுவேலிடம் கூறினாராம்.

* * *

அண்ணா அடையாறு மருத்துவமனைக்குச் செல்லும் முன் ஒரு படம் எடுத்துக்கொள்ள விரும்பியது பற்றி சாமுவேல் கலக்கத்தோடு கூறினார்.

"இந்த மலரைக் கூப்பிட்டுப் என் பக்கத்தில் உட்கார வையேன்!"



அண்ணனின் இறுதிப் புன்னகை

மலர் வந்தான். பக்கத்தில் உட்கார்ந்தான் ''அவனைச் சிரித்துக் கொண்டு இருக்கச் சொல்லேன்!'' என்றார் அண்ணா.

மலர் சிரித்துக் கொண்டுதானிருந்தான். அதைப் பார்க்கக்கூட முடியாத அளவு அண்ணாவின் உடல் வேதனையுற்றிருந்தது.

''மலர் சிரிக்கிறான் அண்ணா!''

அண்ணாவால் திரும்ப முடியவில்லை; என்றாலும் புன்னகை காட்டிச் சிரித்தார்.

அன்று அந்தப் படத்தை எடுத்ததுமே எனக்கு ஒரு கலவரம். 'இந்தப் புன்னகை நிச்சயம் இறுதிப் புன்னகையாக இருக்காது!' என்று என் மனதை நானே சமாதானப் படுத்திக் கொண்டேன். ஆனால் அது தான் இறுதிப் புன்னகையாக ஆகிவிட்டது.''

## ஏ. சுந்தரம்

சாமுவேலைப் போல்— அண்ணாவுக்கு மிக நெருங்கிய இன்னொரு புகைப்படக்காரர் சுந்தரம்.

இவர் தமிழ்நாடு பத்திரிகையின் நிருபராக இருந்து புகைப்படக்காரர் ஆனவர். 1963-வாக்கில் அண்ணாவைப் படம் எடுக்க ஆரம்பித்தவர்.

ஒரு நிருபர் என்கிற முறையில் அவரை அண்ணா ஊக்குவித்து உற்சாகப் படுத்தினார்.

அப்போது முரசொலி மலர்களுக்காக அண்ணாவைப் படம் எடுக்கும் வாய்ப்புகளும் சுந்தரத்துக்கு ஏற்பட்டது. இந்தத் தொடர்பு வலுப்பட்டதுமே— அண்ணாவைப் பற்பல கோணங்களில் படம் எடுப்பதில் சுந்தரம் மிக ஈடுபாடு காட்டத் தொடங்கினார்.


அதுதான் பல்வேறுபட்ட தோற்றங்களிலும், அசைவுகளிலும், முகபாவங்களிலுமான அண்ணாவின் தோற்றங்களை அளித்தது. பொடிப் போடுவது, எழுதுவது, படிப்பது போன்ற படங்கள் புதினமாகப் பிடிபட்டன.

''சிலருக்கு அண்ணாவுடன் நின்று படம் எடுத்துக் கொள்ள ஆசையாக இருக்கும். ஆனால் கேட்கத் தயக்கமும் இருக்கும். அப்படிப்பட்டவர்களின் மனநிலைகளைக் கூட, அண்ணா புரிந்து கொண்டு சட்டென்று ''இந்தா இவரோடு என்னை ஒன்று எடுத்துக் கொள் தம்பி!'' என்று குறிப்பறிந்து சொல்லுவார். தனிப்பட்ட முறையிலும் கூட்டமாகவும் படம் எடுக்க விரும்புவோரின் விருப்பம் தெரிந்து அண்ணா ஒத்துழைப்பார்.''

*  *  *

1966-ல் அண்ணாவின் பிறந்தநாள் வெகு எளிமையாக நடந்தது. அன்று முழுவதும் அண்ணாவை வந்து பார்த்தவர்களின் படங்களையெல்லாம் எடுத்த இதே சுந்தரம்— 1967-ல் அண்ணாவின் பிறந்த நாளன்றும் புகைப்படங்கள் எடுத்தார்.

ஓராண்டில் எவ்வளவு மாற்றம்?



1967ல் அண்ணா தமிழக முதல்வர். முதல்வரின் பிறந்தநாள் என்கிற அளவில் மாலைகள் மலையாகக் குவிந்து கொண்டிருந்தன. அன்று மத்தியானம் அண்ணா சிறிது ஓய்வெடுக்கப் போனார்— அப்போது சொன்ன வார்த்தைகள் இன்னும் சுந்தரத்தின் நெஞ்சில் இருக்கின்றன.

''பார்க்காத முகங்களைப் பார்க்கிறேன். போடாத கரங்கள் மாலை போடுகின்றன!' என்றார் அண்ணா. தாம் முதல்வரானபோதும் அவர் தம்முடைய நிலையை மறந்துவிடவில்லை.

அண்ணா அமெரிக்காவிலிருந்து திரும்பிவிட்டார் என்று தெரிந்ததும் பெரியார் நுங்கம்பாக்கத்துக்குப் புறப்படத் தயாராகிவிட்டார். ''ஐயா ஏன் வர வேண்டும்... நானே வந்து ஐயாவைப் பார்க்கிறேனே..'' என்றார் அண்ணா!

ஐயா இதை விரும்பவில்லை. உடனே புறப்பட்டு நுங்கம்பாக்கம் வந்துவிட்டார்.

அப்போது அண்ணா மாடியில் இருந்தார். ஐயா வந்தது தெரிந்ததும் மாடியிலிருந்து படிகளில் வேகம் வேகமாக இறங்கி வந்தார் அண்ணா. சக்கர நாற்காலியிலிருந்து எழ முயற்சித்த ஐயாவை அப்படியே அண்ணா தழுவியவாறு தம்முடைய கையிலிருந்த ஆப்பிளை ஐயாவிடம் அளித்தார்.

''அப்போது ஐயா அவர்கள் அண்ணாவின் கன்னத்தையும் முகத்தையும் தடவித் தடவிப் பார்த்துவிட்டு நாத்தழுதழுக்க ஏதும் கேட்க முடியாமல் தவித்த அந்த ஒரு நிகழ்ச்சி என் மனதை அப்படியே நெகிழச் செய்து விட்டது.''

* * *

அண்ணாவை ஒவ்வொரு தடவையும் பற்பல படங்களாக எடுத்துக் குவித்த சுந்தரம் அண்ணா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் என்றதுமே அப்படியே மனம் உடைந்து போய் அண்ணாவைப் படமே எடுக்கவில்லை.

''எப்படியெப்படியெல்லாம் அசைந்த அந்தக் கைகளும், முகமும் அசையாமல் கிடந்தபோது என் கைகள் எப்படி அசையும்'' என்று இடிந்து கூறும் சுந்தரம் அப்புறம் எப்போது அண்ணாவைப் படம் எடுத்தார் தெரியுமா?

லட்சோப லட்சமாக மக்கள் வெள்ளமெனச் சங்கமித்துகண்ணீர்க் கடலாக மாறியபோது அதிலே பேரறிஞர் அண்ணாவின் இறுதி ஊர்வலம் மிதந்து வந்ததே.. அப்போதுதான்!


# சேலம் கூட்டுறவு நூற்பு ஆலை லிமிடெட், எண். எஸ். 1424
## அம்மாப்பேட்டை, சேலம்-3.

தந்தி: SALCOMILLS.
டெலக்ஸ்: SALCOM SL - 204

தொலை பேசி: நிர்வாக இயக்குநர்-2040, அலுவலகம்-2080

| | | |
|---|---|---|
| தமிழ்நாடு அரசினரால் செலுத்தப்பட்டுள்ள பங்கு மூலதனம் | ... ரூ. | 14·74 லட்சம் |
| நூற்கப்படும் நூல் | ... நெ. | 40, 60, 80, 100, 2/60, 2/100 கார்ட்டட், கோம்புடு |
| ஆண்டு ஒன்றுக்கு நூல் விற்பனை | ... ரூ. | 80 லட்சத்துக்குமேல் |

எங்கள் நூல் தரமான பஞ்சிலிருந்து சிறந்த ரகமாக தயாரிக்கப்படுகிறது.
கடந்த ஆண்டு பங்குதாரர்களுக்கு 9% டிவிடெண்ட் வழங்கப்பட்டது.
ஒரு பங்கின் விலை ரூ. 100/- பிரவேசக் கட்டணம் ரூ. 2/-
இதர விபரங்களுக்கு ஆலையின் நிர்வாக இயக்குநருக்கு விண்ணப்பிக்கவும்.

திரு. ஜீ. ஷண்முகம்
நிர்வாக இயக்குநர்

திரு. டி. பி. ஆறுமுகம்
தலைவர்

# TIDCO
## offers you High-grade Cement

The finest raw material and modern technology contribute to make

# ARASU
**Portland Cement**

SURPASSES EVEN I.S.I. SPECIFICATIONS!



Built - in strength
Quick and smooth mixing.
Easy availability.
Big economy benefits for you.
Benefits that only the first Public Sector Cement Plant in Tamil Nadu can offer

TIDCO

TAMIL NADU
INDUSTRIAL DEVELOPMENT
CORPORATION LIMITED,
(A GOVERNMENT OF TAMIL NADU UNDERTAKING)
150-A, III Floor, L.L.A. Building, Post Bag No. 5205, Mount Road, Madras-2.
Works: TAMILNAD CEMENTS, Alangulam, Ramanathapuram Dist.

AC-8



துவக்கம் : 1954 தொலைபேசி எண் : 327

# வட ஆற்காடு மாவட்ட கூட்டுறவு அச்சகம் லிமிடெட்,


நெ. சி. 1965

"கோபால் நிலையம்" வேலூர்.

- கூட்டுறவு சங்கங்களுக்காக கூட்டுறவு சங்கங்களினால் நடத்தப்படும் ஒரே கூட்டுறவு அச்சகம்.
- எல்லாவிதமான அச்சு வேலைகளையும் வாடிக்கையாளர்களின் திருப்திக் கேற்ற வகையில் குறித்த காலத்தில் நேர்த்தியான முறையில் அச்சிட்டு தரப்படும்.
- அங்கத்தினராகாத கூட்டுறவு சங்கங்கள் விரைந்து அங்கத்தினராகும் படி கேட்டுக்கொள்கின்றோம்.

தலைவரும், இயக்குநர்களும்.

## அறிவுலக மேதை பேரறிஞர் அண்ணாவின் புகழ் வாழ்க!



வட ஆற்காடு மாவட்ட


# கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கம் லிட்.,

(இராஜ கோபால் நிலையம்)

**வேலூர் – 1**

தொலைபேசி : 43 & 493

தந்தி : சென்ஸ்டோர்



*

மக்களின் அன்றாட தேவைப் பொருட்கள் அனைத்தும் நியாய விலையில் ஒரே கூரையின் கீழ் வாங்க சிறந்த இடம்.

# கற்பகம் கூட்டுறவு சிறப்பு அங்காடி, வேலூர்

தொலைபேசி எண் · 807

தந்தி : கற்பகம்

அயல் நாட்டு நவீன இயந்திரங்களைக் கொண்டு தானியங்கி முறையில் செயல்படும் எங்களது பழம் பதனிடும் தொழிலகத்தில் மாம்பழச் சாறு, தக்காளி கட்சப், எலுமிச்சை, மாங்கா ஊறுகாய்கள், தக்காளிச் சாறு, அன்னாசி பழத் துண்டுகள் மற்றும் பலவகையான குளிர் பானங்கள் தயாரித்து விற்பனை செய்து வருகிறோம்.

சோவியத் ரஷ்யாவிற்கு பெருமளவில் ஏற்றுமதி செய்து அந்நிய செலாவணி ஈட்டிய எங்களது தயாரிப்புக்கள் இந்தியாவில் எல்லா பெரிய வியாபார நிலையங்களிலும் சிறப்பு அங்காடிகளிலும் கிடைக்கின்றன.

தங்களது ஆர்டர்களையும் மேலான ஆலோசனைகளையும் வரவேற்கிறோம்.

நல்ல போக்குவரத்துள்ள இடமான வேலூர் இராஜகோபால் நிலையத்தில் செயல்பட்டு வரும் எங்களது

# இந்தியன் ஆயில் பெட்ரோல் நிலையம்

நல்ல முறையில் பணியாற்றி வருகிறது.

சி. ஏகாம்பரம், பி.ஏ.,
இணைப்பதிவாளர்/காரியதரிசி.

ர. சம்பங்கி,
தலைவர்.

# தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கழகம்

**89, பூவிருந்தமல்லி நெடுஞ்சாலை, சென்னை-10.**

தொலைபேசி : 666641, 666642, 666643

**மகத்தான விவசாய சேவை!**

தந்தி: 'COSUPMARK'

- * உர வகைகள் நியாய விலையில் கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கிராமங்களில் கிடைப்பதற்கும் ;
- * பாமணி உர ஆலை மூலம் கூட்டு உரங்கள் தயாரித்து விவசாயிகளுக்கு வழங்கப்படவும் ;
- * தானியங்களையும் இதர விளைபொருட்களையும் விற்பனைச் சங்கங்கள் மூலம் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்து விற்கவும் ;
- * மன்னார்குடியில் டிராக்டர் பணிமனை மூலம் டிராக்டர்கள் குறைந்த செலவில் பழுது பார்க்கப்படவும், டிராக்டர்கள் குறைந்த வாடகைக்கு விவசாயிகளுக்குக் கிடைக்கவும், தமிழ் நாடு கூட்டுறவு விற்பனைக் கழகம் சேவை செய்து வருகிறது.
- * சென்னையில் குளிர்பதன சாதன கிடங்கில் பழவகைகளும், காய்கறிகளும் சேமித்து விற்பனை செய்யவும் ; ஐஸ்கட்டி விற்கவும் ;
- * நிலக்கடலை, சூரியகாந்தி மற்றும் பருத்தி விதைகளிலிருந்து நவீன முறையில் எண்ணெய் எடுக்கும் ஆலைகள் விருத்தாசலம், திருவண்ணாமலை ஆகிய இடங்களில் அமைக்கவும் ;
- * தேசீயக் கூட்டுறவு விஸ்தரிப்பு குழுவின் தொழிற் நுட்ப உதவியுடன் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் விபரங்களுக்கு மாவட்டத் தலைமையிடங்களிலுள்ள எங்கள் மண்டல அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவேண்டுகிறோம்.

**பி.ஜி. முகமது சாலிகா** கூட்டுப்பதிவாளர்/பொதுமேலாளர் **இரா. தர்மலிங்கம்** தலைவர்



**உழைப்பைப் போற்றி உயர்ந்திடுவோம்! ஊரைப் பேணி வளர்த்திடுவோம்!!**

# தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின்

பல்வேறு பிரிவுகளில் உற்பத்தி செய்யப்பெற்ற

| | | |
|---|---|---|
| கதர் | ரெடிமேட் ஆடைகள் | வெல்லம் |
| கதர் பட்டு | நாட்டுச் செக்கு எண்ணெய் | தீப்பெட்டி |
| கம்பளி | சோப்பு | தோல் பொருட்கள் |
| பதநீர் | கையாற் செய்த காகிதம் | தேன் |
| பனைப் பொருட்கள | மண்பாண்டங்கள் | பழரசங்கள் |
| பனை வெல்லம் பனஞ் சர்க்கரை | உலோக வார்ப்படங்கள், நார்ப் பொருள்கள் | மூலிகை வகைகள் |
| வீட்டு உபயோகத்திற்கான பித்தளை வெண்கலப் பாத்திரங்கள் | சுண்ணும்பு (கட்டிடங்களுக்கான சாந்து) | மூங்கில் |
| மரச் சாமான்கள் | அரக்குப் பொருள்கள் | பிரம்புப் பொருள்கள் |

இத்தனைக்கும் இன்னும் உங்கள் தேவை அத்தனைக்கும் கீழ்க்கண்ட இடங்களை அணுகுங்கள்

## கதர் கைத்தொழில் அங்காடி (குறளகம்)

(சென்னை எஸ்பிளனேடு — சட்டக்கல்லூரிக்கெதிரில்)

**கதர் கைத்தொழில் அங்காடி, அண்ணா சாலை, சென்னை. திருச்சி மற்றும் கோவை.**

**கதர் கிராமத் தொழில் விற்பனை நிலையங்கள் (தமிழகமெங்கும்)**

நம்நாட்டு விவசாயிகள் கிராமவாசிகளின் நலமுயர்த்தும் இப்பொருள்களை வாங்குவது நமது மக்களுக்கு நாம் ஆற்றும் பணியாகும்.

**உண்மையான நாட்டுப் பற்றுக்கு அதுவே உகந்த வழி**

வெளியீடு: — தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், சென்னை-1.

"பேரறிஞர் அண்ணு அவர்களின்
65-ம் பிறந்தநாளன்று
எங்கள் நினைவு அஞ்சலி"

MALCO
மதருஸ் அலுமினியம் கம்பேனி லிமிடேட்,

"ஜெய லக்ஷ்மி" ரேஸ்கோர்ஸ், கோயம்பத்தூர்-18.
தொழிற்கூடம்: மேட்டூர் அணை

தந்தி : "வேல்நூல்". தொலைபேசி எண் : 1101

தரமான உயர்ந்தரக பாவு நூல்களுக்கு

# "வேல் நூல்"

40நெ, 60நெ, 100நெ, 2/60நெ, மற்றும் 2/80நெ. கார்பெட்
மற்றும் கோர்படு வகை நூல்கள்.

தயாரிப்பாளர்கள் :

## வட ஆற்காடு மாவட்ட கூட்டுறவு நூற்பு ஆலை லிட்.,

அஞ்சல்பெட்டி எண். 201,

அரியூர், வேலூர்-2.

எ.எல்.சி.கிருஷ்ணசாமி, எம்.சி, தலைவர்.

எஸ்.வி.இராமநாதன், பி.ஏ., நிர்வகிக்கும் நெறியாளர்.

Regd. No. M. 7436 MURASOLI (Anna Malar 1973)
(Suppliment to Murasoli Issue dt. 15—9—1973)


# சேலம் மத்திய கூட்டுறவு வங்கி எண். 151.

## சேலம்-1.

டெலிபோன் எண்: 2402

கிளைகள்: நாமக்கல், திருச்செங்கோடு, ஆத்தூர், மோகனூர், இராசிபுரம், ஓமலூர், தாரமங்கலம், வேலூர், சங்ககிரி, சேந்தமங்கலம், கொங்கணபுரம், சிறப்பு அங்காடி, சேலம்கடைவீதி, எடப்பாடி, பி. கொமாரபாளையம், பள்ளிபாளையம் தம்மம்பட்டி, ஜலகண்டாபுரம், ஆட்டையாம்பட்டி, செவ்வாய்ப்பேட்டை, சேலம்–2 பெத்தநாய்க்கன்பாளையம், மேட்டூர்டேம், நாமகிரிப்பேட்டை, ஏற்காடு, வாழப்பாடி, கொண்டாலம்பட்டி, மகுடஞ்சாவடி, எளம்பிள்ளை.

## வட்டி விகித அட்டவணை 1-2-1971 முதல்

### கால் டெபாசிட்டுகள் :

| | |
|---|---|
| ரூ. 5,000–க்கும் அதற்கு மேலும் மேற்பட்ட தொகைக்கும் (முன் அறிவிப்பு இல்லாமல்) | 3¼% |
| ரூ. 10,000க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் (3 நாள் முன் அறிவிப்பின்பேரில்) | 3½% |

### சீசன் டெபாசிட்டுகள் :

ரூ. 1,000க்கும் அதற்கு மேலும்

| | |
|---|---|
| 15 நாட்களுக்கும் அதற்கு மேல் 30 நாட்களுக்கும் | 4% |
| 31 நாட்களுக்கும் அதற்கு மேல் 90 நாட்களுக்கும் | 4½% |

### பிக்சட் டெபாசிட்டுகள் :

ரூ. 50-ம் அதற்கு மேற்பட்ட பிக்சட் டெபாசிட்டுகளுக்கு:

| | |
|---|---|
| 91 நாட்களுக்கும் அதற்கு மேல் 6 மாதத்திற்குள் | 5½% |
| 6 மாதத்திற்கும் அதற்குமேல் 12 மாதத்திற்குள் | 6% |
| 12 மாதத்திற்கும் அதற்குமேல் 24 மாதத்திற்குள் | 6¾% |
| 24 மாதத்திற்கும் அதற்குமேல் 36 மாதத்திற்குள் | 7¼% |
| 36 மாதத்திற்கும் அதற்குமேல் 60 மாதத்திற்குள் | 7½% |
| 5 வருடத்திற்கும் அதற்குமேல் 6 வருடத்திற்குள் | 7¾% |
| 6 வருடங்களுக்கும் அதற்குமேலும் | 8 % |
| நடப்பு கணக்கு ½% சேமிப்பு கணக்கு | 4½% |

அறநிலையங்களுக்கு பிக்சட் டெபாசிட்டுகளின் பேரில் மேலே காணப்பட்ட வட்டி விகிதங்களுக்கு மேற்கொண்டு ½% கூடுதலாக கொடுக்கப்படும். ரூ. 5000-க்கு மேற்கொண்டு பிக்சட் டெபாசிட் போடுகிறவர்களுக்கு இலவச பாதுகாப்புப் பெட்டக வசதி உண்டு.

பிக்சட் டெபாசிட்டுகளின் மீது மாதந்திர வட்டி உண்டு.

ரெகரிங், பிராவிடெண்ட் டெபாசிட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இதர விவரங்களுக்கு செயலாளரிடம் தொடர்பு கொள்க.

**எஸ். ஆறுமுகம், M.L.A.** தலைவர்,

**வை. இராமலிங்கம்,** செயலாளர்

**தி. இராஜமாணிக்கம்,** நிர்வாக அலுவலர்.


அஞ்சுகம் பதிப்பகத்திற்காக முரசொலி அச்சகத்தில் ஆசிரியர் மாறனால் அச்சிடப்பட்டு 4-128 அண்ணாசாலை, சென்னை-600006 லிருந்து வெளியிடப்படுகிறது.